# 3. பொதுவியல்

பொதுவியல் என்பது முன்னர்க் கூறிய பெயர், வினைச் சொற்களுக்கும் பின்னர்க் கூறப் போகின்ற இடை, உரிச்சொற்களுக்கும் உரிய பொதுவான இலக்கணத்தைக் கூறும் இயல். ஆதலின் பொதுவியல் எனப் பெயர் பெற்றது. இது ஐந்து இயல்களின் நடுவாக அமைந்தது. முன் இரு இயல்களையும் பின் இரு இயல்களையும் அரிமா நோக்காகத் தழுவி நிற்கிறது. இவ்இயல் 68 நூற்பாக்களைக் கொண்டு விளங்குகிறது.

**ஒன்றொழி பொதுச்சொல்**

352. இருதிணை ஆண்பெணுள் ஒன்றனை ஒழிக்கும்
பெயரும் வினையும் குறிப்பி னானே.

[இ-ள்] உயர்திணை, அஃறிணை ஆகிய இரு திணையிலும் ஆண், பெண் பால்களுக்குப் பொதுவாகிய பெயர்ச்சொற்களும், வினைச்சொற்களும் குறிப்பினால் ஒரு பாலை ஒழித்து மற்றொரு பாலை உணர்த்தும். (இதுவே ஒன்றொழி பொதுச்சொல் ஆகும்). [எ-டு]

1. ஆயிரம் மக்கள் **போர்** புரிந்தனர்
   இத்தொடரில் மக்கள் என்பது உயர்திணைப் பொதுப்பெயர். புரிந்தனர் என்பது இருதிணைப் பொதுவினை **போர்** என்னும் குறிப்பினால் மக்கள் என்னும் பெயர் பெண்பாலை ஒழித்து ஆண்பாலை உணர்த்தியது.
2. பெருந்தேவி **பொறை உயிர்த்த** (கரு உயிர்த்த) கட்டிலின் கீழ் நால்வர் மக்கள் உளர்.
   இத்தொடரில் மக்கள் - பொதுப்பெயர்; உளர் - பொதுவினை. பொறை உயிர்த்தல் என்னும் குறிப்பால் ஆண்பாலை நீக்கியது.
3. இப்பெற்றங்கள் (மாடுகள்) **உழவு** ஒழிந்தன.
   இத்தொடரில் பெற்றங்கள் - அஃறிணைப் பொதுப்பெயர்; ஒழிந்தன - பொதுவினை. உழவு என்னும் குறிப்பால் ஆண்பாலை (எருது) உணர்த்திப் பெண்பாலை நீக்கியது.
4. இப் பெற்றங்கள் **பால்** சொரிந்தன.
   இத்தொடரில் அமைந்த பால் என்னும் குறிப்பு ஆண்பாலை நீக்கிப் பெண்பாலைக் (பசு) காட்டியது.

**செய்யுளில் பெயர், வினையின் ஈற்றயல் திரிதல்**

353. பெயர்வினை இடத்து னளரய ஈற்றுஅயல்
ஆஓ ஆகலும் செய்யுளுள் உரித்தே.

[இ-ள்] செய்யுளில் பெயரிடத்தும் வினையிடத்தும் ஈற்றில் அமைந்த ன, ள, ர, ய என்னும் எழுத்துக்களுக்கு முன் உள்ள ஆகாரம் ஓகாரமாகத் திரியும். [எ-டு]

Scanned by CamScanner

Scanned with CamScanner

| | | | |
|---|---|---|---|
| ன் | - வில்லான் | -வில்லோன் | பெயர்ச் சொற்களின் ஈற்றயல் ஆ, ஓ ஆகியது |
| ள் | - தொடியாள் | -தொடியோள் | |
| ர் | - நல்லார் | -நல்லோர் | |
| ய் | - கொடுத்தாய் | -கொடுத்தோய் | |

| | | | |
|---|---|---|---|
| ன் | - படைத்தான் | -படைத்தோன் | வினைச் சொற்களின் ஈற்றயல் ஆ, ஓ ஆகியது. |
| ள் | - பெயர்த்தாள் | -பெயர்த்தோள் | |
| ர் | - வந்தார் | -வந்தோர் | |
| ய் | - வந்தாய் | -வந்தோய் | |

**உருபும் விகுதிகளும் எதிர்மறையில் திரியாமை**

354. உருபும் வினையும் எதிர்மறுத்து உரைப்பினும்
திரியாது தத்தம்ஈற்று[1] உருபின்[2] என்ப.

[இ-ள்] எட்டு வேற்றுமை உருபுகளும் மூவகை வினைச்சொற்களும் (முற்று, பெயரெச்சம், வினையெச்சம்) எதிர்மறுத்துக் கூறும் போதும் 1. தத்தம் ஈற்றினின்றும் வேறுபடா 2. அவ்வவ் உருபினின்றும் வேறுபடா என்று சொல்லுவர் புலவர். [எ-டு]

| உடன்பாடு | எதிர்மறை | |
|---|---|---|
| சாத்தான் வருவான் | → சாத்தான் வாரான் | வேற்றுமை உருபுகள் எதிர்மறையில் மாறவில்லை |
| குடத்தை வனைந்தான் | → குடத்தை வனையான் | |
| வாளால் வெட்டினான் | → வாளால் வெட்டான் | |
| புலவர்க்குக் கொடுப்பான் | → புல்லர்க்குக் கொடான் | |
| ஊரின் நீங்கினான் | → குணத்தின் நீங்கான் | |
| பொருளினது உண்மை | → செயலினது இன்மை | |
| நல்லவர்கண் சேர்வான் | → தீயார்கண் சேரான் | |
| நண்பா! போ | → தம்பீ! போகேல் | |

| | |
|---|---|
| நடப்பான்-ஆன்-நடவான் | விகுதிகள் வினைச்சொற்களில் மாறுபடாமல் நின்றன |
| நடந்து-து-நடவாது | |
| நடக்குங்கால்-கால்-நடவாக்கால் | |

| | | |
|---|---|---|
| செய்ய → செய்யாமல், செய்யாது, செய்யாமை | வினையெச்சம் | எதிர்மறையில் ஈறு திரிந்து நின்றன |
| நடத்தல்-நடவாமை → | தொழிற்பெயர் | |
| உண்ணாய், உண்ணேல், உண்ணாதே | ஒருமை ஏவல் | |

**உருபும் வினையும் அடுக்கி முடிதல்**

355. உருபுபல அடுக்கினும் வினைவேறு அடுக்கினும்
ஒருதம் எச்சம் ஈறுஉற முடியும்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

[இ-ள்] எட்டு வேற்றுமை உருபுகளும் 1. வெளிப்பட்டும் 2. மறைந்தும் பல அடுக்கியும் வரும் 3. மூவகை வினைச்சொற்களும் வெவ்வேறு பல அடுக்கியும் வரும். ஆயினும் தாம் தாம் கொண்டு முடியும் சொல் ஒன்று இறுதியில் வர முடியும். [எ-டு]

1. (அ) கோட்டை நுனிக்கண் பொருட்கு வாளால் குறைத்தான்.
இதில் 2, 7, 4, 3 ஆகிய நான்கு உருபுகள் கலந்து அடுக்கிக் குறைத்தான் என்னும் வினையைக் கொண்டு முடிந்தன.

ஆ) சாத்தனையும் கொற்றனையும் வாழ்த்தினான் } ஐ உருபு பல அடுக்கி ஒரு வினை கொண்டது.

இ) சாத்தனுக்கும் கொற்றனுக்கும் தந்தை } கு உருபு பல அடுக்கி ஒரு பெயர் கொண்டது.

2. அ) கோல் கைக் கொண்டான் → உருபு தொக்கு வினை கொண்டது

ஆ) அருள் அறம் உடையவன் → உருபு தொக்குப் பெயர் கொண்டது.

3. அ) ஆடினான் பாடினான் சாத்தன் → வினைமுற்றுக்கள் அடுக்கிப் பெயர் கொண்டன.

ஆ) இளையள் மெல்லியள் மடந்தை → குறிப்பு வினை அடுக்கிப் பெயர் கொண்டது.

இ) கற்ற கேட்ட பெரியோர் → தெரிநிலைப் பெயரெச்சம் பல அடுக்கிப் பெயர் கொண்டது.

ஈ) நெடிய பெரிய காது → குறிப்புப் பெயரெச்சம் பல அடுக்கிப் பெயர் கொண்டது.

உ) கற்றுக் கேட்டு அறிந்தார் → தெரிநிலை வினையெச்சம் வேறு பல அடுக்கி வினை கொண்டது.

ஊ) விருப்பின்றி வெறுப்பின்றி வாழ்ந்தார் → குறிப்புப் பெயரெச்சம் வேறு பல அடுக்கி வினை கொண்டது.

## இடைப்பிறவரல்

தொடர்களில் வேற்றுமை உருபேற்ற பெயர் முதலானவை நிலைமொழியாய் நிற்கும். அவற்றுக்கும் அவை கொண்டு முடிகின்ற சொற்களுக்கும் இடையில் பொருந்துவனவாகிய பிற சொற்கள் வரும். அவை இடைப்பிறவரல் எனப்படும். இடையில் பிற வருதலால் இடைப்பிறவரல் என்பது காரணப் பெயர் ஆகும்.

### இடைப்பிறவரலின் இலக்கணம்

356. உருபு[1] முற்று[2]ஈர் எ ச்சம்[4] கொள்ளும்
பெயர்வினை இடைப்பிற வரலுமாம் ஏற்பன.

[இ-ள்] 1. எட்டு வேற்றுமை உருபுகளும் 2. வினைமுற்றுக்களும் 3. பெயரெச்சம் 4. வினையெச்சங்களும் பெயர்ச்சொற்களையும் வினைச்சொற்களையும் கொண்டு முடியும். நடுவில் அவ்வவ் இடத்திற்குப் பொருந்துவனவாகிய பிற சொற்கள் வருதலும் உண்டு. [எ-டு]

Scanned by CamScanner
Scanned with CamScanner

| நிலைமொழி | இடைப்பிறவரல் | முடியும்சொல் | தொடர் |
|---|---|---|---|
| 1.சாத்தன் | (வயிறார) | உண்டான் | எழுவாய் |
| 2.அறத்தைச் | (அழகுபெறச்) | செய்தான் | 2-ஆம் வேற்றுமை |
| 3.வாளால் | (மாய) | வெட்டினான் | 3-ஆம் வேற்றுமை |
| 4.வந்தான் | (ஊர்க்குப்போன) | சாத்தன் | வினைமுற்று |
| 5.வந்த | (அவ்வூர்ச்) | சாத்தன் | பெயரெச்சம் |
| 6.வந்து | (ஊர்க்குப்) | போயினான் | வினையெச்சம் |

வருமொழியுடன் ஏலாத (பொருந்தாத) சொற்கள் இடைப்பிறவரலாக வாரா. **'கருதலர்ச் சீறிய கடுங்கொல் யானை'** என்பதில் கடும் என்பது மட்டுமே இடைப்பிறவரல் **'வல்லம் எறிந்த நல்லிளங் கோசர் தந்தை மல்லல் யானைப் பெருவழுதி'** என்பதில் வல்லம் எறிதல் பெருவழுதிக்கும் கோசர்க்கும் உரியதாகி இரண்டு பக்கமும் பொருந்தித் துணிவு தோன்றாது நிற்கிறது. எனவே இது போன்று பொருந்தாச் சொற்களும் இடையில் வாரா.

**முடிக்கும் சொற்கள் நிற்கும் இடம்**

*357. எச்சப் பெயர்வினை எய்தும் ஈற்றினும்.*

[இ-ள்] வேற்றுமை உருபுகளும் வினைமுற்றுக்களும் எச்சங்களும் பெயர், வினைகளைக் கொண்டு முடியும். அப்பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும் அவ்வேற்றுமை உருபு முதலானவற்றிற்கு இறுதியிலும் வரும்.

இறுதியிலும் வரும் என்றதால் முதலில் வருதலையும் கொள்ள வேண்டும். [எ-டு]

| ஈற்றில் வருதல் | முதலில் வருதல் |
|---|---|
| சாத்தன் **வந்தான்** | **வந்தான்** சாத்தன் |
| மரத்தைக் **குறைத்தான்** | **குறைத்தான்** மரத்தை |
| சாத்தனால் **வந்தான்** | **வந்தான்** சாத்தனால் |
| எனக்குத் **தந்தான்** | **தந்தான்** எனக்கு |
| ஊரின் **நீங்கினான்** | **நீங்கினான்** ஊரின் |
| சாத்தனது **ஆடை** | ------------- |
| மணியில் **ஒளி** | ------------- |
| சாத்தா **வா** | **வா** சாத்தா |

வந்தான் சாத்தன் சாத்தன் வந்தான் → முற்று

வந்து போயினான் போயினான்வந்து → வினையெச்சம்

ஆடை சாத்தனது → (ஆறாம் வேற்றுமை உருபு)

ஒளி மணியில் → (ஏழாம் வேற்றுமை உருபு) } என முதலில் வாரா

சாத்தன் வந்த → (பெயரெச்சம்) என மாறி வராது.

Scanned by CamScanner
Scanned with CamScanner

## இனங்குறித்தல்

நால்வகைச் சொற்களாகிய பெயர், வினை, இடை, உரி ஆகியவற்றுள் ஒருசொல் நின்று தன்னை உணர்த்துவதோடு தன் இனத்தையும் தழுவிப் பொருள் தரும். இதனை இனங்குறித்தல் என்பர். இது வடமொழியில் உபலட்சணம் எனப்படும்.

**தன் இனத்தை உணர்த்தும் ஒருமொழிகள்**

358. ஒருமொழி ஒழிதன் இனம்கொளற்கு உரித்தே.

[இ-ள்] ஒருசொல் தன்னை உணர்த்துவதோடு ஒழிந்து நின்ற தன் இனங்களையும் தழுவிக் கொள்வதற்கு உரியதாகும். [எ-டு]

1. **சோற்றை நனி உண்டான்** என்று கூறும்போது அதற்கினமாகிய காய்கறி போன்றவற்றை நனிதின்றான் எனக்கூறாமலேயே விளங்குகிறது. இதில் சோறு என்னும் பெயர்ச்சொல்லும் ஐ என்ற உருபிடைச் சொல்லும் கறி என்னும் பெயர்ச் சொல்லையும் ஐ என்ற உருபிடைச் சொல்லையும் தழுவுதற்கு உரியனவாய் நின்றன.
2. **வெற்றிலை தின்றான்;** இது பாக்கு, சுண்ணாம்பு ஆகியவற்றையும் தின்றான் என இனம் தழுவியது.
3. **நஞ்சுண்டவன் சாவான்** என நின்ற ஆண்பால் பிற பால்களையும் (நஞ்சுண்டவள் சாவாள் . . . . நஞ்சுண்டவை சாம்) தழுவி நின்றது.

**பொதுப்பெயர், பொதுவினைகள் பொதுமை நீக்கும் தன்மை**

359. பொதுப்பெயர் வினைகளின் பொதுமை நீக்கும்
மேல்வரும் சிறப்புப் பெயர்வினை தாமே.

[இ-ள்] திணை, பால், இடம், காலம் ஆகியவற்றுக்குப் பொதுவான பெயர்களும் வினைகளும் உள. அவற்றை அடுத்து வரும் சிறப்பாகிய பெயர்வினைகள் பொதுத்தன்மையை நீக்கி ஒன்றுக்கு உரிமைப்படுத்தும். [எ-டு]

**பொதுப்பெயர்**

| | |
|---|---|
| சாத்தன் **இவன்**<br>சாத்தன் **இது** | பெயர், திணைப்பொதுமையைப் பின் வந்த சிறப்புப் பெயர் நீக்கி ஒரு திணைக்கு உரிமை செய்தது. |
| சாத்தன் **வந்தான்**<br>சாத்தன் **வந்தது** | பெயர்,திணைப் பொதுமையைப் பின் வந்த சிறப்பு வினை நீக்கி ஒரு திணைக்கு உரிமை செய்தது |
| ஒருவர்என் **தாயர்**<br>ஒருவர்என் **தந்தையார்** | பெயர், பால் பொதுமையைப் பின் வந்த சிறப்புப் பெயர் நீக்கி ஒரு பாலுக்கு உரிமை செய்தது |

Scanned by CamScanner
Scanned with CamScanner

| | | |
|---|---|---|
| மரம் **வளர்ந்தது** <br> மரம் **வளர்ந்தன** | } | பெயர், பால் பொதுமையைப் பின் வந்த சிறப்புவினை நீக்கி ஒரு பாலுக்கு உரிமை செய்தது |
| யாமெல்லாம் **வருவோம்** <br> நீரெல்லாம் **வருவீர்** <br> அவரெல்லாம் **வருவார்** | } | பெயர், இடப் பொதுமையை முன் வந்த சிறப்புப்பெயரும் பின் வந்த சிறப்பு வினையும் நீக்கி ஓரிடத்துக்கு உரிமை செய்தன. |

## எச்சங்கள்

குறைந்து நிற்கும் வினைச்சொல் எச்சமாகும். இது பத்து வகைப்படும். இவற்றைச் சொல்லெச்சம், குறிப்பெச்சம் என்னும் இரண்டனுள் அடக்கலாம்.

### எச்சங்களும் [10] அவற்றின் முடிபுகளும்

360. பெயர்[1] வினை[2] உம்மை[3] சொல்[4] பிரிப்பு[5] என[6] ஒழியிசை[7]
எதிர்மறை[8] இசை[9] எனும் சொல்லொழிபு ஒன்பதும்
குறிப்பும்[10] தத்தம் எச்சம் கொள்ளும்.

[இ-ள்] 1. பெயர் 2. வினை 3. உம்மை 4. சொல் 5. பிரிநிலை 6. என 7. ஒழியிசை 8. எதிர்மறை 9. இசை என்னும் சொல்லெச்சங்கள் ஒன்பதாகும். 10. குறிப்பெச்சம் ஒன்றாகும். இவை பத்தும் தத்தமக்குரிய எச்சச் சொற்களைக் கொண்டு முடியும்.

இப்பத்துள் பெயரெச்சம், வினையெச்சம், எனவென் எச்சம் என்னும் மூன்றில் மட்டுமே எச்சச் சொற்கள் தொடர்களில் வெளிப்பட்டு நிற்கும். பிறவற்றில் எச்சச் சொற்கள் வருவித்து உரைக்கப்படும்.

1. **பெயரெச்சம்** : பெயரைக் கொண்டு முடிவது பெயரெச்சம் ஆகும். [எ-டு]
செய்த சாத்தன் → தெரிநிலை; நல்ல சாத்தன் → குறிப்பு
2. **வினையெச்சம்** : வினையைக் கொண்டு முடிவது வினையெச்சம் ஆகும்.
(எ-டு) சென்று வீழ்ந்தான் → தெரிநிலை; மெல்ல வந்தான் → குறிப்பு
3. **உம்மையெச்சம்** : உம் என்பது நடந்ததையோ நடக்கப் போவதையோ வெளிப்படுத்துவது உம்மையெச்சமாகும். [எ-டு]
சாத்தனும் வந்தான். முன்னே கொற்றனும் வந்தான். (அ) பின்னர்க் கொற்றனும் வருவான் எனத் தன்னெச்சத்தைக் கொண்டது.
4. **சொல்லெச்சம்** : சொல் என்னும் இடைச்சொல் எஞ்சி நிற்பது சொல்லெச்சம் ஆகும். [எ-டு]
கடியென்றார் (நீக்கென்றார்) கடி என்று சொன்னார் என ஒரு சொல் எஞ்சியது.
5. **பிரிநிலை எச்சம்** : பிரிக்கப் பட்ட பொருளைத் தருவது பிரிநிலை எச்சமாகும். [எ-டு]
அவனே கொண்டான் - பிறர் கொண்டிலர் எனத் தன்னெச்சம் கொண்டது.

Scanned by CamScanner

Scanned with CamScanner

6. **எனவென் எச்சம்** : தனக்குரிய வினையைக் கொண்டு முடிவதே எனவென் எச்சமாகும். [எ-டு]
கடல் ஒல்லென ஒலித்தது - என என்னும் எச்சம் தன்வினையான ஒலித்தது என்பதைக் கொண்டு முடிந்தது.

7. **ஒழியிசை எச்சம்**: ஒழிந்த பொருளைத் தருவது ஒழியிசை எச்சமாகும். [எ-டு]
படிப்பதற்கோ வந்தான். இது விளையாட வந்தான் என ஒழிந்த பொருளைக் கொண்டு முடிந்தது.

8. **எதிர்மறை எச்சம்** : எதிர்மறைப் பொருளைத் தருவது எதிர்மறை எச்சமாகும். [எ-டு]
யானோ செய்தேன் - செய்யவில்லை என எதிர்மறைப் பொருளைக் கொண்டு முடிந்தது.

9. **இசை எச்சம்** : தொடரில் அமைந்த சொற்களை இடத்திற்கு ஏற்ப வேண்டியன தந்து அகல உரை கூற வேண்டி நிற்பது இசை எச்சமாகும். [எ-டு]
1. கற்றதனால் ஆய பயனென் கொல் என்றவிடத்து நூலைக் கற்றதனால் என ஒரு சொல்லை வருவித்து உரைக்க வேண்டும்.
2. அம்தாமரை அன்னமே நின்னையான் அகன்று ஆற்றுவேனோ? என்றவிடத்து என் உயிரினும் சிறந்த நின்னை எனப் பல சொற்கள் வருவித்து உரைக்க வேண்டும்.

10. **குறிப்பு எச்சம்** : பொருளைக் குறிப்பால் உணர்த்துவது குறிப்பு எச்சமாகும். அது ஒன்றொழி பொதுச்சொல் முதலாகக் கூறப்பட்ட ஒன்பதுமாம். [எ-டு]
ஆயிரம் மக்கள் பொருதார் → மக்கள் என்னும் பொதுப்பெயர் பொருதார் என்னும் வினையால் ஆண்பாலைக் குறித்தது.

## தொகைநிலைத் தொடர்மொழி (ELLIPTICAL COMPOUNDS)

சொற்கள் ஒன்றோடு ஒன்று பொருள் பொருத்தமுறத் தொடர்வது தொடராகும். அது 1. தொகை நிலைத் தொடர் 2. தொகா நிலைத் தொடர் என இருவகைப்படும். இவற்றுள் தொகைநிலைத் தொடர் என்பது இருசொற்களுக்கு இடையில் வேற்றுமை முதலியவற்றின் உருபுகள் மறைந்து வருதலைக் குறிக்கும்.

### தொகைநிலைத் தொடர்மொழிகளின் இலக்கணம்

361. பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை
முதலிய பொருளின் அவற்றின் உருபிடை
ஒழிய இரண்டு முதலாத் தொடர்ந்துஒரு
மொழிபோல் நடப்பன தொகைநிலைத் தொடர்ச்சொல்.

Scanned by CamScanner

Scanned with CamScanner

[இ-ள்] பெயர்ச்சொல்லோடு பெயர்ச் சொல்லும் பெயர்ச் சொல்லோடு வினைச்சொல்லும் கூடி வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை, அன்மொழி என்னும் அறுவகைப் பொருட் புணர்ச்சியை அடையும். அவ்விடத்து வேற்றுமை முதலியவற்றின் உருபுகள் இடையே மறைந்து நிற்க இரண்டு முதலிய பல சொற்கள் தொடர்ந்து ஒரு மொழிபோல் நடப்பன தொகைநிலைத்தொடர் ஆகும்.

**தொகைகளின் வகைகள் [ 6 ]**

362. வேற்றுமை[1] வினை[2] பண்பு[3] உவமை[4] உம்மை[5]
அன்மொழி[6] எனஅத் தொகைஆறு ஆகும்.

[இ-ள்] தொகைநிலைத் தொடர்மொழிகள் 1. வேற்றுமைத் தொகை 2. வினைத்தொகை 3. பண்புத்தொகை 4. உவமைத் தொகை 5. உம்மைத்தொகை 6. அன்மொழித் தொகை என அறுவகைப்படும்.

**வேற்றுமைத் தொகையின் இலக்கணம்**

363. இரண்டு முதலாம் இடைஆறு உருபும்
வெளிப்படல் இல்லது வேற்றுமைத் தொகையே.

[இ-ள்] எழுவாய் வேற்றுமைக்கும் விளி வேற்றுமைக்கும் இடையில் நிற்கும் ஐ முதலான ஆறு வேற்றுமை உருபுகளும் வெளிப்படாமல் மறைந்து நிற்கும் தொடர்மொழிகள் வேற்றுமைத் தொகையாம். [எ-டு]

1. நிலம் கடந்தான் (நிலத்தைக் கடந்தான்) — 2 ஆம் வே. தொகை
2. தலை வணங்கினான் (தலையால் வணங்கினான்) — 3 ஆம் வே.தொகை
3. கொற்றன் மகன் (கொற்றற்கு மகன்) — 4 ஆம் வே. தொகை
4. ஊர் நீங்கினான் (ஊரின் நீங்கினான்) — 5 ஆம் வே. தொகை
5. சாத்தன் கை (சாத்தனது கை) — 6 ஆம் வே. தொகை
6. குன்றக் கூகை (குன்றத்தின் கண் கூகை) — 7 ஆம் வே.தொகை

யானைக் கோட்டு நுனி குறைத்தான் → பன்மொழித்தொடர்.

1. இத்தொகை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகையாகவும் வரும். [எ-டு] அரிசிக்கடை (அரிசியை விற்கும் கடை)

இத்தொடரில் ஐ என்பது உருபு; விற்கும் என்பது பயன் (இணைப்புச்சொல்)

2. இடையில் அன்றி ஈற்றில் உருபு மறைந்து வருவதும் வேற்றுமைத் தொகையாகும். [எ-டு]
கடந்தான் நிலம் (நிலத்தை) → வேற்றுமை உருபு ஈற்றில் மறைந்து நின்றது.

உருபுகள் மறைந்து நிற்பதற்குரிய இடத்தில் மட்டுமே தொகையாக வரும். பொருள் தராத இடங்களில் தொக்கு (மறைந்து) நில்லா. [எ-டு] சாத்தனை அடித்தான். இதில் 'ஐ' உருபு மறைந்து சாத்தன் அடித்தான் எனச் செயப்படுபொருளைத் தரவில்லை. இது போன்ற இடங்களில் தொகை அமையாது. எனவே பொருள்படும் இடத்து மட்டுமே வேற்றுமை உருபுகள் தொக்கு நிற்கும்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

**வினைத்தொகையின் இலக்கணம்**

364. காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை.

[இ-ள்] காலத்தைக் காட்டுகின்ற இடைநிலையும் விகுதியும் மறைந்து நிற்க வினைப்பகுதி மட்டும் பெயரைத் தொடர்ந்து வரின் (பெயரெச்சம்) அது வினைத்தொகை ஆகும். [எ-டு]

நேற்று அடு களிறு - இத்தொடர் இறந்தகால வினைத்தொகை ஆகும். இதனை விரிக்குமிடத்து நேற்று அட்டகளிறு என விரியும்.

ஒரு குறிப்பிட்ட காலத்தைப் பொருந்தாமல் பொதுவாக நிற்பது முக்கால வினைத்தொகை ஆகும். [எ-டு]

கூப்பு கரம்; ஈட்டுபுகழ்; காய்கதிர்; சுடுதீ.

**பண்புதொகையின் இலக்கணம் [ 2 ]**

365. பண்பை விளக்கும் மொழிதொக் கனவும்[1]
ஒருபொருட்கு இருபெயர் வந்தவும்[2] குணத்தொகை.

[இ-ள்] 1. பண்புப் பெயர்க்கும் பண்பை உடைய பொருட் பெயர்க்கும் (பண்போடு, பண்பிக்கு) உள்ள ஒற்றுமையை விளக்குகின்ற ஆகிய என்னும் பண்பு உருபு மறைந்து நிற்பவை 2. ஒரு பொருளுக்குச் சிறப்புப் பெயர், பொதுப்பெயர் என்னும் இரு பெயர்கள் வருதல் ஆகியவை பண்புத்தொகைகளாம். [எ-டு]

1. பண்புத்தொகை வண்ணம், வடிவு, அளவு, சுவை என்னும் பண்புகளைப் பெற்று வரும்.

செந்தாமரை (செம்மையாகிய தாமரை); கருங்குதிரை → வண்ணம்
வட்டக்கல் (வட்டமாகிய கல்); சதுரப்பலகை → வடிவு
ஒருபொருள் (ஒன்றாகிய பொருள்); இருபொருள் → அளவு
இன்சொல் (இனிதாகிய சொல்); துவர்க்காய் → சுவை.

2. ஒரு பொருளுக்கு இருபெயர் (இருபெயரொட்டு) அமைதல். ஆனித்திங்கள் (ஆனியாகிய திங்கள்); முல்லைப்பூ (முல்லையாகிய பூ); சாரைப்பாம்பு (சாரையாகிய பாம்பு).

**உவமைத்தொகையின் இலக்கணம்**

366. உவம உருபுஇலது உவமத் தொகையே.

[இ-ள்] வினை, பயன், மெய், உரு என்பவற்றைப் பற்றி வருகின்ற உவம உருபுகள் மறைந்து நிற்கும் தொடர்மொழிகள் உவமைத் தொகையாகும். [எ-டு]

1. புலிக்கொற்றன் (புலி போலும் கொற்றன்)
குருவி கூப்பிட்டான் (குருவியைப் போலும் கூப்பிட்டான்) } வினை (தொழில்)

2. மழைக்கை (மழை போலும் கை)
கற்பக வள்ளல் (கற்பகம் போலும் வள்ளல்) } பயன்

Scanned by CamScanner
Scanned with CamScanner

துடியிடை (துடி போலும் இடை) } மெய் (வடிவம்)
வேய்த்தோள் (வேய் போலும் தோள்)
கார் கூந்தல் (கார் போலும் கூந்தல்) } உரு (நிறம்)
பவள வாய் (பவளம் போலும் வாய்)
மரகதக் கிளிமொழி - மரகதம் போலும் கிளி போலும் மொழி } பன்மொழித் தொடர்.
இருள் மழைக்கை - இருள் போலும் மழை போலும் கை

**உவம உருபுகள் [ 12 ]**

367. போலப்[1] புரைய[2] ஒப்ப[3] உறழ[4]
மானக்[5] கடுப்ப[6] இயைய[7] ஏய்ப்ப[8]
நேர[9] நிகர[10] அன்ன[11] இன்ன[12]
என்பவும் பிறவும் உவமத்து உருபே.

[இ-ள்] 1. போல 2. புரைய 3. ஒப்ப 4. உறழ 5. மான 6. கடுப்ப 7. இயைய 8. ஏய்ப்ப 9. நேர 10. நிகர 11. அன்ன 12. இன்ன என்பனவும் இவை போன்ற பிறவும் உவம உருபுகளாகும். இவற்றுள் போல முதல் நிகர ஈறாகிய பத்தும் செயவென்னும் வாய்பாட்டு எச்சமாகும். அன்ன, இன்ன என்னும் இரண்டும் பெயரெச்சக் குறிப்புக்கள் ஆகும்.

பிற எனக் கூறியமையால் 1. போல், புரை என ஈறு திரிந்து வருவனவற்றையும் 2. பொருவ, ஏற்ப, அனைய, இகல, எதிர, சிவண, மலைய போன்றவற்றையும் கொள்ளல் வேண்டும்.

**உம்மைத் தொகையின் இலக்கணம் [ 4 ]**

368. எண்ணல்[1] எடுத்தல்[2] முகத்தல்[3] நீட்டல்[4]
எனும்நான்கு அளவையுள் உம்இலது அத்தொகை.

[இ-ள்] 1. எண்ணல் அளவை 2. எடுத்தல் அளவை 3. முகத்தல் அளவை 4. நீட்டல் அளவை என்னும் நான்கு அளவைகளால் பொருள்களை அளக்குமிடத்துத் தொடர்கின்ற அளவைப் பெயர்களுள் உம் என்னும் இடைச்சொல் மறைந்து நிற்பவை உம்மைத் தொகைகளாகும். [எ-டு]

ஒன்றே கால் (ஒன்றும் காலும்)
கபில பரணர் (கபிலரும் பரணரும்) } எண்ணல் அளவை
கழஞ்சே கால் (கழஞ்சும் காலும்)
தொடியே கஃசு (தொடியும் கஃசும்) } எடுத்தல் அளவை
கலனே குறுணி (கலனும் குறுணியும்)
நாழி ஆழாக்கு (நாழியும் ஆழாக்கும்) } முகத்தல் அளவை
சாண் அங்குலம் (சாணும் அங்குலமும்)
முழம் சாண் (முழமும் சாணும்) } நீட்டல் அளவை
புலிவில்கெண்டை (புலியும் வில்லும் கெண்டையும்)
சேரசோழபாண்டியர் (சேரனும் சோழனும் பாண்டியனும்) } பன்மொழித் தொடர்

Scanned by CamScanner
Scanned with CamScanner

## அன்மொழித் தொகையின் இலக்கணம்

369. ஐந்தொகை மொழிமேல் பிறதொகல் அன்மொழி.

[இ-ள்] வேற்றுமைத் தொகை முதலிய தொகைகளுக்குப் புறத்தே அவை அல்லாத பிற (மொழிகளாகிய உருபுகள்) மறைந்து வருவன அன்மொழித் தொகையாம்.

(ஐந்து தொகைகளுக்கு உரியவை அல்லாத மொழிகள் மறைந்து நிற்பதால் அன்மொழி என்பது காரணப் பெயராகும்). [எ-டு]

**1. வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை**

அ) பூங்குழல் - பூவை அணிந்த குழலினை உடையாள் (2ஆம் வேற்றுமை)

ஆ) பொற்றொடி- பொன்னால் ஆகிய தொடியினை உடையாள் (3ஆம் வேற்றுமை)

இ) அணி இலக்கணம்-அணிக்கு இலக்கணம் சொன்ன நூல் (4ஆம் வேற்றுமை)

ஈ) பொற்றாலி-பொன்னின் ஆகிய தாலி உடையாள் (5ஆம் வேற்றுமை)

உ) கிள்ளிகுடி-கிள்ளியது குடியிருக்கும் ஊர் (6ஆம் வேற்றுமை)

ஊ) கீழ் வயிற்றுக் கழலை-கீழ் வயிற்றுக்கண் எழுந்த கழலை போல்வான் (7ஆம் வேற்றுமை)

**2. வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை**

அ) தாழ்குழல் (தாழ்ந்த குழலினை உடையாள்) வந்தாள்

ஆ) செறிதொடி (செறிந்த தொடியினை உடையாள்) பார்த்தாள்.

**3. பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை**

அ) ஆண்டகை (ஆண்மையாகிய பண்பை உடையான்) வந்தான்

ஆ) கருங்குழல் (கரிய குழலினை உடையாள்) வந்தாள்.

**4. உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை**

அ) துடியிடை (துடிபோலும் இடையை உடையாள்) சென்றாள்

ஆ) கிளிமொழி (கிளி போலும் மொழியை உடையாள்) பேசினாள்.

**5. உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை**

அ) உயிர்மெய் (உயிரும் மெய்யும் கூடிப் பிறந்த எழுத்து) அறிவான்

ஆ) தகரஞாழல் (தகரமும் ஞாழலும் கலந்த சாந்தணிந்தாள்) சென்றாள்.

இ) மதித்திருமுகப் பூங்குழல் (மதிபோலும் திருமுகத்தினையும் பூவையணிந்த குழலினையும் உடையாள்) கண்டாள் } பன்மொழித் தொடர்

Scanned by CamScanner

Scanned with CamScanner

### தொகைகளில் பொருள் சிறந்து நிற்கும் இடம் [ 4 ]

370. முன்மொழி[1] பின்மொழி[2] பன்மொழி[3] புறமொழி[4]
எனும்நான்கு இடத்தும் சிறக்கும் தொகைப்பொருள்.

[இ-ள்] தொகைநிலைத் தொடர் மொழிகளில் 1. முன் நிற்கும் மொழி 2. பின் நிற்கும் மொழி 3. அனைத்து மொழிகள் இவற்றையே அல்லாமல் 4. புறத்தில் வருகின்ற மொழி என்கின்ற நான்கனுள் ஒன்றில் பொருள் சிறந்து நிற்கும்.

நான்கிடத்தும் எனப் பொதுப்படக் கூறப்பட்டது. ஆயினும் உம்மைத் தொகையில் பல மொழியில் பொருள் சிறக்கும். அன்மொழித் தொகையின் புறமொழியில் பொருள் சிறக்கும். மற்றைய நான்கு தொகையும் இடங்களுக்கு ஏற்ப முன்மொழியிலும் பின்மொழியிலும் பொருள் சிறந்து நிற்கும். [எ-டு]

**முன்மொழி**

| | | |
|---|---|---|
| 1. குடம்வனைந்தான் | - வேற்றுமைத் தொகை | முன்மொழிகள் இனம் விலக்கி (நீக்கி) நின்றதால் முன்மொழிகளில் பொருள்சிறந்தன |
| 2. விரிபூ | - வினைத்தொகை | |
| 3. செந்தாமரை | - பண்புத்தொகை | |
| 4. வேங்கைப்பூ | - இருபெயரொட்டு | |
| 5. வேற்கண் | - உவமைத்தொகை | |

**பின்மொழி**

| | | |
|---|---|---|
| 1. நிலம் உழுதான் | - வேற்றுமைத்தொகை | பின் மொழிகளில் பொருள் சிறந்தன |
| 2. சுடுதீ | - வினைத்தொகை | |
| 3. செஞ்ஞாயிறு | - பண்புத்தொகை | |
| 4. புலிப் பாய்ச்சல் | - உவமைத்தொகை | |

**பன்மொழி – உம்மைத்தொகை**

| | |
|---|---|
| 1. இராப்பகல், கபிலபரணர் | அனைத்து மொழிகளிலும் பொருள் சிறந்தன |
| 2. சேரசோழபாண்டியர், புலிவில்கெண்டை | |

**புறமொழி**

தாழ்குழல், பொற்றொடி, பூங்குழல் → அன்மொழித் தொகையின் புறமொழியில் மட்டும் பொருள் சிறந்தன.

### இடத்தொகை, பெயர்த் தொகைகளுக்கு உரிய வேறுபாடு

371. வல்லொற்று வரினே இடத்தொகை ஆகும்[1]
மெல்லொற்று வரினே பெயர்த்தொகை ஆகும்.[2]

[இ-ள்] 1. நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையில் வல்லின மெய் மிகுந்து வரின் (இடப்பொருளில் வரும் ஏழாம்) வேற்றுமைத் தொகையாகும் 2. மெல்லின மெய் இடையில் மிகுந்து வந்தால் பெயர்கள் தொக்க இருபெயரொட்டுப் பண்புத் தொகையாகும். [எ-டு]

Scanned by CamScanner
Scanned with CamScanner

1. வடுகக் கண்ணன் - வடுக நாட்டின்கண் பிறந்த கண்ணன்
துளுவச் சாத்தன் - துளுவ நாட்டின்கண் பிறந்த சாத்தன் } வல்லெழுத்து இடைத்தொகை

2. வடுகங் கண்ணன் → வடுகனாகிய கண்ணன்
வடுகனுக்கு மகனாகிய கண்ணன்
துளுவஞ் சாத்தன் → துளுவனாகிய சாத்தன்
துளுவனுக்கு மகனாகிய சாத்தன் } மெல்லெழுத்துப் பெயர்த்தொகை

இவ்வாறு வல்லெழுத்தோ மெல்லெழுத்தோ வரின் அவ்வெழுத்தைக் கொண்டு தொகைகளின் வேறுபாட்டை அறிய முடியும்.

வடுக நாகன்
வடுக வணிகன்
வடுக அரசன் } என மெய்யெழுத்து மிகா மொழிகளில் சொல்லுவான் குறிப்பால் மட்டுமே பொருள் துணிய முடியும்.

## உம்மைத் தொகைக்குச் சிறப்பு விதி

372. உயர்திணை உம்மைத் தொகைபலர் ஈறே.

[இ-ள்] உயர்திணை ஒருமையில் வருகின்ற உம்மைத் தொகைகள் பலர்பால் விகுதிகளைப் பெற்று முடியும். அவை ரகர ஒற்றும் கள் என்னும் ஈறும் ஆகும். [எ-டு]

கபிலன் பரணன் → கபிலபரணர்
கல்லாடன் மாமூலன் → கல்லாடமாமூலர்
சேரன் சோழன் பாண்டியன் → சேரசோழபாண்டியர் } பலர்பாலில் ரகர ஈற்றைப் பெற்றன

தேவன் தேவி→ தேவன் தேவிகள் → கள் ஈறு பெற்றது.

அஃறிணையிலும் பொதுத்திணையிலும் உம்மைத்தொகைகள் பன்மை விகுதி பெற்றும் பெறாமலும் வரும். [எ-டு]

நன்மை, தீமை → பன்மை விகுதி இன்றி வந்தது
நன்மை தீமைகள் → பன்மை விகுதி பெற்று வந்தது
தந்தை தாய் → பன்மை விகுதி இன்றி வந்தது
தந்தை தாய்கள் → பன்மை விகுதி பெற்று வந்தது.

## தொகைநிலைத் தொடர்மொழிகள் பலபொருள் படுதல்

373. தொக்குழி மயங்குந இரண்டு முதல்ஏழ்
எல்லைப் பொருளின் மயங்கும் என்ப.

[இ-ள்] வேற்றுமை உருபு முதலியவை மறைந்து நிற்கும் தொகை நிலைத் தொடர்மொழிகளை விரித்துப் பொருள் கொள்ளுகின்ற இடத்து அவை ஒரு பொருளே அன்றி இரண்டு முதல் ஏழ் ஈறாகிய பல பொருள்களால் மயங்கும். (இவ்வாறு அமைவது பொருள் மயக்கம் ஆகும்).[எ-டு]

Scanned by CamScanner
Scanned with CamScanner

| | | |
|---|---|---|
| தெய்வ வணக்கம் → | 1. தெய்வத்தை வணங்கும் வணக்கம் | (2ஆம் வே.உ.ப.) |
| | 2. தெய்வத்துக்கு வணங்கும் வணக்கம் | (4ஆம் வே.உ.ப.) |
| தற்சேர்ந்தார் | → 1. தன்னைச் சேர்ந்தார் | (2ஆம் வேற்றுமை) |
| | 2. தன்னொடு சேர்ந்தார் | (3ஆம் வேற்றுமை) |
| | 3. தன்கண் சேர்ந்தார் | (7ஆம் வேற்றுமை) |
| சொல்லிலக்கணம் | → 1. சொல்லினது இலக்கணம் | (6ஆம் வேற்றுமை) |
| | 2. சொல்லுக்கு இலக்கணம் | (4ஆம் வேற்றுமை) |
| | 3. சொல்லின் கண் இலக்கணம் | (7ஆம்வேற்றுமை) |
| | 4. சொல்லினது இலக்கணம்கூறிய நூல் | (அன்மொழி) |
| பொன்மணி | → 1. பொன்னால் ஆன மணி | (3ஆம் வே.உ.ப.) |
| | 2. பொன்னோடு சேர்ந்த மணி | (3ஆம் வே.உ.ப.) |
| | 3. பொன்னாகிய மணி | (இருபெயரொட்டு) |
| | 4. பொன்னின்கண் மணி | (7ஆம் வேற்றுமை) |
| | 5. பொன்னும் மணியும் | (எண்ணும்மை) |
| மரவேலி | → 1. மரத்தைக் காக்கும் வேலி | (2ஆம் வே.உ.ப.) |
| | 2. மரத்தாலான வேலி | (3ஆம் வே.உ.ப.) |
| | 3. மரத்துக்கு வேலி | (4ஆம் வேற்றுமை) |
| | 4. மரத்தின் புறத்து வேலி | (5ஆம் வே.உ.ப.) |
| | 5. மரத்ினது வேலி | (6ஆம் வேற்றுமை) |
| | 6. மரமாகிய வேலி | (இருபெயரொட்டு) |
| சொற்பொருள் | → 1. சொல்லால் அறியப்படும் பொருள் | (3ஆம்வே.உ.ப.) |
| | 2. சொல்லுக்குப் பொருள் | (4ஆம் வேற்றுமை) |
| | 3. சொல்லினது பொருள் | (6ஆம் வேற்றுமை) |
| | 4. சொல்லின்கண் பொருள் | (7ஆம் வேற்றுமை) |
| | 5. சொல்லும் பொருளும் | (எண்ணும்மை) |
| | 6. சொல்லாகிய பொருள் | (இருபெயரொட்டு) |
| | 7. சொல்லானது பொருள் | (எழுவாய்த்தொடர்) |
| புலிகொல் யானை → | இது பன்மொழித் தொடராகும். | |
| | 1. புலியைக் கொன்ற யானை | (2ஆம் வேற்றுமை) |
| | 2. புலியானது கொன்ற யானை | (6ஆம் வேற்றுமை) |
| | 3. புலியால் கொல்லப்பட்ட யானை | (3ஆம் வேற்றுமை) |

## தொகாநிலைத் தொடர்மொழி

(NON-ELLIPTICAL COMPOUNDS)

நிலைமொழி, வருமொழிகளாகிய இருசொற்களின் இடையில் பிறசொற்கள் வெளிப்பட்டு நிற்கும், ஆதலால் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சொற்கள் ஒருமொழித் தன்மையின்றிப் பிளவுபட்டு ஒலிக்கும். அதனைத் தொகாநிலைத் தொடர் என்றும் குறிப்பர். இது ஒன்பதாகப் பாகுபடுத்தப் பட்டுள்ளது.

Scanned by CamScanner

Scanned with CamScanner

**தொகாநிலைத் தொடர்மொழிகளின் வகைகள் [ 9 ]**

374. முற்று[1] ஈர் எச்சம்[3] எழுவாய்[4] விளிப்பொருள்[5]
ஆறுஉருபு[6] இடை[7] உரி[8] அடுக்கு[9] இவை தொகாநிலை.

[இ-ள்] 1. வினைமுற்று 2. பெயரெச்சம் 3. வினையெச்சம் 4. எழுவாய் 5. விளி என்னும் ஐந்து பொருள்களில் பெயரும் வினையும் புணரும் புணர்ச்சி 6. இரண்டு முதல் ஏழ் ஈறாகிய வேற்றுமை உருபுகள் விரிந்து நின்று பெயரும் வினையும் புணரும் புணர்ச்சி 7. இடைச்சொல் புணர்ச்சி 8. உரிச்சொல் புணர்ச்சி 9. ஒரு சொல் அடுக்கி வரும் புணர்ச்சி ஆகிய ஒன்பதும் தொகாநிலைத் தொடர் மொழிகளாகும். [எ-டு]

1. வந்தான் சாத்தான் - தெரிநிலை
நல்லன் சாத்தன் - குறிப்பு } வினைமுற்றுத் தொடர்
2. வந்த பையன் - தெரிநிலை
நல்ல பையன் - குறிப்பு } பெயரெச்சத் தொடர்
3. பார்த்து வந்தான் - தெரிநிலை
மெல்ல வந்தான் - குறிப்பு } வினையெச்சத் தொடர்
4. கண்ணன் வந்தான் → எழுவாயத் தொடர்
5. கண்ணா! வா! → விளித் தொடர்
6. அறத்தைச் செய்தான் - 2 ஆம்
அன்பால் வென்றான் - 3 ஆம்
தமிழுக்குத் தந்தான் - 4 ஆம்
நிலையின் இழிந்தான் - 5 ஆம்
சாத்தனது வீடு - 6 ஆம்
காட்டின்கண் யானை - 7 ஆம் } வேற்றுமைத் தொடர்
7. மற்று ஒன்று கேள் - இடைச்சொல் தொடர்
8. சாலச் சிறந்தது - உரிச்சொல் தொடர்
9. பாம்பு! பாம்பு! - அடுக்குத்தொடர்.

## வழாநிலையும் வழுவமைதியும்

இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சொற்கள் தொடர்ந்து நிற்பது தொடர் ஆகும். அச்சொற்கள் தொடருமிடத்து முடிக்கப்படும் சொற்களோடு முடிக்கும் சொற்கள் மாறுபடாமல் (குற்றமில்லாமல்) நிற்பதே இலக்கண முறையாகும். இது வழாநிலை (GRAMMATICAL EXPRESSIONS) எனப்பெறும். சொற்கள் மாறுபட்டு நிற்பது வழு (DEVIATION) எனக் கூறப்படும். வழுவாயினும் முன்னோரால் ஏற்றுக் கொள்ளப்பட்டவை வழுவமைதி (SANCTIONED DEVIATION) ஆகும்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

## வழுக்களின் வகைகள் [ 7 ]

375. திணையே[1] பால்[2] இடம்[3] பொழுது[4] வினா[5] இறை[6]
மரபாம்[7] ஏழும் மயங்கினாம் வழுவே.

[இ-ள்] 1. இருதிணை 2. ஐம்பால் 3. மூன்று இடங்கள் 4. காலம் 5. வினா 6. விடை 7. மரபு என்னும் ஏழும் தத்தம் நெறியில் இருந்து பிறழ்வதே வழுவாகும். [எ-டு]

1. **திணை வழு**

   ஒரு திணைச்சொல் மற்றொரு திணைச் சொல்லொடு முடிவது.
   அவன் வந்தது → அவன் - உயர்திணை; வந்தது - அஃறிணை

2. **பால் வழு**

   ஒரு பாற்சொல் மற்றொரு பாற்சொல்லோடு முடிவது.
   அவன் வந்தாள் → அவன் - ஆண்பால்; வந்தாள் - பெண்பால்

3. **இட வழு**

   ஓர் இடச்சொல் மற்றோர் இடச்சொல்லோடு முடிவது.
   யான் வந்தான் → யான் - தன்மை; வந்தான் - படர்க்கை

4. **கால வழு**

   ஒரு காலத்தை உணர்த்தும் சொல் வேறொரு காலம் உணர்த்தும் சொல்லோடு முடிவது.
   நாளை வந்தான் → நாளை - எதிர்காலம்; வந்தான் - இறந்தகாலம்

5. **வினா வழு**

   வினவப்படக் கூடாத பொருளை வினவுவது.
   ஒரு விரலைக் காட்டி இது சிறிதோ? பெரிதோ? என்றல்

6. **விடை வழு**

   வினவியதற்குப் பொருத்தமின்றி விடை கூறுதல்.
   கடம்பூர்க்கு வழி யாது? எனக் கேட்க அதற்கு இடம்பூணி என் ஆவின் கன்று அன்று எனல்

7. **மரபு வழு**

   முன்னோர் கூறிய வழக்கிலிருந்து மாறுபட்டுக் கூறுதல்.
   யானை மேய்ப்பானை இடையன் என்றல்; ஆடு மேய்ப்பானைப் பாகன் என்றல்.

## திணை பால்களுடன் வினா விடைகள் வழுவாமல் காத்தல்

376. ஐயம் திணை[1] பால்[2] அவ்வப் பொதுவினும்
மெய்தெரி பொருள்மேல் அன்மையும்[3] விளம்புப.

[இ-ள்] 1. திணையிலும் 2. பாலிலும் ஐயம் தோன்றுவது உண்டு. அவ் இடங்களில் அத்திணைகளுக்கும் பால்களுக்கும் உரிய சிறப்புச் சொல்லால் வினவாது பொதுச்சொல்லால் வினவ வேண்டும் 3. ஐயம் நீங்கி உண்மை தெரிந்த பொருள் மேல் அல்லாத தன்மையை வைத்தும் கூறல் வேண்டுமென உரைப்பர் புலவர். [எ-டு]

Scanned by CamScanner
Scanned with CamScanner

**1. திணையில் ஐயம் வினவுதல்**

குற்றியோ மகனோ எனத் திணையில் ஐயம் தோன்றியவிடத்து அங்குத் தோன்றுகின்ற உரு? என வினவ வேண்டும். இதில் உரு என்பது இருதிணைப் பொதுச்சொல். அதை விடுத்துத் தோன்றுகின்றவன் என உயர்திணைச் சொல்லாலோ தோன்றுகின்றது என அஃறிணைச் சொல்லாலோ வினவின் திணை வழுவும் வினா வழுவும் ஏற்படும்.

**2. பாலில் ஐயம் வினவுதல்**

அ) உயர்திணையில் பால் ஐயம் தோன்றியவிடத்துப் பொதுச்சொல்லால் வினவ வேண்டும். [எ-டு] ஆண் மகனோ பெண் மகளோ அங்கே தோன்றுகின்றவர்? என வினவ வேண்டும். அதை விடுத்துச் தோன்றுகின்றவன், தோன்றுகின்றவள் எனச் சிறப்புப் சொல்லால் வினவின் பால் வழுவும் வினாவழுவும் ஏற்படும்.

ஆ) அஃறிணையில் பால் ஐயம் தோன்றியவிடத்துப் பொதுச்சொல்லால் வினவ வேண்டும். [எ-டு] ஒன்றோ பலவோ இச்செய்புக்க பெற்றம்? (மாடு) இவ்வாறு வினவாமல் பசு, எருது எனச் சிறப்புச் சொல்லால் வினவின் பால் வழுவும் வினா வழுவும் ஏற்படும்.

**3. துணிந்த பொருளைக் கூறும் முறை**

திணையிலும் பாலிலும் ஐயம் நீங்கி உண்மை அறிந்தவிடத்துக்

1. குற்றி என்றால் மகன் அன்று எனவும்
   மகன் என்றால் குற்றி அல்லன் எனவும் கூற வேண்டும்
2. ஆண்மகன் என்றால் பெண்மகள் அல்லன் எனவும்
   பெண்மகள் என்றால் ஆண்மகன் அல்லள் எனவும் கூற வேண்டும்
3. ஒன்று என்றால் பல அன்று எனவும்
   பல என்றால் ஒன்றுஅல்ல எனவும் கூற வேண்டும்

இவ்வாறு துணிவு செய்யப்பட்ட பொருளின் மீது மற்றொன்றின் அல்லாத தன்மையை ஏற்றிக் கூறுதல் வேண்டும்.

**திணை வழுவமைதி**

377. *உயர்திணை தொடர்ந்த பொருள்முதல் ஆறும்*
*அதனொடு சார்த்தின் அத்திணை முடிபின.*

[இ-ள்] உயர்திணை எழுவாயைத் தொடர்ந்து வந்து தானும் எழுவாயாக நிற்கின்ற அஃறிணைப் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகிய ஆறும் உயர்திணையோடு சேர்த்து முடிப்பின் அவ்உயர்திணைக்கு உரிய முடிபைப் பெறும். [எ-டு]

| | | |
|---|---|---|
| நம்பி பொன் பெரியன் | - | பொருள் |
| நம்பி நாடு பெரியன் | - | இடம் |
| நம்பி வாழ்நாள் பெரியன் | - | காலம் |
| நம்பி மூக்குக் கூரியன் | - | சினை |
| நம்பி குடிமை நல்லன் | - | குணம் |
| நம்பி நடை கடியன் | - | தொழில் |

Scanned by CamScanner

Scanned with CamScanner

இவற்றுள் நம்பி என்னும் பெயர் உயர்திணை எழுவாய்; பொன் முதலான ஆறும் அஃறிணை எழுவாய். இவை உயர்திணைக்கு உரிய பயனிலையைக் கொண்டு முடிந்தன.

**தொடர்தலாவது** : அஃறிணைப் பொருள் முதலிய ஆறும் உயர்திணைக்கு உரிமையுடைய பொருள்களாய் நிற்றலாகும்.

**சார்த்தலாவது** : அஃறிணைப் பொருள் முதலியவற்றின் தன்மையை அவற்றை உடைய உயர்திணையின் மேல் ஏற்றிக் கூறுதல்.

கிணறு நீர் ஊறிற்று
மாடு கோடு கூரிது

என்பன அஃறிணையோடு சார்த்திக் கூறப்பட்டதால் அஃறிணை முடிபைப் பெற்றன.

நம்பி பொன் பெரிது என்பது வழாநிலை
நம்பி பொன் பெரியன் என்பது வழுவமைதி

**திணை, பால், மரபு வழுவமைதி [ 3 ]**

378. *திணைபால் பொருள்பல விரவின சிறப்பினும்[1]*
*மிகவினும்[2] இழிபினும்[3] ஒருமுடி பினவே.*

[இ-ள்] திணைகள், பால்கள் வெவ்வேறு வினைகளுக்கு உரிய பல பொருள்கள் தம்முள் கலந்து ஒரு தொடராக அமையும். அவை 1. சிறப்பு 2. மிகுதி 3. இழிபு ஆகியவற்றால் ஒன்றற்குரிய முடிபைப் பெறும். [எ-டு]

**திணை கலந்து வருதல்**

1. சிறப்பு : **திங்களும் சான்றோரும் ஒப்பர்**

திங்கள் - அஃறிணை; சான்றோர் - உயர்திணை. சிறப்பினால் அஃறிணையாகிய திங்கள் ஒப்பர் என்னும் உயர்திணை முடிபைப் பெற்றது.

2. மிகுதி : **பார்ப்பார்[1] தவரே[2] சுமந்தார்[3] பிணிபட்டார்[4]**
**மூத்தார்[5] இளையர்[6] பசுப்[7] பெண்டிர்[8] என்றிவர்கள்**

என்னும் எட்டனுள் பசு ஒன்றே அஃறிணை; எஞ்சிய ஏழும் உயர்திணை. எனவே மிகுந்த எண்ணிக்கையால் இவர்கள் என உயர்திணை முடிபைப் பெற்றன.

3. இழிபு : **மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா**

இத்தொடரில் மூர்க்கன் - உயர்திணை; முதலை - அஃறிணை. இழிபினால் அஃறிணைக்குரிய விடா என்னும் வினை கொண்டு முடிந்தது.

**பால் கலந்து வருதல்**

சிறப்பு : **"தானும் தன் தையலும் தாழ்சடையோன் ஆண்டிலனேல்"**

இத்தொடரில் தையல் (உமாதேவி) பெண்பால்; தாழ்சடையோன் (சிவன்) ஆண்பால். இவ்வாறு விரவி நின்றும் சிறப்பால் ஆண்டிலன் என ஆண்பால் முடிபைப் பெற்றது.

Scanned by CamScanner
Scanned with CamScanner

**பலபொருள் கலந்து வருதல்**

**சிறப்பு : கறியும் சோறும் உண்டான்**

இத்தொடரில் கறி என்பது தின்னற்கு உரியது; சோறு உண்ணற்கு உரியது. எனவே கறி தின்றான்; சோறு உண்டான் என வர வேண்டும். கறியைக் காட்டிலும் சோற்றுக்குத் தலைமைச் சிறப்புண்டு. அக்காரணம் பற்றி உண்டான் என்னும் வினை முடிபு கொண்டது.

**திணை, பால் வழுவமைதி [ 5 ]**

379. உவப்பினும்[1] உயர்வினும்[2] சிறப்பினும்[3] செறலினும்[4]
இழிப்பினும்[5] பால்திணை இழுக்கினும் இயல்பே.

[இ-ள்] 1. மகிழ்ச்சி 2. உயர்வு 3. சிறப்பு 4. சினம் 5. பழிப்பு என்னும் ஐந்து காரணங்களால் பாலும் திணையும் வழுவி வந்தாலும் அவை வழுவமைதி ஆகும். [எ-டு]

1. **மகிழ்ச்சி** : தன் புதல்வனைத் தாய், **என் அம்மை வந்தாள்** எனக் கூறுதல். புதல்வனாகிய ஆண்பால் மகிழ்ச்சியினால் பெண்பாலாகக் கூறப்பட்டது.

2. **உயர்வு** : **அவர் வந்தார்** என ஒருவனைக் கூறுதல். ஒருவன் எனக் கூற வேண்டியது உயர்வின் காரணமாக அவர் எனப் பலர்பாலாகக் கூறப்பட்டது.

3. **சிறப்பு** : மன்னனை **மூவேழ் உலகிற்கும் தாயே** எனக் கூறுதல். ஆண்பாலாகிய மன்னன் இங்குச் சிறப்பின் காரணத்தால் பெண்பாலாகச் (தாய்) சுட்டப்பட்டுள்ளான்.

4. **சினம்** : **எனைத்துணையர் ஆயினும் என்னாம் தினைத்துணையும் தேரான் பிறன்இல் புகல்.**

இக்குறட்பாவில் எனைத்துணையர் என்பது பன்மைப்பால். சினத்தின் காரணமாகத் தேரான் என ஒருமைப் பாலில் கூறப்பட்டது.

5. **இழிவு** : **பெண்வழிச் செல்வானைப் பெண் எனல்.** பெண்ணின் பின்னர்ச் செல்பவன் ஆண். அச்செயல் இழிவானது. எனவே அதன் காரணமாகச் செல்வான் என்னும் ஆண்பால், பெண்பாலாகக் கூறப்பட்டது.

**பால், இட வழுவமைதி**

380. ஒருமையின் பன்மையும் பன்மையின் ஒருமையும்[1]
ஓரிடம் பிறஇடம் தழுவலும்[2] உளவே.

[இ-ள்] 1. ஒன்றன் பாலில் பலவின்பால் சொல்லையும் பலவின் பாலில் ஒன்றன்பால் சொல்லையும் 2. ஓரிடத்தில் பிற இடச்சொல்லையும் தழுவிக் கூறுதலும் உண்டு. [எ-டு]

**1. பால் மயங்குதல்**

**அ] ஒருமைப்பன்மை மயக்கம்**

**வெயில் எல்லாம் மறைத்தது** மேகம் - இத்தொடரில் வெயில் என்பது ஒருமைப்பால்; எல்லாம் என்பது பன்மைப்பாற் சொல். இவை சேர்த்துக் கூறப்பட்டதால் மயக்கமாயின.

Scanned by CamScanner
Scanned with CamScanner

**ஆ] பன்மை ஒருமை மயக்கம்**

**இரண்டு கண்ணும் சிவந்தது** - இத்தொடரில் இரண்டு என்பது பன்மைப்பால். இது சிவந்தது என்னும் ஒருமைப்பாற் சொல் சேர்த்துக் கூறப்பட்டதால் மயக்கமாயிற்று.

**2. இடம் மயங்குதல்**

**அ] தன்மைப் படர்க்கை மயக்கம்**

**சாத்தான் தாய் இவை செய்வலோ** - இது சாத்தனுடைய தாயின் கூற்றாகும். இத்தொடர் சாத்தனின் தாயாகிய யான் எனத் தன்மையில் கூற வேண்டும். அதை விடுத்துத் தாய் எனப் படர்க்கைச்சொல் சேர்த்துக் கூறப்பட்டதால் இது தன்மைப் படர்க்கை மயக்கமாயிற்று.

**ஆ] முன்னிலைப் படர்க்கை மயக்கம்**

**எம்பியை இங்குப் பெற்றேன்.** இது அண்ணனின் கூற்றாகும். இத்தொடரில் தன் தம்பியை முன்னிலைப்படுத்தி அவனை நோக்கி நின்னை எனக் கூற வேண்டும். அதை விடுத்து எம்பியை எனப் படர்க்கைச்சொல் சேர்த்துக் கூறப்பட்டதால் இது முன்னிலைப் படர்க்கை மயக்கமாயிற்று.

**இ] தன்மை, முன்னிலை, படர்க்கை மயக்கம்**

நீயோ அவனோ யாரிது செய்தார் - முன்னிலை, படர்க்கை
யானோ அவனோ யாரிது செய்தார் - தன்மை, படர்க்கை
நீயோ யானோ யாரிது செய்தார் - முன்னிலை, தன்மை
நீயோ அவனோ யானோ யாரிது செய்தார் - முன்னிலை, படர்க்கை, தன்மை.

**இடம் வழுவாமல் காத்தல் [ 4 ]**

381. தரல்[1] வரல்[2] கொடை[3] செலல்[4] சாரும் படர்க்கை;
எழுவாய் இரண்டும் எஞ்சிய ஏற்கும்.

[இ-ள்] 1. தரல் 2. வரல் 3. கொடை 4. செலல் என்னும் இந்நான்கு சொற்களும் படர்க்கையில் வரும். இவற்றுள் முதலில் நின்ற தரல், வரல் என்னும் இரண்டு சொற்களும் தன்மை, முன்னிலைகளை ஏற்கும். [எ-டு]

| | |
|---|---|
| அவனுக்குத் தந்தான்<br>அவனிடத்து வந்தான்<br>அவனுக்குக் கொடுத்தான்<br>அவனிடத்துச் சென்றான் | இவை நான்கும் படர்க்கையைச் சார்ந்து நின்றன |
| எனக்குத் தந்தான்<br>என்னிடத்து வந்தான் | தரல், வரல் தன்மையில் வந்தன |
| உனக்குத் தந்தான்<br>உன்னிடத்து வந்தான் | தரல், வரல் முன்னிலையில் வந்தன. |

Scanned by CamScanner
Scanned with CamScanner

கொடை, செலல் என்பன படர்க்கைக்கே சிறந்தன. எனவே படர்க்கைக்கு உரிமை பூணுதல் வழாநிலையாகும். இவை தன்மை, முன்னிலைக்கு வாரா. வரின் இட வழுவமைதியாகும். [எ-டு]

எனக்குக் கொடுத்தான் → தன்மை
நின்பால் சென்றான் → முன்னிலை

தரலும், வரலும் படர்க்கை இடத்து வருதல் வழுவமைதியாகும் [எ-டு]

பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த → படர்க்கை → தரல்
வருவிருந்து பார்த்திருப்பான் → படர்க்கை → வரல்

இந்நூற்பாவில் கூறப்பட்ட தரல் முதலிய நான்கு சொற்களும் பகுதிகளை உணர்த்தின. இவை தருதல், வருதல், கொடுத்தல், செல்லல் என்னும் தொழிற்பெயர்களாக நிற்கும். தந்தான், வந்தான், கொடுத்தான், சென்றான் என்பன போல வினைகளைத் தோற்றுவிக்கும். எனவே அவ்வினைச் சொற்கள் அனைத்தையும் கொள்ளல் வேண்டும்.

**கால வகைகள் [ 3 ]**

382. இறப்பு[1] எதிர்வு[2] நிகழ்வு[3] எனக்காலம் மூன்றே.

[இ-ள்] முன் சொல்லப்பட்ட காலம் 1. இறந்த காலமும் 2. எதிர் காலமும் 3. நிகழ்காலமும் என மூன்றாம்.

இறப்பு → நடந்ததை உரைப்பது
எதிர்வு → நடக்கப் போவதைக் குறிப்பது
நிகழ்வு → நடந்து கொண்டிருப்பதைக் காட்டுவது

இறப்பு, நிகழ்வு, எதிர்வு எனக் கூறாமல் இறப்பு, எதிர்வு, நிகழ்வு எனக் கூறப்பட்டது. நிகழ்காலம் மற்றைய காலங்களுக்கும் உரியதாகும் தன்மை கருதி முறைமாற்றி உரைக்கப்பட்டது.

**கால வழுவமைதி**

383. முக்கா லத்தினும் ஒத்துஇயல் பொருளைச்
செப்புவர் நிகழும் காலத் தானே.

[இ-ள்] இடைவிடாமல் மூன்று காலங்களிலும் ஒரு தன்மையவாய் நிகழும் பொருள்களை நிகழ்காலச் சொல்லால் சொல்லுவர் புலவர். [எ-டு]

உலகம் சுற்றுகிறது; மலை நிற்கிறது; கடவுள் கொடுக்கின்றார்.

உலகம் நேற்றும் சுற்றியது; இன்றும் சுற்றுகிறது; நாளையும் சுற்றும். எனவே இச்செயலை உலகம் சுற்றுகிறது என நிகழ்காலச் சொல்லால் சொல்ல வேண்டும்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

**காலம் மயங்குதல்**

384. விரைவினும்[1] மிகவினும்[2] தெளிவினும்[3] இயல்பினும்[4]
பிறழவும் பெறூஉம்முக் காலமும் ஏற்புழி.

[இ-ள்] 1. விரைவினாலும் 2. மிகுதியினாலும் 3. தெளிவினாலும் 4. இயல்பினாலும் மூன்று காலங்களுள் ஒன்று மற்றொன்றாக ஏற்கும் இடங்களில் மாற்றிச் சொல்லவும் பெறும். [எ-டு]

**1. விரைவு :** நிகழ்காலமும் எதிர்காலமும் இறந்த காலமாதல்.

உண்ண இருப்பவனை விரைவாக அழைத்துப்போக வேண்டிய மற்றொருவன் உண்ணவில்லையோ? என வினவுவான். அவ்விடத்து விரைவின் காரணமாக உண்ணாமலேயே அவன் **'உண்டேன் உண்டேன்'** எனக் கூறுவான். உண்பவனையும் உண்ணவில்லையோ என வினவிய இடத்து **'உண்டேன் உண்டேன்'** என்று கூறுவான்.

இவ்விடங்களில் விரைவின் காரணமாக எதிர்காலமும் நிகழ்காலமும் இறந்த காலமாகச் சொல்லப்பட்டன.

**2. மிகுதி :** எதிர்காலம் இறந்த காலமாதல்.

**நீ அவனுடன் பகைத்தால் இறந்தாய்.** இத்தொடர் சிறுபான்மை உயிர் தப்பினும் பெரும்பான்மை கொல்லப்படுதலால் மிகுதியாயிற்று. பகைத்தால் என்னும் எதிர்காலம் இறந்தாய் என இறந்த காலமாய் நின்றது.

**3. தெளிவு :** எதிர்காலம் இறந்த காலமாதல்.

**அறம் செய்யின் சுவர்க்கம் புக்கான்.** இத்தொடர் தெளிவின் காரணமாகச் செய்யின் என்னும் எதிர்காலம் புகுந்தான் என இறந்த காலமாய் நின்றது. அறம் செய்தால் சுவர்க்கத்துக்குச் செல்லலாம் என்பது நூல்களைக் கொண்டு தெளிந்தமையின் தெளிவாயிற்று.

**4. இயல்பு :** இறந்தகாலம் எதிர் காலமாதல்.

**யான் முன்னே விளையாடுவது இச்சோலை.** இத்தொடர் வேறொரு காரணம் இன்மையால் இயல்பினால் இறந்த காலம் எதிர்காலமாயிற்று. முன் என்பது இறந்த காலம். விளையாடுவது என்பது எதிர்காலம்.

## வினா

அறிய வேண்டுவதை வெளிப்படுத்துவது வினாவாகும். இவ்வினா பலவகைப்படும்.

**வினாவின் பெயரும் தொகையும் [ 6 ]**

385. அறிவு[1] அறி யாமை[2] ஐயுறல்[3] கொளல்[4] கொடை[5]
ஏவல்[6] தரும்வினா ஆறும் இழுக்கார்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

[இ-ள்] 1. அறிதல் 2. அறியாமை 3. ஐயப்படுதல் 4. வாங்கிக் கொளல் 5. கொடுத்தல் 6. ஏவுதல் ஆகிய அறுவகைப் பொருளையும் தருகின்ற வினாக்களையும் தவறாமல் கொள்வர் புலவர்.

வினவுவோரின் இயல்பையும் நோக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டு வினாக்கள் ஆறாகப் பாகுபடுத்தப் பட்டுள்ளன.

**1. அறிவினா**

தான் அறிந்து கொண்ட ஒரு பொருளைப் பிறர் அறிந்திருக்கிறாரா? என்பதை அறிதற் பொருட்டு வினவுவது. [எ-டு] **இந்நூற்பாவிற்குப் பொருள் யாது?** என ஆசிரியர் மாணவனைக் கேட்டல்.

**2. அறியா வினா**

தான் அறியாத ஒன்றை அறிந்து கொள்ள வினவுவது. [எ-டு] மாணவன், **இதன் பொருள் யாது?** என ஆசிரியரைக் கேட்டல்.

**3. ஐய வினா**

தெளிவின்றி ஐயமாய் இருக்கும் பொருளை வினவுவது. [எ-டு] **குற்றியோ? மகனோ?**

**4. கொளல் வினா**

தான் ஒரு பொருளைக் கொள்வதற்காக அப்பொருளைப் பற்றி வினவுவது. [எ-டு]

**பயறு உளவோ? வணிகரே** எனல்.

**5. கொடை வினா**

தான் ஒரு பொருளைக் கொடுப்பதற்காக அப்பொருள் பற்றிப் பிறரை வினவுவது. [எ-டு]

**சாத்தற்கு ஆடை இல்லையோ?**

**6. ஏவல் வினா**

ஒரு தொழிலைச் செய்யும் படி ஏவுவது. [எ-டு]

**கொற்றா! உண்டாயோ? இல்லையெனில் உண்** என ஏவுதல்.

## விடை அல்லது செப்பு

வினவியதற்கு மறுமொழி கூறுதல் விடை ஆகும். அது 1. செவ்வன் இறை 2. இறை பயப்பது என இரு வகைப்படும். செவ்வன் இறை என்பது நேராக விடை தருவது. இறை பயப்பது என்பது விடையைக் குறிப்பால் தருவது ஆகும்.

**விடையின் பெயரும் தொகையும் [ 3 + 5 = 8 ]**

386. சுட்டு[1] மறை[2] நேர்[3] ஏவல்[4] வினாதல்[5]
உற்றது உரைத்தல்[6] உறுவது கூறல்[7]
இனமொழி[8] எனும்எண் இறையுள் இறுதி
நிலவிய ஐந்தும்அப் பொருண்மையின் நேர்ப.

Scanned by CamScanner
Scanned with CamScanner

[இ-ள்] 1. சுட்டிக் கூறுதல் 2. எதிர் மறுத்துக் கூறுதல் 3. உடன்பட்டுக் கூறுதல் 4. எதிராக ஏவுதல் 5. வினவியதற்கு எதிராக வினவுதல் 6. நேர்ந்ததைச் சொல்லுதல் 7. நேர்வதைச் சொல்லுதல் 8. வினவியதற்கு இனமானதைச் சொல்லுதல் என்பன எட்டும் விடைகளாகும். இவற்றுள் இறுதியில் நிற்கும் ஐந்தும் அவ்விடைப் பொருளைக் குறிப்பால் தரும். ஆயினும் அவற்றையும் விடைகள் எனத் தழுவிக் கொள்ளுவர் புலவர்.

சுட்டு முதலிய மூன்றும் வெளிப்படையாக விடை தருவன. எஞ்சிய ஐந்தும் விடைகளாகக் கொள்ளப்படுவன. இவை குறிப்பால் விடையை உணர்த்துவன. [எ-டு]

**நேர்விடை – வெளிப்படை [ 3 ]**

1. **சுட்டு**
   **வஞ்சிக்கு வழி யாது?** எனில் **இது** எனச் சுட்டிக் காட்டுவது.
2. **மறை**
   **இது செய்வாயோ?** என்பதற்குச் **செய்யேன்** என்று மறுத்துக் கூறுவது.
3. **நேர்**
   **செய்வாயோ?** என்பதற்குச் **செய்வேன்** என உடம்படுவது.

**குறிப்பு விடை [ 5 ]**

1. **ஏவல் : செய்வாயோ?** என்பதற்கு **நீ செய்** எனக் கூறுவது.
2. **வினாதல் : செய்வாயோ?** என்பதற்குச் **செய்வேனோ?** எனக் கூறுவது.
3. **உற்றது உரைத்தல் : உடம்பு நொந்தது** எனக் கூறுவது (நடந்ததைக் கூறுவது)
4. **உறுவது கூறல் : உடம்பு நோவும்** எனக் கூறுவது (இனி நடப்பதைக் கூறுவது)
5. **இனமொழி : மற்றதைச் செய்வேன்** எனக் கூறுவது.

**வினா, விடைகளில் முதல் சினை வழுவாமை**

387. *வினாவினும் செப்பினும் விரவா சினைமுதல்.*

[இ-ள்] வினவும் போதும் விடை கூறும் போதும் சினையும் முதலும் ஒன்றென வைத்து முதலொடு சினையும் சினையொடு முதலும் மயங்கும் படி சொல்லப்படாவாம். [எ-டு]

கண் பிறழ்ந்ததோ? கயல் பிறழ்ந்ததோ?
சாத்தன் நல்லனோ? கொற்றன் நல்லனோ?

இவ்வாறு வினவுமிடத்துக் கண் பிறழ்ந்தது கயல் பிறழ்ந்தது; சாத்தன் நல்லன் கொற்றன் நல்லன் என விடை தருதல் வேண்டும். கண்ணை உடையாளைக் கருதி இவள் பிறழ்ந்தாலோ? கயல் பிறழ்ந்ததோ? என வினவுதலும் இவள் பிறழ்ந்தாள் என விடை கொடுத்தலும் வழுவாம்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

**மரபின் இலக்கணம்**

388. எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே.

[இ-ள்] எந்த ஒரு பொருளை எந்தச் சொல்லால் எம்முறையால் அறிவுடையோர் சொன்னார்களோ அந்தப் பொருளை அச்சொல்லால் அம்முறையில் சொல்லுதலே மரபாகும். [எ-டு]

| | | |
|---|---|---|
| குதிரைக்குட்டி; யானைக்குட்டி<br>யானைக் கன்று; பசுவின் கன்று<br>யானையிலத்தி; மாட்டுச் சாணம்<br>யானைப் பாகன்; ஆட்டு இடையன் | } | மரபு வழாநிலை |
| பசுவின் குட்டி; குதிரைக் குஞ்சு<br>யானைச் சாணம்; ஆட்டுப் பாகன் | } | மரபு வழு |

**மரபு வழாநிலை – வேறுவினைப் பொதுச்சொல்**

389. வேறுவினைப் பல்பொருள் தழுவிய பொதுச்சொலும்
வேறுஅவற்று எண்ணும்ஓர் பொதுவினை வேண்டும்.

[இ-ள்] வேறுவேறு வினையுடையவாய் நின்ற பொருள்களை ஒருவினையால் சொல்லாது பொதுவினையால் சொல்லுதல் வேண்டும். இங்ஙனம் பல்வேறு வினைகளுக்கும் பொதுவாகிய பொருள்களைப் பிரித்து எண்ணிய வழியும் சிறப்பு வினை கூறாது பொதுவினை கொடுத்தல் வேண்டும். [எ-டு]

**அடிசில்** - உண்பன, தின்பன, பருகுவன, நக்குவனவற்றிற்குப் பொது
**அணி** - கவிப்பன, கட்டுவன, செறிப்பன, பூண்பனவற்றிற்குப் பொது
**இயம்** - கொட்டுவன, ஊதுவன, எழுப்புவனவற்றிற்குப் பொது
**படை** - எய்வன, எறிவன, வெட்டுவன, குத்துவனவற்றிற்குப் பொது

எனவே இவற்றைச் சொல்லும் போது பொது வினையால் கூற வேண்டும். [எ-டு]

| | | | |
|---|---|---|---|
| அடிசில் | - அயின்றார், மிசைந்தார் | } | பொதுவினை |
| அணி | - அணிந்தார், மெய்ப்படுத்தார் | | |
| இயம் | - இயம்பினார், படுத்தார் | | |
| படை | - வழங்கினார், தொட்டார் | | |

பிரித்து எண்ணும் போதும் பொதுவினையால் கூற வேண்டும். [எ-டு]
சோறு உண்பதற்கு உரியது; கறி தின்பதற்கு உரியது.
யாழ் இசைப்பதற்கு உரியது. குழல் ஊதுவதற்கு உரியது. இவற்றைச்,

சோறும் கறியும் **அயின்றார்** } பொதுவினை
யாழும் குழலும் **இயம்பினார்**

எனப் பொதுவினை கொடுத்துக் கூறுதல் வேண்டும்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

சோறும் கறியும் தின்றார் } சிறப்புவினை
யாழும் குழலும் ஊதினார்

என ஒன்றற்குரிய சிறப்பு வினையால் கூறுவது வழுவாம்.

சிலநாள் சோறும் (உண்பது) சிலநாள் மாவும் (தின்பது)

சிலநாள் பாலும் சிலநாள் நீரும் (பருகுவது) அயின்றார். வேறுவேறு வினைகளுக்குரியவை பொதுவினைச் சொல்லைக் கொண்டு முடிந்தன.

## பலபொருள் ஒருசொல்

ஒருசொல் ஒருபொருளைக் குறித்தே வழங்கப்பெறும். ஒரு சில சொற்கள் பல பொருள்களை விளக்குவனவாக அமைந்துள்ளன. இவற்றைப் பலபொருள் ஒருசொல் என்று கூறுவர். இவை பல பொருள்களைக் குறிப்பதால் பொருள் விளங்காமல் மயக்கத்தை ஏற்படுத்துவன.

### பலபொருள் ஒருசொல் பொருள் அறியும் முறை

*390. வினை[1] சார்பு[2] இனம்[3] இடம்[4] மேவி விளங்காப்*
*பலபொருள் ஒருசொல் பணிப்பர் சிறப்புஎடுத்தே.*

[இ-ள்] 1. வினை 2. சார்பு 3. இனம் 4. இடம் ஆகிய சொற்களுள் ஒன்றைப் பொருந்தி ஒரு குறிப்பிட்ட பொருளை விளக்குவது பலபொருள் ஒருசொல். அவ்வாறு விளக்காத இடத்து அப்பொருளுக்குரிய சிறப்புச் சொல்லைக் கூட்டிப் பொருள் விளங்கச் செய்வர் புலவர்.

வினை முதலியவற்றால் பொருள் விளங்க வைப்பது ஒருவகை. மா என்பது மாமரம், வண்டு, குதிரை, திருமகள் போன்ற பல பொருள்களைத் தருகின்ற ஒரு சொல்லாகும்.[எ-டு]

1. மா பூத்தது → பூத்தது என்னும் வினையால் மரத்தைக் குறித்தது.
2. மா வீழ் மலர் → மலர் என்னும் சார்பால் வண்டைக் குறித்தது.
3. யானைத் தேர் மா → யானைப் படை முதலிய இனத்தால் குதிரையைக் குறித்தது.
4. மா வீழ் மார்பன் → மார்பு என்னும் இடத்தால் திருமகளைக் குறித்தது.

சிறப்புச் சொல்லைக் (அடைமொழி) கூட்டிப் பொருள் விளங்க வைப்பது மற்றொரு வகை.

மா ஏறினான் என்ற வழி ஏறினான் என்ற வினையால் மரத்தில் ஏறினானா? குதிரையில் ஏறினானா? என்ற ஐயம் ஏற்படுகிறது. இவ்ஐயத்தைப் போக்கப் பாய்மா ஏறினான். மாமரம் ஏறினான் எனச் சிறப்புச் சொல்லை (அடை) முன்னோ பின்னோ சேர்த்துக் கூறி ஐயத்தைப் போக்க வேண்டும்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

## எழுத்தியல் திரியாச் சொற்கள்

எழுத்தின் தன்மை வேறுபடாமல் பொருள் வேறுபட்டுச் சொல்லும் பொருளும் ஐயப்பட நிற்கின்ற தொடர்மொழிகள் உள. அவை எழுத்தியல் திரியாப் பொருள்திரி புணர்மொழிகள் எனப்படும்.

### ஓசை வேறுபாட்டால் பொருள் தரும் சொற்கள்

391. எழுத்துஇயல் திரியாப் பொருள்திரி புணர்மொழி
இசைத்திரி பால்தெளிவு எய்தும் என்ப.

[இ-ள்] எழுத்தின் தன்மை வேறுபடாமல் பொருள் வேறுபட்டு நிற்கும் தொடர் மொழிகள், குறிக்கப்பட்ட சொற்களின் இறுதியும் முதலும் தோன்ற இசையறுத்துச் (ஒலியை வரையறுத்துச்) சொல்லும் வேறுபாட்டால் பொருள் இன்னதெனத் துணியப்படும் என்று சொல்லுவர் புலவர். [எ-டு]

1. **செம்பொன்பதின்தொடி** என்பது எழுத்தியல் திரியாப் பொருள்திரி புணர்மொழி. இத்தொடரைப் பொன்னின் நிறை எனக் கொண்டால்,
   செம்பொன் + பதின் தொடி (பத்துப்பலம்) எனவும்
   செம்பின் நிறை எனக் கொண்டால்,
   செம்பு + ஒன்பதின் தொடி (ஒன்பது பலம்) எனவும் பிரிக்கப் பெறும்.
2. **நாகன்றேவன்போத்து**
   நாகன் + தேவன் + போத்து → நாகனும் தேவனும் போத்தும்
   நாகன் + தேவன்போத்து → நாகன் தேவனின் எருமை
   நாகன்றே + வன்போத்து → எருமையன்று; வலிய எருமைக்கடா
3. **குன்றேறாமா**
   குன்று + ஏறு + ஆமா → குன்றின் மீது ஏறும் காட்டுப் பசு
   குன்று + ஏறா + மா → குன்றின் மேல் ஏற முடியாத விலங்கு
4. **குறும்பரம்பு**
   குறும்பர் + அம்பு → குறுநில மன்னரின் அம்பு
   குறும் + பரம்பு → கழனி திருத்தும் சிறுபலகை
5. **புத்தியில்லாதவன்**
   புத்தி + இல்லாதவன் → அறிவற்றவன்
   புத்தியில் + ஆதவன் → சூரியனைப் போல் ஒளிரும் அறிவுடையவன்
6. **தாமரைக்கணியார்**
   தாமரை + கணியார் → தாமரை போன்ற கண்களை உடையவர்
   தா + மரைக்கணியார் → தாவுகின்ற மானின் கண்களை உடையவர்
   தாம் + அரைக்கணியார் → அரைக் கண்ணால் பார்க்கின்றவர்
   தாம் + அரைக்கு + அணியார் → இடையில் ஆடை அணியாதவர்.

Scanned by CamScanner

Scanned with CamScanner

**ஒருபொருள் பலபெயர் பெறுதல்**

392. ஒருபொருள் மேல்பல பெயர்வரின் இறுதி
ஒருவினை கொடுப்ப தனியும் ஒரோவழி.

[இ-ள்] ஒரு பொருளைக் குறித்துப் பல பெயர்கள் வருமாயின் பொருள் ஒன்றே என்பது விளங்க இறுதிக்கண் ஒருவினை கொடுத்துக் கூறுவர். சில இடங்களில் பொருள் ஒன்றே என்பது விளங்குகின்ற நிலையில் பெயர்தொறும் தனித்தனியே ஒரு முடிக்கும் சொல்லைக் கொடுத்தும் கூறுவர். [எ-டு]

1. **ஆசிரியன் பேரூர்கிழான் செயிற்றியன் இளங்கண்ணன்** வந்தான். இளங்கண்ணன் என்னும் ஒருவனுக்குப் பல பெயர்கள் வந்ததால் இறுதியில் வந்தான் என ஒரு வினையைக் கொண்டு முடிந்தது.

**2. எந்தை வருக! எம் பெருமான் வருக!**
**மைந்தன் வருக! மணாளன் வருக!**

என்னும் இத்தொடரில் ஒரு பொருளைக் குறித்த பல பெயர்கள் (எந்தை, பெருமான், மைந்தன், மணாளன்) அமைந்துள்ளமை தெளிவாக உணரப்பட்டது. எனவே பல பெயர்களும் தனித்தனி வினைகளைக் கொண்டு முடிந்தன.

## சிறப்புப் பெயர் - இயற்பெயர்

ஒருவருக்குக் காரணம் கருதியும் கருதாமலும் இடப்படும் பெயர் இயற்பெயர் ஆகும். சிறப்பின் காரணமாக ஒருவருக்கு அமையும் பெயர் சிறப்புப் பெயர்ஆகும். இவ்இரு பெயராலும் ஒருவர்அழைக்கப் பெறுதல் உண்டு.

**சிறப்புப் பெயரின் பின் இயற்பெயர் வருதல்**

393. திணை[1] நிலம்[2] சாதி[3] குடியே[4] உடைமை[5]
குணம்[6] தொழில்[7] கல்வி[8] சிறப்பாம் பெயரோடு
இயற்பெயர் ஏற்றிடின் பின்வரல் சிறப்பே.

[இ-ள்] 1. குறிஞ்சி முதலிய ஐந்திணை 2. நிலம் (தேயம்) 3. சாதி 4. குடி 5. உடைமை 6. குணம் 7. தொழில் 8. கல்வி ஆகியவற்றால் அமைவது சிறப்புப் பெயராகும். அப்பெயருடன் இயற்பெயரும் ஒருங்கே வருமானால் சிறப்புப் பெயரை முன்னும் இயற்பெயரைப் பின்னும் கூற வேண்டும். [எ-டு]

| **இயற்பெயர் பின் வருதல்** | | | **முன் வருதல்** |
|---|---|---|---|
| குன்றவன் கொற்றன் → | (திணை) | ← | கொற்றன் குன்றவன் |
| அருவாளன் அழகன் → | (நிலம்) | ← | அழகன் அருவாளன் |
| வணிகன் கோவலன் → | (சாதி) | ← | கோவலன் வணிகன் |

Scanned by CamScanner
Scanned with CamScanner

| | | | | |
|---|---|---|---|---|
| சோழன் மனுநீதி | → | (குடி) | ← | மனுநீதிச் சோழன் |
| பொன்னன் நம்பி | → | (உடைமை) | ← | நம்பி பொன்னன் |
| கரியன் கம்பன் | → | (குணம்) | ← | கம்பன் கரியன் |
| நடையன் சாத்தன் | → | (தொழில்) | ← | சாத்தன் நடையன் |
| புலவன் வள்ளுவன் | → | (கல்வி) | ← | வள்ளுவன் புலவன் |

இயற்பெயர் பின் வருதல் வழாநிலையாகும். அது முன் வருதல் வழுவமைதி ஆகும்.

**சுட்டுப்பெயர் வருதல்**

394. படர்க்கைமுப் பெயரோடு அணையின் சுட்டுப்
பெயர்பின் வரும்;[1] வினை எனில்பெயர்க்கு எங்கும்
மருவும்[2] வழக்கிடைச் செய்யுட்கு ஏற்புழி.[3]

[இ-ள்] *1.* படர்க்கைக்குரிய உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர், பொதுப்பெயர் என்னும் மூவகைப் பெயர்களோடு சுட்டுப்பெயர் சேர்ந்தால் அங்கு வினையாகிய கொண்டு முடியும் சொல் வரும்போது அச்சுட்டுப்பெயர் அம்மூவகைப் பெயருக்கும் பின்னால் வரும் 2. வினையாகிய முடிக்கும் சொல் இல்லையானால் அப்பெயர்க்குப் பின்னும் முன்னும் சுட்டுப்பெயர் வரும். 3. இவ்விலக்கணம் உலக வழக்காகும். செய்யுளில் இந்நியதியின்றி வரும். [எ-டு]

**1. படர்க்கை முப்பெயர்க்குப் பின் சுட்டு வருதல்**

நம்பி வந்தான் **அவனுக்குச்** சோறிடுக → உயர்திணை
**எருது** வந்தது **அதற்குப்** புல்லிடுக → அஃறிணை
**சாத்தன்** வந்தான் **அவனுக்குச்** சோறிடுக } விரவுப்பெயர்
**சாத்தன்** வந்தது **அதற்குப்** புல்லிடுக }

**2. படர்க்கை முப்பெயருக்குப் பின்னும் முன்னும் சுட்டு வருதல்**

நம்பி **அவன் - அவன்** நம்பி → உயர்திணைப் பெயர்
குதிரை **அது - அது** குதிரை → அஃறிணைப் பெயர்
சாத்தன் **இவன் - இவன்** சாத்தன் } விரவுப்பெயர்
**இது சாத்தன் - இது** சாத்தன் }

**3. செய்யுளில் சுட்டுப்பெயர் முன் வருதல்**

**அவன்**அணங்கு நோய்செய்தான் ஆயிழாய் வேலன்
விறன்மிகுதார்ச் **சேந்தன்**பேர் வாழ்த்தி.

இச்செய்யுள் தொடரில் சேந்தன் என்னும் இயற்பெயருக்கு முன் அவன் என்னும் சுட்டுப்பெயர் வந்தது. சுட்டுப்பெயர் வழக்கிடத்து வினை நிகழ் வழிப் பின் வருதல் வழா நிலையாகும். சுட்டுப்பெயர் செய்யுளில் பின் வருதல் வழாநிலையாகும். முன் வருதல் வழுவமைதி.

Scanned by CamScanner
Scanned with CamScanner

## அடுக்குத் தொடர்

ஒரு சொல் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்டு அடுக்கி வருதல் அடுக்குத் தொடர் ஆகும். யாப்பியலார் அடுக்கை இரட்டைத் தொடை எனக் கூறுவர். அணியியலார் அடுக்கைச் சொற்பின் வருநிலையணி என்று கூறுவர்.

### சொற்கள் அடுக்கி வருதல்

395. அசைநிலை[1] பொருள்நிலை[2] இசைநிறைக்கு[3] ஒருசொல்
இரண்டு மூன்றுநான்கு எல்லைமுறை அடுக்கும்.

[இ-ள்] 1. அசைநிலைக்கும் 2. விரைவு, சினம், மகிழ்ச்சி, அச்சம், துன்பம் போன்ற பொருள் நிலைக்கும் 3. இசையை நிறைப்பதற்கும் ஒருசொல் இரண்டு முறை, மூன்று முறை, நான்கு முறை அடுக்கி வரும். இவ்வாறு பொதுபடக் கூறப்பட்டாலும்

1. அசைநிலையில் இருமுறை அடுக்கி வரும்.
2. பொருள் நிலையில் இருமுறை, மும்முறை அடுக்கி வரும்
3. இசைநிறையில் 2,3,4 முறை அடுக்கி வரும். [எ-டு]

1. **அசைநிலை → அன்றே அன்றே (இருமுறை)**
2. **பொருள் நிலை**
   **உண்டேன் உண்டேன்; போ போ போ** → விரைவு
   **எய் எய்; எறி எறி** → வெகுளி
   **வருக வருக; பொலிக பொலிக பொலிக** → உவகை
   **பாம்பு பாம்பு; தீத்தீத்தீ** → அச்சம்
   **உய்யேன் உய்யேன்; வாழேன் வாழேன் வாழேன்** → துன்பம்

3. **இசை நிறை**
1. **ஏஏ.** இவள் ஒருத்தி பேடியோ → 2 முறை
2. **நல்குமே நல்குமே நல்குமே** நாமகள் → 3 முறை
3. **பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ** → 4 முறை

### இரட்டைக்கிளவி

396. இரட்டைக் கிளவி இரட்டிற் பிரிந்துஇசையா.

[இ-ள்] இரட்டித்து நின்று பொருள் உணர்த்தும் சொற்கள் அவ்இரட்டித்தலில் இருந்து பிரிந்து (தனித்து) ஒலிக்க மாட்டா.

இரட்டித்து நின்று பொருள் தரும் இச்சொல்லைப் பிரித்துக் கூறின் பொருள் தோன்றாது. எனவே இவற்றை இரட்டித்துக் கூறுதலே மரபாகும்.

[எ-டு] **சலசல** மும்மதம் பொழிய
**குறுகுறு** நடந்து
வற்றிய ஓலை **கலகலக்கும்**

துடிதுடித்துத் துள்ளி வரும் என்னும் தொடரில் அமைந்த துடித்து என்பது பிரிந்து ஒலிக்கும். ஆயினும் முன் உள்ள துடி என்பது பிரிந்து ஒலிக்காமையால் இரட்டைக் கிளவியே ஆகும்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

# 4. இடையியல்

இடைச்சொல்லின் (On Particle Words) இலக்கணத்தை உணர்த்துவதால் இவ்வியல் இடையியல் எனப் பெயர் பெற்றது. இடைச்சொல் என்பது காரணப்பெயர். 1. முன்னும் பின்னும் நிற்குமாயினும் பெரும்பாலும் இடையில் நிற்றலின் இடைச்சொல் ஆயிற்று என்பது சேனாவரையர் கருத்து 2. தனித்து இயங்கும் தன்மையின்றிப் பெயர், வினைகளை இடமாகக் கொண்டு நடப்பதால் இடைச்சொல் என்கிறார் தெய்வச்சிலையார் 3. பெயர்ச்சொல்லும் ஆகாது வினைச்சொல்லும் ஆகாது அவற்றின் வேறும் ஆகாது இடைநிகரனவாய் நிற்றலின் இடைச்சொல் ஆயிற்று என்று விளக்கம் தருகிறார் சங்கர நமச்சிவாயர். இவ்இடையியல் 22 நூற்பாக்களைக் கொண்டது.

## இடைச்சொல்லின் வகையும் [8] இலக்கணமும்

420. வேற்றுமை[1] வினை[2] சாரியை[3] ஒப்பு உருபுகள்[4]
தத்தம் பொருள[5] இசைநிறை[6] அசைநிலை[7]
குறிப்பு[8] என்எண் பகுதியின் தனித்துஇயல் இன்றிப்
பெயரினும் வினையினும் பின்முன் ஓரிடத்து
ஒன்றும் பலவும்வந்து ஒன்றுவது இடைச்சொல்.

[இ-ள்] இடைச் சொல்லானது 1.ஐ முதலிய வேற்றுமை உருபுகள் 2. விகுதி, இடைநிலை ஆகிய வினை உருபுகள் 3. அன், ஆன் முதலான சாரியைகள் 4. போல, புரைய முதலான உவம உருபுகள் 5. தத்தம் பொருள் உணர்த்துவன 6. இசை நிறையாக வருவன 7. அசை நிலையாக வருவன. 8. குறிப்பால் பொருள் உணர்த்துவன என்னும் எட்டு வகையினை உடையது. இது தனித்து நடக்கும் தன்மையற்றது. பெயர், வினைகளுக்கு முன்னோ பின்னோ வரும். அவ்விடங்களில் ஒன்றாயினும் பலவாயினும் வந்து ஒன்றுபட்டு நடப்பதே இடைச்சொல்லின் பொது விலக்கணமாகும்.

## இடைச்சொல்லின் எட்டுவகைகள்

1. **வேற்றுமை உருபுகள்:** பெயருக்குப் புறத்தே நின்று பொருள்களை வேற்றுமைப் படுத்தும். ஐ, ஆல், கு, இன், அது, கண் என்பன. [எ-டு]
சாத்தனை (ஐ), சாத்தனால் (ஆல்)

2. **வினையுருபுகள்**

அ) ஈற்றில் நிற்கின்ற விகுதிகள். அவை **அன், ஆன்** என முன் (நூ.140) கூறப்பட்டவை. [எ-டு]
நடந்தனன் - அன்; நடந்தான் - ஆன்

ஆ) இடையில் நின்று காலத்தைக் காட்டும் முக்கால இடைநிலைகள். வந்தான் (த்) வருகிறான் (கிறு) வருவான் (வ்) இவையும் முன் (நூ.142 - 144) கூறப்பட்டவை.

Scanned with CamScanner

Scanned with CamScanner

**3. சாரியைகள்**

பெயர், வினைகளில் அகத்துறுப்பாயும் புறத்துறுப்பாயும் அமைபவை. அவை முன் (நூ.244) கூறப்பட்டன. [எ-டு]

நடந்தனன் → அன் வினையின் அகத்துறுப்பாய் நின்றது
புளியங்காய் → அம் பெயரின் அகத்துறுப்பாய் நின்றது
மன்றம் → அம் பெயரின் புறத்துறுப்பாய் நின்றது.

**4. ஒப்பு (உவம) உருபுகள்**

அவை போல முதலாக முன் (நூ.367) சொல்லப்பட்ட எச்சங்களின் பகுதிகள். [எ-டு]

போன்றான் - போல என வினையில் அகத்துறுப்பாய் நின்றது.

**5. தத்தம் பொருள் உணர்த்துவன**

தமக்கென வரையறுக்கப்பட்ட பொருள் தருபவை. அவை ஏ, ஓ போன்றவை.

**6. இசைநிறை**

செய்யுளில் ஓசை நிறைவிக்கும் ஏ, ஓ போன்றவை.

**7. அசைநிலை**

பொருள் உணர்த்தல் இன்றி அசை நிலையாக வருபவை. [எ-டு]
யா, கா, பிற போன்றவை.

**8. குறிப்பால் பொருள் உணர்த்துவன**

ஒலி, அச்சம் போன்ற குறிப்புப் பொருளைத் தருவன. [எ-டு]
ஒல்லென - ஒலி; திடுக்கென - அச்சம்.

**இடைச்சொல்லின் இலக்கணம்**

1. தனித்து நிற்கும் தன்மையின்றிப் பெயர், வினைகளுக்கு உறுப்பாய் வரும். [எ-டு]
   வந்தான் - த் - இடைநிலை (அகத்தில் நின்றது)
   அது கொல் - கொல் - இடைச்சொல் (புறத்தில் நின்றது)
2. பெயர், வினைகளுக்கு 1. முன்னும் 2. பின்னும் வரும்.
   அம்ம கொற்றா → பெயரின் முன் வந்தது
   அது மன் → பெயரின் பின் வந்தது

இடையிலும் வரும். அறி + ஞ் + அன் - 'ஞ்' இடையில் வந்தது.

3. ஒன்றோ பலவோ வரும்.
   அது கொல் - (கொல்) ஒன்று வந்தது
   அது மற்றம்ம - (மற்று, அம்ம) பல வந்தன
   இடைச்சொற்கள் இயல்பாயும் ஈறு திரிந்தும் வரும்.
   அது கொல் - (கொல்) இயல்பாய் நின்றது.
   மன்னைச் சொல் - (மன்) ஈறு திரிந்தது.



**இடைச்சொற்கள் உணர்த்தும் பொருள்கள் [14]**

421\. தெரிநிலை[1] தேற்றம்[2] ஐயம்[3] முற்று[4] எண்[5] சிறப்பு[5]
எதிர்மறை[7] எச்சம்[8] வினா[9] விழைவு[10] ஒழியிசை[11]
பிரிப்புக்[12] கழிவு[13] ஆக்கம்[14] இன்னன இடைப்பொருள்.

[இ-ள்] 1.தெரிநிலை 2. தெளிவு 3. ஐயம் 4.முற்று 5.எண் 6.சிறப்பு 7. எதிர்மறை 8. எச்சம் 9.வினா 10. விருப்பு 11. ஒழிந்த சொல் 12. பிரிநிலை 13. கழிவு 14. ஆக்கம் என்னும் பதினான்குடன் இவை போல்வன பிறவும் இடைச்சொற்கள் உணர்த்தும் பொருள்கள் ஆகும். [எ-டு]

1. **தெரிநிலை:** (இன்னது எனத் தெரிவித்தல்) ஆண்பெண் அன்று-அலி
2. **தேற்றம்:** (உறுதிபடக் கூறுதல்) உண்டே மறுமை
3. **ஐயம்:** (துணிவின்மை) ஆணோ? பெண்ணோ?
4. **முற்று:** (முழுமைப்படுத்துதல்) இருவரும் வந்தார்
5. **எண்:** (எண்ணிக்கைப் பொருண்மை) கண்ணும் காதும்
6. **சிறப்பு:** (ஒன்றுக்குரிய பெருமை) குறவரும் அஞ்சும் குன்று
7. **எதிர்மறை:** (மாறுபடுதல்) வந்தாலும் வருவான் - வாராமை குறித்தது
8. **எச்சம்:** (பிறிதொன்றைத் தொடர்புறுத்தல்) அவனும் வந்தான்
9. **வினா:** (வினவுதல் - ஐயத்தை வினவுதல்) குற்றியோ? மகனோ?
10. **விழைவு:** (விருப்பம்) வருகதில் அம்ம
11. **ஒழியிசை:** (வேறு பொருள் படுதல்) படிப்பதற்கோ வந்தாய்-விளையாட
12. **பிரிநிலை:** (பிரித்துக் கூறுதல்) அவனே வந்தான் (பிறரிலர்)
13. **கழிவு:** (நடந்ததற்கு வருந்துதல்) எமக்கியும் மன்னே
14. **ஆக்கம்:** (வளர்ச்சி) பண்டு காடுமன் (இன்று வயலாயிற்று)

இன்னன (இவை போன்றவை) என்றதால் வருபவை.

சுட்டுப்பொருள் தருவன (அ,இ,உ) → அவன், இவன், உவன்
வினாப்பொருள் தருவன (எ,யா,ஆ,ஏ,ஓ) → எவன், யாவன், அவனோ
எல்லைப்பொருள் தருவன (கால, இடச் சொற்கள்) → இனிக்கூறுக, முன் செல்க.

| | |
|---|---|
| பன்மைப்பொருள் தருவன (தொறும், தோறும்) | வருந்தோறும் - தொழிற்பன்மை; ஊர்தோறும் - இடப்பன்மை |
| விகற்பப்பொருள் தருவன (ஆவது, ஆயினும்) | ஒன்றாவது இரண்டாவது |

இரக்கப்பொருள் தருவன (ஐயோ,அந்தோ,ஆ) → ஐயோ இறந்தான்
வியப்புப் பொருள் தருவன் (அம்மா,ஆ,ஓ) → அம்மா கொடிது
அச்சப் பொருள் தருவன (ஐயோ, ஆ ஆ) → ஐயோ புலி

இகழ்ச்சிப் பொருள் தருவன (சீ, சிச்சீ) → சீ எழுந்திரு
உயர்வுப் பொருள் தருவன (ந) → நக்கீரன், நப்பின்னை
பயனின்மைப் பொருள் தருவன (வாளா, சும்மா) சும்மா வந்தேன்.

Scanned with CamScanner

Scanned with CamScanner

## ஏகார இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள் [6]

422. பிரிநிலை[1]வினா[2]எண்[3] ஈற்றசை[4] தேற்றம்[5]
இசைநிறை[6] எனஆறு ஏகா ரம்மே.

[இ-ள்] ஏகார இடைச்சொல் 1.பிரிநிலை 2.வினா 3.எண் 4.ஈற்றசை 5. தெளிவு 6. இசை நிறைவித்தல் என்னும் ஆறு பொருள்களில் வரும்.[எ-டு]

1. **பிரிநிலை**
அவர்களுள் இவனே கொண்டான் → பிறரிடமிருந்து பிரித்துக் கூறியதால் பிரிநிலை

2. **வினா**
நீயே கொண்டாய்? (நீயா கொண்டாய்?)

3. **எண்**
நிலனே, நீரே → நிலமும் நீரும் என எண்ணுதலால் எண்

4. **ஈற்றசை**
அறைகுவன் சொல்லே → வேறு பொருள் தராமல் இறுதியில் நிற்றலால் ஈற்றசை

5. **தெளிவு**
உண்டே மறுமை → உறுதிப்படத் தெளிந்து மொழிந்ததால் தெளிவு

6. **இசைநிறை**
ஏயே இவள் ஒருத்தி → செய்யுளில் இசையை நிறைத்து நிற்றலால் இசைநிறை.

## ஓகார இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள் [8]

423. ஒழியிசை[1]வினாச்[2]சிறப்பு[3] எதிர்மறை[4] தெரிநிலை[5]
கழிவு[6]அசை நிலை[7]பிரிப்பு[8] எனஎட்டு ஓவே.

[இ-ள்] ஓகார இடைச்சொல் 1. ஒழியிசை 2.வினா 3.சிறப்பு 4.எதிர்மறை 5. தெரிநிலை 6.கழிவு 7.அசைநிலை 8.பிரிப்பு என்னும் எட்டுப் பொருள்களைத் தரும். [எ-டு]

1. **ஒழியிசை**
வாழ்வதற்கோ வந்தான் → இது வாழ்வதற்கு அன்று சாவதற்கு எனச் சொற்களைத் தருவதால் ஒழியிசை.

2. **வினா**
இதுவோ? அதுவோ? → ஐயப்பட்டு வினவும் பொருளைத் தருதலால் வினா.



3. **சிறப்பு**
உயர்வு → ஓஓ பெரியன் → இது ஒருவனுடைய பெருமையின் மிகுதியைக் காட்டுதலால் உயர்வு சிறப்பாய் நின்றது.
இழிவு → ஓஓ கொடியன் → இது ஒருவனுடைய கொடுமையின் மிகுதியைக் காட்டுதலால் இழிவு சிறப்பாய் நின்றது.

4. **எதிர்மறை**
அவனோ கொண்டான் → இது அவன் கொண்டிலன் என மாறான பொருளைத் தருதலால் எதிர்மறை.

5. **தெரிநிலை**
அலியை நோக்கி ஆணோ அதுவும் அன்று; பெண்ணோ அதுவும் அன்று.
இது ஆண், பெண் தன்மையற்றது என்பதைத் தெரிவித்தலால் தெரிநிலை.

6. **கழிவு**
ஓஓ உணரார் → இது நன்மை அறியாமல் செயல்பட்டுக் கெட்டவர்களுக்காக வருந்தும் பொருளைத் தருதலால் கழிவு.

7. **அசைநிலை**
கேண்மினோ → இது கேளுங்கள் என வேறு பொருள் இன்றி நிற்றலால் அசைநிலை.

8. **பிரிநிலை**
இவனோ கொண்டான் → பிறரிடமிருந்து ஒருவனைப் பிரித்து நிற்றலால் பிரிநிலை.

## 'என', 'என்று' என்னும் இடைச்சொற்கள் உணர்த்தும் பொருள்கள் [6]

424. வினை[1]பெயர்[2] குறிப்பு[3]இசை[4] எண்[5]பண்பு[6] ஆறினும்
எனஎனும் மொழிவரும்; என்றும் அற்றே.

[இ-ள்] என என்னும் இடைச்சொல் 1. வினை 2. பெயர் 3.குறிப்பு 4. இசை 5.எண் 6.பண்பு என்னும் ஆறு பொருள்களிலும் வரும். என்று என்னும் இடைச்சொல்லும் மேற்சொல்லப்பட்ட ஆறு பொருள்களிலும் வரும். [எ-டு]

1. **வினை**
மகன் பிறந்தான் என (என்று) → இதில் வினையொடு இயைந்தது.

2. **பெயர்**
அழுக்காறு என (என்று) → இதில் பெயரொடு இயைந்தது.

Scanned with CamScanner
Scanned with CamScanner

3. குறிப்பு
   பொள்ளென (என்று) → இதில் விரைவுக் குறிப்பொடு இயைந்தது
4. இசை
   ஒல்லென (என்று) → இதில் இசை (ஓசை) யொடு இயைந்தது
5. எண்
   நிலமென (என்று) நீரென (என்று) → இதில் எண்ணொடு இயைந்தது
6. பண்பு
   வெள்ளென (என்று) விளர்த்தது → இதில் நிறப் பண்பொடு இயைந்தது.

**உம் என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்கள் [8]**

425. *எதிர்மறை[1]சிறப்பு[2]ஐயம்[3]எச்சம்[4]முற்று[5]அளவை[6]*
*தெரிநிலை[7]ஆக்கமோடு[8]உம்மை எட்டே.*

[இ-ள்] உம் என்னும் இடைச்சொல் 1. எதிர்மறை 2. சிறப்பு 3. ஐயம் 4. எச்சம் 5. முற்று 6. அளவை 7. தெரிநிலை 8. ஆக்கம் என்னும் எட்டுப் பொருள்களைத் தரும். [எ-டு]

1. எதிர்மறை
   வருதலும் உரியன் → வாராமைக்கும் உரியன் என எதிர்மறைப் பொருளைத் தந்தது
2. சிறப்பு
   உயர்வு → குறவரும் மருள்வர் (வலிமையைச் சிறப்பித்தது)
   இழிவு → நாயும் தின்னாது (இழிவைச் சிறப்பித்தது)
3. ஐயம்
   பத்தாயினும் எட்டாயினும் கொடு → துணிவின்மையைக் காட்டியது
4. எச்சம்
   இறந்தது தழுவல் → சாத்தனும் வந்தான் (முன் கொற்றன் வந்தான் என நடந்ததைக் குறித்தது)
   எதிரது தழுவல் → சாத்தனும் வந்தான் (இனிக் கொற்றனும் வருவான் என நடப்பதைக் குறித்தது)
5. முற்று
   மூவேந்தரும் வந்தார் → குறைவின்மையைக் காட்டியது
6. அளவை
   ஒன்றும் இரண்டும் → எண்ணுதற் பட நின்றது.
7. தெரிநிலை
   ஆணும் பெண்ணும் அன்று → அலியெனத் தெளிய நின்றது.
8. ஆக்கம்
   பாலுமாயிற்று → அதுவே மருந்தும் ஆதலைக் குறிக்கும்.



**முற்றும்மை எச்சப் பொருள் தருதல்**

426. *முற்றும்மை ஒரோவழி எச்சமும் ஆகும்.*

[இ-ள்] மேற்சொல்லப்பட்ட பொருள்களுள் முற்றுப் பொருளில் வரும் உம் என்னும் இடைச்சொல் சில இடங்களில் எச்சப்பொருளையும் தரும். [எ-டு]

அனைவரும் வந்திலர் → சிலர் வந்தார்
பத்தும் கொடார் → சில கொடுப்பர்
முழுவதும் அறிந்திலன் → சில அறிந்துளன்

எனப் பொருள் தரும்.

**செவ்வெண்**

பெயர், வினைகளின் இடையே எண்ணிடைச் சொற்கள் மறைந்து நிற்க எண்ணி நிற்பது செவ்வெண் ஆகும்.

**எச்சவும்மை செவ்வெண்ணில் வருதல்**

427. *செவ்வெண் ஈற்றதாம் எச்ச உம்மை.*

[இ-ள்] எச்சப் பொருளில் வருகின்ற உம் என்னும் இடைச்சொல் செவ்வெண்ணில் வருமாயின் ஈற்றில் வரும். [எ-டு]

கல்வி செல்வம் ஒழுக்கம் குடிப்பிறப்பும் பெறுவாரும் உளர்.

இவற்றுள் சில பெறுவாரும் உளர் எனப் பொருள் தருவது எச்சவும்மை. இது செவ்வெண்ணின் ஈற்றில் குடிப்பிறப்பும் என உம்மை பெற்று வந்துள்ளது.

**சில எண்ணிடைச் சொற்களுக்குரிய இலக்கணம்**

428. *பெயர்ச்செவ் வெண்[1]ஏ[2]என்றா[3]எனா[4]எண்*
*நான்கும் தொகைபெறும்; உம்மைஎன்று எனஒடு*
*இந்நான்கு எண்ணும்அஃது இன்றியும் இயலும்.*

[இ-ள்] பெயரிடத்தே எண்ணிடைச் சொல் மறைந்து வருகின்ற 1. செவ்வெண் 2. ஏ 3. என்றா 4. எனா + எனத் தொகாமல் (மறையாமல்) வருகின்ற எண்ணிடைச் சொற்கள் மூன்றும் ஆகிய இந்நான்கும் இத்துணைத்து என்று கணக்கிடும் எண்ணுப் பொருளில் தொகை பெற்று வரும். உம், என்று, என, ஒடு என்னும் இந்நான்கு எண்ணிடைச் சொற்களும் தொகை பெறாமலும் (பெற்றும்) வரும். [எ-டு]

சாத்தன் கொற்றன் இருவரும் வந்தார் → உம் மறைந்து தொகை பெற்று வந்தது(செவ்வெண்)

சாத்தனே கொற்றனே இருவரும் வந்தார் → ஏ மறையாமல் வந்தது

| | |
|---|---|
| சாத்தன் என்றா கொற்றன் என்றா இருவரும் வந்தார் | என்றா மறையாமல் வந்தது |
| சாத்தன் எனா கொற்றன் எனா இருவரும் வந்தார் | எனா மறையாமல் வந்தது |

இவை வழக்கில் சிறுபான்மை. தொகை பெறாமல் வந்தால் அதனை இசையெச்சங்களாகக் கொள்ளவேண்டும். செய்யுளில் தொகை பெறாமல் வந்தால் அதனைத் தொகுத்தல் விகாரமாகக் கொள்ள வேண்டும்.[எ-டு]

| | |
|---|---|
| சாத்தனும் கொற்றனும் இருவரும் வந்தார்<br>சாத்தனென்று கொற்றனென்று இருவர் உளர் | உம், என்று, என, ஒடு (இருவர் என) |
| சாத்தனெனக் கொற்றனென இருவர் உளர்<br>சாத்தனோடு கொற்றனோடு இருவர் உளர் | தொகை பெற்றும் வந்தன |
| சாத்தனும் கொற்றனும் வந்தார்<br>சாத்தனென்று கொற்றனென்று உளர்<br>சாத்தன் எனக் கொற்றன் என உளர்<br>சாத்தனோடு கொற்றனோடு உளர் | தொகை பெறாதும் வந்தன |

பெயர்ச் செவ்வெண்ணிலும் உம்மைத் தொகையிலும் எண்ணிடைச் சொற்கள் தொக்கு வரும். ஆயினும் செவ்வெண், தொடர் மொழி போல விட்டிசைக்கும். உம்மைத்தொகை விட்டிசைக்காமல் ஒரு மொழி போல நடக்கும்.

**என்று, என, ஒடு என்பனவற்றிற்குச் சிறப்பு விதி**

429. *என்றும்[1] எனவும்[2] ஒடுவும்[3] ஒரோவழி*
*நின்றும் பிரிந்துஎண் பொருள்தொறும் நேரும்.*

[இ-ள்] 1. என்று 2. என 3. ஒடு என்னும் இம்மூன்று எண்ணிடைச் சொற்களும் எண்ணப்படும் பொருள்தோறும் நில்லாமல் ஓரிடத்தில் நின்றும் பிரிந்து எண்ணப்படுகின்ற பொருள்கள்தோறும் சென்று பொருந்தும் [எ-டு]

**வினை பகை என்று இரண்டு** → என்று என்பது ஈற்றில் நின்றது. அது வினை என்று பகை என்று எனப் பிரிந்து பிறவிடத்தும் சென்று பொருந்தியது.

**பகை பாவம் அச்சம் பழியென** நான்கும் → பழி என்பது பழியென நின்றது. அது பகையென, பாவமென, அச்சமென, பழியென எனப் பிரிந்து பிறவிடத்தும் சென்று பொருந்தியது.

**பொருள் கருவி காலம் வினை இடனொடு ஐந்தும்** அது பொருளொடு, கருவியொடு, காலத்தொடு, வினையொடு, இடனொடு எனப் பிரிந்து பிறவிடத்தும் சென்று பொருந்தியது.



**எண்ணிடைச் சொற்கள் வினையுடன் வருதல்**

430. *வினையொடு வரினும் எண்இனைய ஏற்பன.*

[இ-ள்] எண்ணிடைச் சொற்கள் வினையொடு பொருந்தியும் வரும். அவ்விடங்களில் பெயரில் நின்ற அத்தன்மையை அப்படியே ஒத்து நடக்கும்.[எ-டு]

| | |
|---|---|
| மயிலாடக் குயிலாட மாமுகில் எழுந்தது | → உம் மறைந்து நின்றது (செவ்வெண்) |
| கற்றும் கேட்டும் கற்பனை கடந்தார் | → உம் |
| உண்ணவென்று உடுக்கவென்று வந்தான் | → என்று |
| உண்ணவென உடுக்கவென வந்தான் | → என |
| உண்ண உடுக்க வென்று வந்தான் | → ஓரிடத்தில் நின்று பிரிந்து கூடும் எண் |

**தில் என்னும் இடைச்சொல் [3]**

431. *விழைவே[1]காலம்[2]ஒழியிசை[3]தில்லே.*

[இ-ள்] தில் என்னும் இடைச்சொல் 1. விருப்பம் 2. காலம் 3. ஒழிந்த சொற்களை உணர்த்துதல் ஆகிய மூன்று பொருள்களைத் தரும். [எ-டு]

1. அரிவையைப் பெறுகதில் அம்ம யானே → விழைவு
அரிவையைப் பெற வேண்டும் என்னும் விருப்பத்தைக் காட்டியது.
2. பெற்றாங்கு அறிகதில் அம்ம இவ்வூரே → காலம்
பெற்ற காலத்தில் அறிக எனக் காலத்தை உணர்த்தியது
3. வருகதில் அம்ம எம்சேரி சேர → ஒழிந்த சொல்
வந்தால் இன்னது செய்வேன் என ஒழிந்ததை உணர்த்தியது.

**மன் என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள் [6]**

432. *மன்னே அசைநிலை[1] ஒழியிசை[2] ஆக்கம்[3]*
*கழிவு[4] மிகுதி[5] நிலைபேறு[6] ஆகும்.*

[இ-ள்] மன் என்னும் இடைச்சொல் 1. அசைநிலை 2. ஒழியிசை 3. ஆக்கம் 4. கழிவு 5. மிகுதி 6. நிலைபெறுதல் என்னும் ஆறு பொருள்களில் வரும். [எ-டு]

1. **அசைநிலை**
அதுமன் கொண்கன் தேரே → வேறு பொருளின்றிச் சார்ந்து நின்றது
2. **ஒழியிசை**
கூரியதோர் வாள்மன் → வாளின் திட்பமின்மையை உணர்த்தியது

Scanned with CamScanner

Scanned with CamScanner

3. ஆக்கம்

பண்டுகாடு மன் → தற்போது நல்ல வயலாயிற்று என்பதை உணர்த்தியது

4. கழிவு

சிறிய ... எமக்கீயும் மன்னே → இப்போது அவன் இறந்து பட்டதால் எமக்கு ஈதல் கழிந்தது எனப் பொருள் தந்தது

5. மிகுதி

எந்தை எமக்கு அருளும்மன் → மிகுதியும் அருளுவான் என்னும் பொருளைத் தந்தது

6. நிலைபேறு

மன்னா உலகத்து மன்னியது புரிமோ→ நிலைபெறாத உலகத்தில் நிலைபெற்றதைச் செய் என்னும் பொருளைத் தந்தது

### மற்று என்னும் இடைச்சொல் [3]

433. வினைமாற்று[1] அசைநிலை[2] பிறிது[3] எனும் மற்றே.

[இ-ள்] மற்று என்னும் இடைச்சொல் 1. வினைமாற்று 2. அசைநிலை 3. பிறிது என்னும் மூன்று பொருள்களைத் தரும். [எ-டு]

1. வினைமாற்று

மற்றறிவாம் நல்வினை யாம் இளையம் என்னாது → நல்வினையை விரைந்து அறிவாம் என்னும் வினையை மாற்றி இனிமேல் விரைவுபடாது அறிவாம் என்னும் வினையைத் தந்தது.

2. அசைநிலை

அன்றறிவாம் என்னாது அறம் செய்க மற்று → வேறு பொருள் உணர்த்தாமல் சார்ந்து நின்றது

3. பிறிது

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று → ஊழல்லது ஒன்று எனப் பொருள் தந்தது.

### மற்றை என்னும் இடைச்சொல் [1]

434. மற்றையது என்பது சுட்டியதற்கு இனம்.

[இ-ள்] மற்றையது எனப் பெயர்க்கு முதனிலையாய் வரும் மற்றை என்னும் இடைச்சொல் முன் சுட்டின பொருளை விடுத்து அதற்கு இனமான பொருளைக் குறிக்கும். [எ-டு]

இரண்டு ஆடை உள்ளவிடத்து ஒன்றைக் கண்டு அதனை விரும்பாதவன் மற்றையது கொண்டு வா என்றால் அதற்கு இனமாகிய ஆடையைக் குறிக்கும். மற்று, மற்றை என்பன தனித்தனிச் சொற்கள். எனவே இதனை மற்று என்பதன் விகாரமாகக் கொள்ளக் கூடாது.



### கொல் என்னும் இடைச்சொல் [2]

435. கொல்லே ஐயம்[1] அசைநிலைக்[2] கூற்றே.

[இ-ள்] கொல் என்னும் இடைச்சொல் 1. ஐயம் 2. அசைநிலை என்னும் இரண்டு பொருள்களில் வரும். [எ-டு]

1. ஐயம்

அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ → அணங்கோ மயிலோ எனத் துணிவின்மையைக் காட்டியது

2. அசைநிலை

கற்றதனால் ஆய பயனென் கொல் → வேறு பொருள் உணர்த்தாமல் சார்ந்து நின்றது.

### ஒடு, தெய்ய என்னும் இடைச்சொல் [1]

436. ஒடுவும்[1] தெய்யவும்[2] இசைநிறை மொழியே.

[இ-ள்] 1. ஒடு 2. தெய்ய என்னும் இரண்டும் இசைநிறைப் பொருளைத் தருவனவாம். [எ-டு]

1. ஒடு

விதைக்குறு வட்டி போதொடு பொதுள → வேறு பொருளின்றிச் செய்யுளில் இசையை நிறைத்து நின்றது

2. தெய்ய

சொல்லேன் தெய்ய நின்னொடும் பெயர்த்தே → இசை நிறையாக வந்தது.

### அந்தில், ஆங்க என்னும் இடைச்சொற்கள் [2]

437. அந்தில்ஆங் கஅசைநிலை[1] இடப்பொருள்[2] அவ்வே.

[இ-ள்] அந்தில், ஆங்க என்னும் இடைச்சொற்கள் 1. அசைநிலைப் பொருள் 2. இடப்பொருள் என்னும் இரண்டு பொருள்களில் வரும். [எ-டு]

1. அசைநிலை

அந்தில் கழலினன் கச்சினன்
ஆங்கத் திறனல்ல யாம் கழற
} வேறுபொருள் இன்றி அசைநிலையாய் வந்தன

2. இடம்

வருமே சேயிழை அந்திற் கொழுநற்காணிய
ஆங்காங்கு ஆயினும் ஆக
} இவை அவ்விடத்து என்னும் இடப் பொருளைத் தந்தன.

Scanned with CamScanner
Scanned with CamScanner

### அம்ம என்னும் இடைச்சொல் [2]

438. அம்ம உரையசை[1] கேண்மின்[2] என்றுஆகும்.

[இ-ள்] அம்ம என்னும் இடைச்சொல் 1. உரையசைப் பொருளையும் 2. நான் சொல்வதைக் கேள் என்னும் ஏவற்பொருளையும் தரும். [எ-டு]

**1. உரையசை**

அது மற்றம்ம → வேறு பொருளின்றி உரையாடலில் உரையசையாய் நின்றது

**2. கேண்மின் என்னும் ஏவல்**

அம்ம வாழி தோழி → ஒன்றைச் சொல்வேன் கேள் என ஏவற் பொருளில் வந்தது

### மா என்னும் இடைச்சொல் [1]

439. மாவென் கிளவி வியங்கோள் அசைச்சொல்.

[இ-ள்] மா என்னும் இடைச்சொல் வியங்கோளிடத்து வருகின்ற அசைச்சொல் ஆகும். [எ-டு]

புற்கை உண்கமா கொற்கையோனே → உண்க என்னும் வியங்கோளை அடுத்து அசையாய் வந்தது.

## அசைச்சொற்கள்

தமக்கென ஒரு பொருளுமின்றிப் பெயர் வினைகளோடு சார்த்திச் சொல்லப்படுவன அசைச்சொற்களாகும். இவை தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூன்றிடங்களிலும் வரும். அவற்றுள் முன்னிலைக்கு மட்டுமே வருவனவற்றை முன்னிலை அசைச்சொற்கள் எனப் பகுப்பர். பிற சொற்கள் மூவிட அசைச்சொல் என்றும் பொதுவசைச்சொல் என்றும் கூறப்பெறும்.

### முன்னிலை அசைச்சொற்கள் [10]

440. மியா[1]இக[2] மோ[3]மதி[4] அத்தை[5] இத்தை[6]
வாழிய[7] மாள[8]ஈ[9] யாழ[10]முன் னிலைஅசை.

[இ-ள்] 1. மியா 2. இக 3. மோ 4. மதி 5. அத்தை 6. இத்தை 7. வாழிய 8. மாள 9. ஈ 10. யாழ என்பன முன்னிலை அசைச்சொற்கள் ஆகும். [எ-டு]

1. மியா → கேண்மியா
2. இக → காணிக
3. மோ → மொழிமோ
4. மதி → செல்மதி
5. அத்தை → செலியர் அத்தை
6. இத்தை → நீயொன்று பாடு இத்தை
7. வாழிய → காணிய வாழிய
8. மாள → தவிர்ந்தீக மாள
9. ஈ → சென்றீ பெரும
10. யாழ → நீயே ... செலவயர்ந்தி யாழ



### பொது அசைச்சொற்கள் [20]

441. யா[1]கா[2] பிற[3]பிறக்கு[4] அரோ[5]போ[6] மாது[7]இகும்[8]
சின்[9]குரை[10] ஒரும்[11] போலும்[12] இருந்து[13]இட்டு[14]
அன்று[15]ஆம்[16] தாம்[17]தான்[18] கின்று[19]நின்று[20] அசைமொழி.

[இ-ள்] 1. யா 2. கா 3. பிற 4. பிறக்கு 5. அரோ 6. போ 7. மாது 8. இகும் 9. சின் 10. குரை 11. ஒரும் 12. போலும் 13. இருந்து 14. இட்டு 15. அன்று 16. ஆம் 17. தாம் 18. தான் 19. கின்று 20. நின்று ஆகிய இருபது இடைச்சொற்களும் (மூவிடங்களிலும் வருகின்ற) அசைச் சொற்கள் ஆகும். [எ-டு]

யா → யா பன்னிருவர் மாணாக்கர்
கா → இவளிவள் காண்டிகா
பிற → ஆயனை அல்ல பிற
பிறக்கு → பிறக்கதனுட் செல்லான்
அரோ → ஆலும் அரோ
போ → வாழாதென் போ
மாது → விளிந்தன்று மாதோ
இகும் → காண்டிகும் அல்லமோ
சின் → என்றிசின்
குரை → பல்குரைத் துன்பம்
ஒரும் → அஞ்சுவதோரும் அறனே
போலும் → மகிழ்ந்தனை போலும்
இருந்து → எழுந்திருந்தேன்
இட்டு → நெஞ்சம் பிளந்திட்டு
அன்று → சேவடி சேர்தும் அன்றே
ஆம் → பணியும் ஆம் என்றும் பெருமை
தாம் → அவையே தாம்
தான் → அதுவே தானும்
கின்று → வாழ்வான் ஆசைப்பட்டிருக்கின்றேன்
நின்று → தோன்றாத் துணையாய் நின்றான்.

Scanned with CamScanner
Scanned with CamScanner

# 2. வினையியல்

ஒரு மொழிக்கு இன்றியமையாத உறுப்பாக விளங்குவது வினைச்சொல்(VERB) ஆகும். ஒரு பொருளின் புடை பெயர்ச்சியை(MOVE-MENT) வெளிப்படுத்துவது வினைச்சொல் எனப்படும். வினைச்சொல் ஒரு செயலின் காலத்தைக் காட்டுவதாக அமையும். இதன் காரணமாக அது காலக்கிளவி எனவும் சிறப்பிக்கப் பெறுகிறது. வினைச்சொல் தெளிவாகவும் காலம் காட்டும். குறிப்பாகவும் காலம் காட்டும். வினைச்சொல்லின் இலக்கணத்தைச் சொல்லும் இயல் வினையியல் ஆகும். இவ்வியல் 32 நூற்பாக்களை உடையது.

## தெரிநிலை வினை (DEFINITE VERB)

ஒரு வினைச்சொல் தெளிவாகக் (வெளிப்படையாகக்) காலம் காட்டினால் அதனைத் தெரிநிலை வினை என்று குறிப்பர்.

### தெரிநிலை வினையின் இலக்கணம் [6]

320. செய்பவன்[1] கருவி[2] நிலம்[3] செயல்[4] காலம்[5]
செய்பொருள்[6] ஆறும் தருவது வினையே.

[இ-ள்] 1. செய்பவன் 2. கருவி 3. இடம் 4. செயல் 5. காலம் 6. செயப்படுபொருள் ஆகிய அறுவகைப் பொருள்களையும் தருவது தெரிநிலை வினைச்சொல் ஆகும்.

இந்நூற்பாவில் கூறப்பட்ட ஆறும் என்பதை உயர்வு சிறப்பு உம்மையாகக் கொண்டு 7. இன்னதற்கு 8. இது பயன் என்னும் இரண்டையும் சேர்த்து எட்டாகவும் கொள்ளலாம்.

செய்பவன் என்பது ஒரு தொழிலைச் செய்யும் கருத்தாவைக் (வினைமுதலைக்) குறிக்கும். கருத்தா 1. ஏவுதற் கருத்தா 2. இயற்றுதற் கருத்தா என இருவகைப்படுவர். கருவி என்பது 1. முதற்காரணம் 2. துணைக்காரணம் என இருவகைப்படும். [எ-டு]

வனைந்தான் (பானை செய்தான்) என்பது தெரிநிலை வினைச் சொல்லாகும்.

| | |
|---|---|
| **1. செய்பவன்** | - குயவன் (இயற்றுதற் கருத்தா) |
| **2. கருவி** | - மண் (முதற் காரணம்); தண்ட சக்கரம் (துணைக்காரணம்) |
| **3. நிலம் (இடம்)** | - வனையும் இடம் (வீட்டு முற்றம்) |
| **4. செயல் (தொழில்)** | - வனைதல் (பானை செய்தல்) |
| **5. காலம்** | - இறந்த காலம் |
| **6. செயப்படு பொருள்** | - குடம் |
| **7. இன்னதற்கு** | - பிறருக்கு வனைதல் |
| **8. இது பயன்** | - அறங்கருதி அல்லது நீர் முகக்க. |

ஆறும் என்பதில் உள்ள முற்றும்மையை எச்சமாகக் கொண்டு ஆறுக்குக் குறைந்து வருவனவற்றையும் தெரிநிலை வினையாகக் கொள்ளலாம். கொடி ஆடிற்று என்னும் வினைச்சொல்லில் முற்கூறப்பட்ட ஆறனுள் செயப்படுபொருள் குறைந்து வந்தது.

Scanned by CamScanner

Scanned with CamScanner

## குறிப்பு வினை (SYMBOLIC VERB)

ஒரு வினைச்சொல் குறிப்பாகக் காலத்தை உணர்த்துமானால் அது வினைக் குறிப்பு எனப்படும். இது செய்பவன் முதலான ஆறனுள் வினை முதலாகிய கருத்தாவை மட்டும் வெளிப்படையாகக் காட்டும். காலத்தையும் தொழிலையும் குறிப்பாகக் காட்டும்.

### குறிப்பு வினையின் இலக்கணம்

321. பொருள்முதல் ஆறினும் தோற்றிமுன் ஆறனுள்
வினைமுதல் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே.

[இ-ள்] பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறன் அடிப்படையில் தோன்றி முன் சொல்லப்பட்ட செய்பவன், கருவி, போன்ற ஆறனுள் செய்பவனை மட்டும் விளக்குவதே குறிப்பு வினைச்சொல்லின் இலக்கணம் ஆகும். [எ-டு]

1.பொன்னன்; குழையன் → பொருள்
2.அகத்தினன்; புறத்தினன் → இடம்
3.ஆதிரையான்; ஓணத்தான் → காலம்
4.காலன்; செங்கண்ணன் → சினை
5.கரியன்; நல்லன் → குணம்
6.நடையன்; சொல்லன் → தொழில்.

### தெரிநிலை வினை, குறிப்பு வினைகளை அறியும் முறை

ஒரு வினைச்சொல்லைப் பிரித்துப் பார்க்கின்ற போது பகுதி ஏவலாக இருந்தால் அது தெரிநிலை வினையாகும். [எ-டு]

நடந்தான் → நட + த் (ந்) + த் + ஆன்
ஓடினான் → ஓடு (ஓடி) + இன் + ஆன்
பார்த்தான் → பார் + த் + த் + ஆன்

இவற்றின் பகுதிகள் நட, ஓடு, பார் என ஏவலாக அமைந்ததால் தெரிநிலை வினை ஆயின.

பகுதி, பொருட் பெயராகவோ பண்புப் பெயராகவோ அமைந்தால் அது வினைக்குறிப்பு ஆகும். [எ-டு]

குழையன் → குழை + அன்
கரியன் → கருமை + அன்

இவற்றின் பகுதிகள் குழை, கருமை எனப் பெயர்களாக நின்றதால் வினைக்குறிப்பு ஆயின. மேலும் குழையன், கரியன் என்பவை காலத்தைத் தெளிவாகக் காட்டாததால் வினைக்குறிப்பு ஆயின.

Scanned by CamScanner
Scanned with CamScanner

**வினைச் சொற்களின் வகைகள் [3]**

322. அவைதாம்,
முற்றும்[1] பெயர்[2]வினை[3] எச்சமும் ஆகி
ஒன்றற்கு உரியவும் பொதுவும் ஆகும்.

[இ-ள்] தெரிநிலையாகவும் குறிப்பாகவும் வரும் என்ற வினைச்சொற்கள் 1. முற்றுவினை 2. பெயரெச்சம் 3. வினையெச்சம் என மூவகைப்படும். அவை திணை, பால், இடங்களுள் ஒன்றற்குச் சிறப்பாகியும் பலவற்றிற்குப் பொதுவாகியும் வரும். [எ-டு]

1. அவன் வந்தான் → தெரிநிலை வினைமுற்று
   அவன் நல்லன் → குறிப்பு வினைமுற்று
2. வந்த பெண் → பெயரெச்சம்
3. உறங்கி எழுந்தான் → வினையெச்சம்

சிறப்பாயும் பொதுவாயும் வருவன 1. தன்வினை; பிறவினை 2. விதிவினை; மறைவினை 3. முதல் வினை; சினை வினை 4. பெயரெச்சம்; வினையெச்சம் 5. செய்வினை; செயப்பாட்டு வினை என்பனவாம் [எ-டு]

**1. தன்வினை; பிறவினை**

பிரிவர் → தன் வினை; பிரிப்பர் → பிறவினை
வெளுத்தல் → தன்வினை; பிறவினைகட்குப் பொது

**2. உடன்பாட்டு [விதி] வினை; எதிர்மறை வினை**

உண்பான் → உடன்பாட்டு வினை; உண்ணான் → எதிர்மறை
செய்யாய் → உடன்பாடு, எதிர்மறை என்னும் இரண்டுக்கும் பொது

**3. முதல் வினை; சினை வினை**

அவன் நடந்தான் → முதல் வினை; கால் நடந்தது → சினைவினை
வனம் பொலிந்தது → முதல், சினை என்னும் இரண்டுக்கும் பொது

**4. பெயரெச்சம்; வினையெச்சம்**

தேடிய பொருள் → பெயரெச்சம்; தேடிய வந்தான் → வினையெச்சம்
தேடிய → பெயரெச்சம், வினையெச்சம் இரண்டுக்கும் பொது

**5. செய்வினை; செயப்பாட்டு வினை**

உண்ட சாத்தன் → செய்வினை; உண்ட சோறு → செயப்பாட்டு வினை
புலி கொல் யானை → புலியைக் கொன்ற யானை (2 ஆம் வே.)
புலியால் கொல்லப்பட்ட யானை (3 ஆம் வே.)
மீன் விழுங்கினான் → மீனை விழுங்கினான் (2 ஆம் வே.)
மீனால் விழுங்கப்பட்டான் (3 ஆம் வே.)

இவை செய்வினை, செயப்பாட்டு வினை என்னும் இரண்டுக்கும் பொதுவானது ஆகும்.

Scanned by CamScanner

Scanned with CamScanner

## வினை முற்று (FINITE VERB)

ஒரு வினைச்சொல்லில் கருத்து முற்றுப் பெற்றிருப்பின் அதனை முற்றுவினை எனக் கூறுவர். இதனை வினைமுற்று என்றும் அழைப்பர். இது 1. தெரிநிலை வினைமுற்று 2. குறிப்பு வினைமுற்று என இருவகைப்படும்.

### வினைமுற்றின் இலக்கணம்

323. பொதுஇயல்பு ஆறையும் தோற்றிப்[1] பொருட்பெயர்
முதல்அறு பெயரலது ஏற்பில[2] முற்றே.

[இ-ள்] 1. பலவகை வினைகளுக்கும் பொதுவாகிய செய்பவன் முதலிய ஆறையும் தோன்ற செய்யும் 2. பொருள் முதலிய அறுவகைப் பெயர்களையும் அன்றிப் பிறவற்றைப் பயனிலையாக ஏற்காதவை தெரிநிலையும் குறிப்பும் ஆகிய வினைமுற்றுக்கள் ஆகும். [எ-டு]

| அறுவகைப்பெயர் | | தெரிநிலைவினைமுற்று | குறிப்புவினைமுற்று |
|---|---|---|---|
| 1. பொருள் | → | செய்தான் அவன் | நல்லன் அவன் |
| 2. இடம் | → | குளிர்ந்தது நிலம் | வலியது நிலம் |
| 3. காலம் | → | சென்றது கார் | நல்லது கார் |
| 4. சினை | → | நீண்டது கை | சிறியது கை |
| 5. குணம் | → | நிறைந்தது நன்மை | நல்லது பசப்பு |
| 6. தொழில் | → | ஒழிந்தது பிறப்பு | கொடியது இறப்பு. |

### தெரிநிலை வினைமுற்றின் பாகுபாடு [27]

324. ஒருவன்முதல் ஐந்தையும் படர்க்கை இடத்தும்[1]
ஒருமைப் பன்மையைத் தன்மை[2]முன் னிலையினும்3
முக்கா லத்தினும் முரண முறையே
மூஐந்து இருமூன்று ஆறாய் முற்று
வினைப்பதம் ஒன்றே மூஒன் பானாம்.

[இ-ள்] ஆண்பால் முதலாகிய இருதிணை, ஐம்பால் வினை முற்றுக்களையும் 1. படர்க்கை இடத்திலும் அஃறிணைக்குரிய ஒருமை, பன்மை வினைமுற்றுக்களைத் 2. தன்மை இடத்திலும் 3. முன்னிலை இடத்திலும் வைத்து முக்காலங்களால் பெருக்கிக் கணக்கிட வேண்டும். மேற்குறிப்பிட்ட முறையில் படர்க்கை வினைமுற்றுகள் பதினைந்தும் தன்மை வினைமுற்றுக்கள் ஆறும் முன்னிலை வினைமுற்றுக்கள் ஆறுமாகி தெரிநிலை வினை முற்றுச் சொல் ஒன்றுமே இருபத்தேழாகும். [எ-டு]

#### 1. படர்க்கை வினை முற்று [ 15 ]

| ஐம்பால் | படர்க்கை | இறப்பு | நிகழ்வு | எதிர்வு |
|---|---|---|---|---|
| ஆண்பால் | அவன் | நடந்தான் | நடக்கின்றான் | நடப்பான் |
| பெண்பால் | அவள் | நடந்தாள் | நடக்கின்றாள் | நடப்பாள் |
| பலர்பால் | அவர் | நடந்தார் | நடக்கின்றார் | நடப்பார் |
| ஒன்றன்பால் | அது | நடந்தது | நடக்கின்றது | நடப்பது |
| பலவின்பால் | அவை | நடந்தன | நடக்கின்றன | நடப்பன |

Scanned by CamScanner

Scanned with CamScanner

**2. தன்மை வினைமுற்று [6]**

| பால் | தன்மை | இறப்பு | நிகழ்வு | எதிர்வு |
|---|---|---|---|---|
| ஒருமை | நான் | வந்தேன் | வருகின்றேன் | வருவேன் |
| பன்மை | நாம் | வந்தோம் | வருகின்றோம் | வருவோம் |

**3. முன்னிலை வினைமுற்று [6]**

| பால் | முன்னிலை | இறப்பு | நிகழ்வு | எதிர்வு |
|---|---|---|---|---|
| ஒருமை | நீ | வந்தாய் | வருகின்றாய் | வருவாய் |
| பன்மை | நீர் | வந்தீர் | வருகின்றீர் | வருவீர் |

**ஆண்பால் படர்க்கை வினைமுற்று [2]**

*325. அன்[1]ஆன்[2] இறுதிமொழி ஆண்பால் படர்க்கை.*

[இ-ள்] 1. அன் 2. ஆன் என்னும் இரண்டு விகுதியையும் இறுதியில் உடைய சொற்கள் உயர்திணை ஆண்பாலுக்குரிய படர்க்கைத் தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு முற்றும் ஆகும். [எ-டு]

நடந்தனன்; நடந்தான் → அன், ஆன் (தெரிநிலை வினை முற்று)
குழையினன்; குழையான் → அன், ஆன் (குறிப்பு வினைமுற்று)

**பெண்பால் படர்க்கை வினைமுற்று [2]**

*326. அள்[1]ஆள்[2]இறுமொழி பெண்பால் படர்க்கை.*

[இ-ள்] 1. அள் 2. ஆள் என்னும் இரண்டு விகுதியையும் இறுதியில் உடைய சொற்கள் உயர்திணைப் பெண்பாலுக்கு உரிய படர்க்கைத் தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு முற்றும் ஆகும். [எ-டு]

நடந்தனள்; நடந்தாள் → அள், ஆள் (தெ.வி.மு.)
குழையினள்; குழையாள் → அள், ஆள் (கு.வி.மு.)

**பலர்பால் படர்க்கை வினைமுற்று [4]**

*327. அர்[1]ஆர்[2] பவ்வூர் அகரம்[3]மார்[4] ஈற்ற*
*பல்லோர் படர்க்கைமார் வினையொடு முடிமே.*

[இ-ள்] 1. அர் 2. ஆர் 3. ப 4. மார் என்கின்ற நான்கு விகுதிகளையும், இறுதியில் உடைய சொற்கள் உயர்திணைப் பலர்பால் படர்க்கைத் தெரிநிலைவினைமுற்றும் குறிப்பு வினைமுற்றும் ஆகும். இவற்றுள் மார் ஈற்று வினைமுற்று முற்கூறப்பட்ட பெயரைக் கொண்டு முடிவதோடு வினையையும் கொண்டு முடியும். [எ-டு]

நடப்பர்; நடப்பார் → அர், ஆர்
நடப்ப; கொண்மார் → ப, மார் - தெரிநிலை வினைமுற்று
குழையர்; குழையார் → அர், ஆர் - குறிப்பு வினைமுற்று
கொண்மார் (கொள்வார்) வந்தார் → மார் வினைகொண்டு முடிந்தது.

Scanned by CamScanner
Scanned with CamScanner

**ஒன்றன்பால் படர்க்கை வினைமுற்று [ 3 ]**

328. து[1] று[2] டு[3]க் குற்றிய லுகர ஈற்ற
ஒன்றன் படர்க்கைடுக் குறிப்பின் ஆகும்.

[இ-ள்] 1. து 2. று 3. டு என்னும் மூன்று விகுதிகளையும் இறுதியில் உடைய குற்றியலுகர ஈற்றுச் சொற்கள் அஃறிணை ஒன்றன்பால் படர்க்கைத் தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு முற்றும் ஆகும். இவற்றுள் டு என்னும் குற்றியலுகர ஈற்றுச் சொல் தெரிநிலை வினைமுற்றில் வாராது. குறிப்பு வினைமுற்றில் மட்டுமே வரும். [எ-டு]

நடந்தது → து
கூயிற்று → று
} தெரிநிலை வினைமுற்று

குழையது → து
அற்று → று
பொருட்டு → டு
} குறிப்பு வினைமுற்று.

**பலவின்பால் படர்க்கை வினைமுற்று [ 2 ]**

329. அஆ ஈற்ற பலவின் படர்க்கை[1]
ஆவே எதிர்மறைக் கண்ணது[2] ஆகும்.

[இ-ள்] 1. அ, ஆ என்னும் இரண்டு ஈற்றுச் சொற்கள் அஃறிணைப் பலவின்பால் படர்க்கைத் தெரிநிலை வினைமுற்றும் குறிப்பு முற்றும் ஆகும். அவற்றுள் 2. ஆ என்ற விகுதி எதிர்மறையில் மட்டும் வரும். [எ-டு]

நடந்தன → அ (தெரிநிலை வினைமுற்று)
குழையின → அ (குறிப்பு வினைமுற்று)
நடவா → ஆ (எதிர்மறை வினைமுற்று).

## இருதிணைப் பொதுவினை

இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாகப் பொருந்தி வரும் வினைகள் பல. அவை இருதிணைப் பொதுவினை என அழைக்கப்பெறும்.

**இருதிணைப் பொதுவினைகள் [ 8 ]**

330. தன்மை[1] முன்னிலை[2] வியங்கோள்[3] வேறு[4] இலை[5]
உண்டு[6] ஈர் எச்சம்[8] இருதிணைப் பொதுவினை.

[இ-ள்] 1. தன்மை வினைமுற்றுக்கள் 2. முன்னிலை வினைமுற்றுக்கள் 3. வியங்கோள் வினைமுற்றுக்கள் 4. வேறு 5. இல்லை 6. உண்டு என்னும் (இம்மூன்று) குறிப்பு வினைமுற்றுக்கள் 7. பெயரெச்சம் 8. வினையெச்சம் ஆகியவை இருதிணைக்கும் உரிய பொதுவினைகள் ஆகும்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

இவற்றுள் தன்மை முதலாக உண்டு ஈறாகிய ஆறும் வினைமுற்றுக்கள் ஆகும். எஞ்சிய இரண்டும் எச்ச வினை ஆகும்.

| | | |
|---|---|---|
| வியங்கோள் (எதிர்காலம்) | - தெரிநிலை வினை | - 1 |
| வேறு, இல்லை, உண்டு | - குறிப்பு வினை | - 3 |
| தன்மை, முன்னிலை, பெயர், வினை | - பொது | - 4 |

**பிற பொதுவினைகள்**

1. செய்யும் என்னும் முற்று, படர்க்கைப் பலர்பாலைத் தவிர்ந்த நான்கு பால்களுக்கும் பொதுவாக வரும். [எ-டு]

   அவன், அவள், அது, அவை → உண்ணும்

2. யார் என்னும் வினாப்பொருளைத் தரும் குறிப்பு வினைமுற்று உயர்திணை முப்பாலுக்கும் பொதுவாய் வரும். [எ-டு]

   அவன், அவள், அவர் → யார்

3. எவன் என்னும் வினாப் பொருளைத் தரும் குறிப்பு வினைமுற்று அஃறிணை இருபாலுக்கும் பொதுவாய் வரும். [எ-டு]

   அஃது, அவை → எவன்

**தன்மை ஒருமை வினைமுற்று [8]**

331. கு[1]டு[2]து[3]று[4] என்னும் குன்றிய லுகரமோடு
அல்[5]அன்[6] என்[7]ஏன்[8] ஆகும் ஈற்ற
இருதிணை முக்கூற்று ஒருமைத் தன்மை.

[இ-ள்] 1. கு 2. டு 3. து 4. று என்னும் குற்றியலுகர விகுதிகள் 5. அல் 6. அன் 7. என் 8. ஏன் என்னும் மெய்யீற்று விகுதிகள் ஆகிய எட்டனையும் இறுதியில் உடைய சொற்கள் உயர்திணை ஆண்பால், பெண்பால், அஃறிணை ஒன்றன்பால் என்னும் மூன்றுக்கும் பொதுவாகிய தன்மை ஒருமை வினைமுற்றாகும்.

குற்றியலுகர ஈற்றுச் சொற்கள் நான்கும் தாமே தெளிவாகக் காலம் காட்டுதலால் குறிப்பு வினைக்கு வாரா. அல் விகுதி இடைநிலையோடு சேர்ந்து எதிர்காலத்தில் மட்டும் வரும். [எ-டு]

| | |
|---|---|
| உண்கு (உண்பேன்) உண்டு (உண்டேன்)<br>வந்து (வந்தேன்) சென்று (சென்றேன்) | } குற்றியலுகர ஈறுகள் தாமே காலம் காட்டின |

வந்தனன்; வந்தனென்; வந்தேன் → அன், என், ஏன்

உண்பல்; செய்வல்; → ப, வ என்னும் இடைநிலையோடு கூடி 'அல்' எதிர்காலம் காட்டியது.

Scanned by CamScanner

Scanned with CamScanner

**உளப்பாட்டுத் தன்மைப்பன்மை வினைமுற்று** [ 2+3+4=9 ]

332. அம்ஆம் என்பன முன்னிலை யாரையும்[1]
எம்ஏம் ஓம்இவை படர்க்கை யாரையும்[2]
உம்மூர் கடதற இருபா லாரையும்[3]
தன்னொடு படுக்கும் தன்மைப் பன்மை.

[இ-ள்] 1. அம், ஆம் என்னும் இரண்டு விகுதிகளை ஈற்றில் கொண்ட சொற்கள் முன்னிலை இடத்தார்க்குரிய வினைமுற்றுக்கள் ஆகும் 2. எம், ஏம், ஓம் என்னும் மூன்று விகுதிகளை ஈற்றில் கொண்ட சொற்கள் படர்க்கை இடத்தார்க்குரிய வினைமுற்றுக்கள் ஆகும் 3. உம் ஊர்ந்த க, ட, த, ற (கும், டும், தும், றும்) என்னும் விகுதிகளை ஈற்றில் கொண்ட சொற்கள் முன்னிலை, படர்க்கை என்னும் ஈரிடத்தாரையும் தன்னுடன் கூட்டும் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்றுக்கள் ஆகும்.

தன்மைப் பன்மையாவது தன்னோடு சார்ந்தாரையும் கூட்டி உரைப்பதாகும். அது தனித்து இயலாதது. இதனை உளப்பாட்டுத் தன்மைப் பன்மை என்றும் கூறுவர்.

அம், ஆம் என்பன தன்னோடு முன்னிலையாரையும் உளப்படுத்தும். எம், ஏம், ஓம் என்பன தன்னோடு படர்க்கையாரையும் உளப்படுத்தும். கும், டும், தும், றும் என்பன தன்னோடு முன்னிலையாரையும் படர்க்கையாரையும் உளப்படுத்தும். [எ-டு]

**உண்பம் யாம்** (யானும் நீயும்) → அம், ஆம்
**உண்பெம் யாம்** (யானும் அவனும்) → எம், ஏம், ஓம்
**உண்கும் யாம்** (யானும் நீயும் அவனும்) → கும், டும், தும், றும்

**தன்மைப் பன்மை வினைமுற்றுக்கள்**

1. **உண்டனம், உண்டாம்** → அம், ஆம் (தன்மை+முன்னிலை) தெ.வி.மு.
**தாரினம், தாரினாம்** → அம், ஆம் (தன்மை + முன்னிலை) கு.வி.மு.

2. **உண்டனெம், உண்டேம், உண்டோம்**
**தாரினெம், தாரினேம், தாரினோம்** } எம், ஏம், ஓம் (தன்மை + படர்க்கை)

3. **உண்கும், உண்டும்**
**வந்தும், சென்றும்** } கும், டும், தும், றும் (தன்மை + முன்னிலை + படர்க்கை)

## வினை கொண்டு முடியும் முற்றுக்கள்

தெரிநிலை, குறிப்பு ஆகிய இருவகை வினைமுற்றுக்களும் பெயரைக் கொண்டு முடிவதே பொதுவிதி ஆகும். இருப்பினும் சில முற்றுக்கள் வினையைக் கொண்டும் முடியும். இவ்வாறு அமையும் முற்றுக்கள் வினை கொண்டு முடியும் முற்றுக்கள் ஆகும்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

**வினை கொண்டு முடியும் தன்மை வினைமுற்றுக்கள்** [உ]

333. செய்குஎன் ஒருமையும்[1] செய்கும்என் பன்மையும்[2]
வினையொடு முடியினும்[3] விளம்பிய முற்றே.

[இ-ள்] 1. செய்கு என்பது தன்மை ஒருமை வினைமுற்றாகும் 2. செய்கும் என்பது தன்மைப்பன்மை வினைமுற்றாகும். இவ்விரண்டும் 3. பெயர் கொண்டு முடிதலே அன்றி வினை கொண்டும் முடியும். அவ்வாறு முடிந்தாலும் முன் சொல்லப்பட்ட முற்று என்னும் தன்மையிலிருந்து மாறுபடா. [எ-டு]

**பெயர் கொண்டு முடிதல்**

| | |
|---|---|
| காண்கு யான் (காண்பேன் யான்)<br>காண்கும் யாம்(காண்போம் யாம்) | செய்கு, செய்கும் என்பன யான், யாம் என்னும் பெயரைக் கொண்டு முடிந்தன. |

**வினை கொண்டு முடிதல்**

| | |
|---|---|
| உண்கு வந்தேன் (உண்பேன் வந்தேன்)<br>உண்கும் வந்தோம் (உண்போம் வந்தோம்) | செய்கு, செய்கும் என்பன வினையைக் கொண்டு முடிந்தன |

**உளப்பாட்டு முன்னிலைப்பன்மை வினைமுற்று**

334. முன்னிலை கூடிய படர்க்கையும் முன்னிலை.

[இ-ள்] தன்மையோடு கூடிய முன்னிலையும் படர்க்கையும் தன்மைஆகும். அது போல முன்னிலையோடு கூடிய படர்க்கையிடச் சொல் முன்னிலை ஆகும். [எ-டு]

| | | | |
|---|---|---|---|
| உண்டனிர் | இர் | நீயும் அவனும் | என்பனவற்றுள் அவன் என்னும் படர்க்கை முன்னிலை ஆயிற்று. |
| உண்மின் | மின் | | |
| குழையீர் | ஈர் | | |

**முன்னிலை ஒருமை வினைமுற்று**

335. ஐஆய் இகர ஈற்ற மூன்றும்[1]
ஏவலின் வருஉம் எல்லா ஈற்றவும்[2]
முப்பால் ஒருமை முன்னிலை மொழியே.

[இ-ள்] (1) 1. ஐ 2. ஆய் 3. இ என்னும் மூன்று விகுதிகளை ஈற்றில் கொண்ட சொற்கள் (2) விகுதி குன்றியும் குன்றாமலும் ஏவலில் வருகின்ற இருபத்து மூன்று ஈற்றுச் சொற்கள் (எழுத்து. நூ.137) ஆகியவை ஆண், பெண், ஒன்று என்னும் ஒருமைப் பால்களுக்குப் பொதுவாக வருகின்ற முன்னிலை ஒருமை வினைமுற்றுக்கள் ஆகும். [எ-டு]

**உண்டனை, உண்டாய், உண்டி** → ஐ, ஆய், இ (தெ.வி.மு.)
**குழையினை, குழையினாய், வில்லி** → ஐ, ஆய், இ (கு.வி.மு.)

Scanned by CamScanner
Scanned with CamScanner

மேற்கூறப்பட்ட அல், ஆல், ஏல் என்னும் விகுதிகளை உடைய வினைச்சொற்களும் முன்னிலை ஒருமையாக வரும். ஆய் விகுதி இல்லாமல் பகுதியாய் வருகின்ற வினைச்சொற்களும் முன்னிலை ஏவல் வினைமுற்றுக்கள் ஆகும். [எ-டு]

**உண்ணல், மறால், உண்ணேல்** → (அல், ஆல், ஏல்) → எதிர்மறை வினைமுற்று.

**சில ஏவல் வினைகளுக்குச் சிறப்பு விதி**

336. *முன்னிலை முன்னர் ஈயும் ஏயும்*
*அந்நிலை மரபின் மெய்ஊர்ந்து வருமே.*

[இ-ள்] முன்னிலை, ஏவல் ஒருமை வினைமுற்றின் முன்னர் ஈ, ஏ என்னும் ஈறுகள் அவ்விடத்தில் நிற்பதற்குரிய யாதானும் ஒரு மெய்யை ஊர்ந்து வரும். [எ-டு]

செல் - சென்றீ பெருமநின் தகைக்குநர் யாரே
நில் - அட்டில் ஓலை தொட்டனை நின்மே

இவ் எடுத்துக்காட்டுக்களில் ஈயும், ஏயும் முறையே றகர ஒற்றையும் மகர ஒற்றையும் ஊர்ந்து வந்தன. இவ்விரு எழுத்துக்களும் எழுத்துப்பேறு ஆகும்.

**முன்னிலைப் பன்மை வினைமுற்று [ 3 ]**

337. *இர்ஈர் ஈற்ற இரண்டும் இருதிணைப்*
*பன்மை[1] முன்னிலை மின்அவற்று ஏவல்[2]*

[இ-ள்] *1.* இர், ஈர் என்கின்ற இரண்டு விகுதிகளையும் ஈற்றில் உடைய சொற்கள் இரு திணைகளுக்கும் பொதுவாகிய முன்னிலைப் பன்மை வினைமுற்றாகும் 2. மின் என்னும் விகுதியை ஈற்றில் உடைய சொற்கள் முன்னிலை ஏவல் பன்மை வினைமுற்றாகும். [எ-டு]

**முன்னிலைப் பன்மை**

**உண்டனிர்; உண்டீர்** → இர், ஈர் (தெ.வி.மு.)
**குழையிர்; குழையீர்** → இர், ஈர் (கு.வி.மு.)

**ஏவல் பன்மை**

**உண்மின்** → மின்

புதியன புகுதலாக ஏவல் பன்மைக்கு ஈர், உம் விகுதிகளும் வரும்.
(எ-டு) **உண்ணீர்; உண்ணும்** → ஈர், உம்.

## வியங்கோள் வினைமுற்று

வியங்கோள் என்பது ஏவல் கொள்ள வருவதாகும். (வியம்-ஏவல்; கோள் - கொள்ளுதல்) பல விகுதிகளைப் பெற்று வாழ்த்தல் முதலாகிய பொருள்களில் வருவதே வியங்கோளின் இயல்பாகும்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

நன்னூல்

1. பெயரியல்

1. சொல் இலக்கணம் தருக?

"ஒரு மொழி தொடர்மொழி பொது மொழி என்றா
இருதிணை ஐம்பால் பொருளையும் தன்னையும்
மூவகை இடத்தும் வழக்கொடு செய்யுளின்
வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே"

சொல் எனப்படுவது 1. ஒருமொழி, தொடர்மொழி, பொதுமொழி என்னும் மூன்று வகைகளை உடையது 2. இருதிணையையும் ஐம்பாற் பொருள்களையும் விளக்குவது 3. அவற்றை அன்றித் தன்னையும் விளக்குவது 4. தன்மை, முன்னிலை படர்க்கை என்னும் மூன்றிடங்களிலும் வருவது 5. வழக்குச் சொற்களாகவும் செய்யுட் சொற்களாகவும் அமைவது 6. வெளிப்படையாகவும் குறிப்பாகவும் பொருளை விளக்குவது இவையே சொல்லின் இலக்கணம் ஆகும்.

2. மூவகை மொழி – விளக்குக?

"ஒருமொழி ஒரு பொருளனவாம், தொடர்மொழி
பலபொருளன பொது இருமையும் ஏற்பன"

பகுபதமாகவோ, பகாப்பதமாகவோ ஒரு சொல் நின்று ஒரு பொருளைத் தருவது ஒரு மொழியாகும். அவ்வகைச் சொற்கள் இரண்டு முதலாகத் தொடர்ந்து நின்று இரண்டு முதல் பல பொருள்களைத் தருவன தொடர்மொழியாகும். தனியாய் நின்று

Scanned by CamScanner
Scanned with CamScanner

ஒரு பொருளைத் தருதல், பிரித்துத் தொடர்மொழி ஆகி பல பொருள் தருதல் என்னும் இரண்டிற்கும் பொதுவாய் நிற்பன பொதுமொழி எனப்படும்.

எ.கா:

1. பூ, மண், நட, நடந்தான், நல்லன் — தனிமொழி
2. நிலம் வலிது, நிலத்தைக் கடந்தான், அதுகொல் — தொடர்மொழி
3. தாமரை — ஒருவகை மலர்
   தா + மரை — தாவுகின்ற மரை (மான்) } — பொதுமொழி

3) இரு திணைகளை விளக்குக?

திணை விளக்கம்:

திணை என்னும் சொல்லுக்குச் சாதி அல்லது குலம் என்பது பொருளாகும். உலகத்துப் பொருள்களை உயர்திணை, அஃறிணை என்னும் இரு திணைகளுக்குள் அடக்குவது மரபாகும். உயர்திணை என்பது உயர்ந்த குலம் என்னும் பொருளை உடையது. அஃறிணை என்பது அல்திணை என்னும் பொருளாகும்.

இரு திணைகள்: (உயர்திணை, அஃறிணை)

"மக்கள் தேவர் நரகர் உயர்திணை
மற்று உயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை"

மக்களும், தேவரும், நரகரும் உயர்திணை ஆவார்.

விலங்கு, மரம் போன்ற உயிருள்ள பொருள்களும் மலை, நிலம் போன்ற உயிரற்ற பொருள்களும் அஃறிணை ஆகும்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

4) பால் பகுப்பு முறையை விளக்கி வரைக?

பால் என்பதற்கும் பகுப்பு அல்லது பிரிவு என்றுப் பொருளாகும். திணைகள் பல பால்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை உயர்திணைக்கு உரியவை, அஃறிணைக்கு உரியவை என இருவகைப்படும்.

உயர்திணைக்குரிய பால்கள் :

"ஆண் பெண் பலர் என முப்பாற்று உயர்திணை"

ஆண்பால், பெண்பால், பலர்பால் என உயர்திணை மூன்று பால்களை உடையதாகும்.

ஆண்பால்:

ஆடவரைக் குறிப்பது ஆண்பால் — முருகன், அரசன்

பெண்பால்:

பெண்களைக் குறிப்பது பெண்பால் — மலர், அரசி, வள்ளி

பலர்பால்:

ஆடவர் பலரையும் பெண்கள் பலரையும் குறிப்பது பலர்பால் ஆகும். — ஆடவர், பெண்கள்

அஃறிணைக்குரிய பால்கள் :

"ஒன்றே பல என்று இருபாற்று அஃறிணை"

1. ஒன்றன்பால் 2. பலவின்பால் என அஃறிணை இரண்டு பால்களை உடையதாகும்.

ஒரு பொருளை மட்டும் குறிப்பது ஒன்றன்பாலாகும் — மரம், நாய், அது

பலவற்றையும் குறிப்பது பலவின்பாலாகும் — மரங்கள், நாய்கள், அவை

Scanned by CamScanner

Scanned with CamScanner

5) மூவிடங்களை விளக்குக?

உரையாடல்கள் நடக்கச் சொற்கள் பயின்று வரும் பொருண்மையை விளக்குவது இடம் ஆகும். அவ்விடமானது 1. தன்மை 2. முன்னிலை 3. படர்க்கை என மூன்றாக அமையும்.

"தன்மை முன்னிலை படர்க்கை மூவிடனே"

யான் – தன்மை
நீ – முன்னிலை
அவன் – படர்க்கை

6) இயல்பு வழக்கு, தகுதி வழக்கு விளக்குக?

சொற்களை வழங்கும் முறையே வழக்காகும். இது செய்யுளுக்குரிய வழக்கு, பேச்சு வழக்கு என இருவகைப்படும். அவ் இருவகை வழக்கும் இயல்பு வழக்கு, தகுதிவழக்கு என்னும் இரண்டனையாற்று அமையும்.

1. இயல்பு வழக்கு:

எப்பொருளுக்கு எச்சொல் அமைந்ததோ அப்பொருளை அச்சொல்லால் கூறுவது இயல்பு வழக்காகும். இயல்பாய் வழங்கப்படுவது இயல்பு வழக்காகும்

1. இலக்கணம் உடையது:

தொன்று தொட்டு இலக்கண நெறியாகிய மரபு இருந்து மாறாமல் வழங்கிப் பொருளை எளிமையாக வழங்குவதாகும்.

(எ.கா) நிலம், நீர், தீ

2. இலக்கணப் போலி:

இலக்கண நெறியிலிருந்து மாறி வழங்கப்படுவது. ஆயினும் இலக்கணம் உடையது போலத் தொன்று தொட்டு வழங்கி வருவதாகும்.

3. மரூஉ :

இயல்பாக வரும் சொற்களைத் தழுவி நிற்கும் சொற்கள் மரூஉ ஆகும். தொன்றுதொட்டு வராமல் அவ்வப்போது இலக்கணம் சிதைந்து வருவது. சொற்களின் சில எழுத்துக்கள் திரிந்தும் கெட்டும் வழங்குவதே மரூஉ ஆகும்.

தகுதி வழக்கு :

ஒரு பொருளை அது வழங்கும் இயல்பாய் அமைந்த சொல் உண்டு. அப்பொருளை அச்சொல்லால் கூறுவது தகுதியாகாது என கருதி அதனை வேறொரு சொல்லால் கூறுவதை தகுதி வழக்காகும். தகுதி அறிந்து வழங்குவதால் அது தகுதி வழக்காயிற்று.

1. இடக்கரடக்கல் :

நல்லோர் இருக்கின்ற இடத்தில் வெளிப்படையாகச் சொல்லத் தகாதவை மறைத்து வேறொரு சொல்லால் சொல்லுவது. இதுவே மறைத்து மொழிகிளவி ஆகும்.

(எ.கா) மலங்கழிக்கி வந்தான் — கால் கழுவி வந்தான்

2. மங்கலம் :

நன்மை அல்லாத ஒன்றை மங்கலமாகச் சொல்வது

(எ.கா) ஓலையைத் திருமுகம் என்றுரைத்தல்

3. குழூஉக்குறி :

எல்லோரும் அறிந்த ஒரு பொருளின் இயல்பான சொற்குறியை நீக்கித் தங்கள் கூட்டத்திற்கு மட்டும் விளங்கும் படியான வேறொரு சொற்குறியால் அப்பொருளைக் குறிப்பது குழூஉக்குறி என்பதாகும்.

பொற்கொல்லர் → பொன்னைப் பறி என்றல்

வேடர் → கள்ளைச் சொல்விளம்பி என்றல்

—

Scanned by CamScanner

Scanned with CamScanner

சொற்களின் பொருள் உணர்த்தும் முறையை எடுத்துரைக்க?

சொற்கள் அனைத்தும் பொருள் குறிப்பனவாக அமையும். அச்சொற்கள் குறிப்பாகவும், வெளிப்படையாகவும் விளங்கிய பொருளை உணர்த்தும். சொற்கள் பெரும்பான்மை வெளிப்படையாகவும் சிறுபான்மை குறிப்பாகவும் பொருள் உணர்த்தும்

குறிப்பாகவும், வெளிப்படையாகவும் பொருள் உணர்த்தும் முறை:

"ஒன்றொழி பொதுச்சொல் விகாரம் தகுதி
ஆகுபெயர் அன்மொழி வினைக்குறிப்பே
முதல்தொகை குறிப்போடு இன்ன பிறவும்
குறிப்பின் தருமொழி அல்லன வெளிப்படை"

1. பொதுச்சொல் 2. விகாரம் 3. தகுதி 4. ஆகுபெயர் 5. அன்மொழித்தொகை 6. குறிப்பு வினைச்சொல் 7. முதற்குறிப்புச் சொல் 8. தொகைக்குறிப்புச் சொல் 9. குறிப்புச் சொல்லுடன் பிறவெனும் தருவன போன்றவை குறிப்பாகவும், வெளிப்படையாகவும் பொருள் தருவனவாகும்.

1. பொதுச் சொல்:

'அவர் மக்கள் பெற்றோர்' என்பதில் பேர் செய்தார் (பெற்றோர்) என்னும் குறிப்பால் மக்கள் என்பது பெண்பாலை நீக்கி ஆண்பாலைக் காட்டுவது.

2. விகாரம்:

'மரைமலர்' என்பது மரை என்னும் பின்னொட்டால் தாமரையை உணர்த்துவது.

3. தகுதி:

'கால் கழுவி வந்தான்' என்பது மலம் கழுவி வந்ததனைக் குறிப்பால் உணர்த்துவது.

Scanned by CamScanner
Scanned with CamScanner

4. கருபெயர்:

'புளித்தின்றான்' என்பது புளியம் பழத்தைக் குறிப்பால் காட்டியது.

5. அன்மொழித் தொகை:

"பொற்றொடி வந்தாள்' என்பதில் ~~[illegible]~~ ~~[illegible]~~ தொடியைக் குறிக்காமல் அத்தொடி அணிந்த பெண்ணைக் குறிப்பால் தெரிவிக்கிறது.

6. குறிப்பு வினைச்சொல்:

"சோழன் வல்லன்' என்பதில் வல்லன் என்னும் பெயர்ச்சொல் சொல்லுதலில் வல்லவன் என்னும் வினைக் குறிப்புப் பொருளைத் தந்தது.

7. முதற்குறிப்பு:

'ஆத்திச்சூடி கற்றான்' என்பது ஆத்திச்சூடி எனத் தொடங்கும் நூலைக் குறிப்பால் உணர்த்தியது.

8. தொகைக்குறிப்பு:

'தமிழ் வேந்தர் மூவர்' – இதில் மூன்று என்னும் தொகை தமிழ்நாட்டை ~~ஆண்ட~~ சேர, சோழ, பாண்டியரைக் குறிப்பால் உணர்த்தியது.

9. பல வகையாய் வரும் குறிப்புச் சொற்கள்:

1. கற்கறித்து நன்கு அட்டாய் → உணவை நன்றாகச் சமைக்காமையை உணர்த்தல்
2. பறவாக் குளவி → குளவி பறப்பது; பறக்காததன் காட்டு மல்லிகையாயிற்று
3. பாயா வேங்கை → வேங்கை (புலி) பாய்வது; பாயாததான் வேங்கை மரமாயிற்று.

Scanned by CamScanner

Scanned with CamScanner

7) சொல் பாகுபாடுகளை விளக்கி உரைக்க?

சொல் – விளக்கம்:

எழுத்துக்களால் ஆவது சொல். சொல்லப்படுவதால் சொல் என்பது காரணப் பெயராகும். இது மொழி, வார்த்தை, கிளவி என்னும் வேறு பெயர்களால் குறிப்பிடும்.

சொல்லின் பாகுபாடு:

"அதுவே
இயற்சொல் திரிசொல் இயல்பின் பெயர் வினை
என இரண்டு ஆகும்; இடை உரி அடுத்து
நான்கும் ஆம் திசை வடசொல் அணுகா வழி."

சொல்லானது இயற்சொல், திரிசொல் என்னும் இயல்பினை உடைய 1. பெயர்ச்சொல் 2. வினைச்சொல் என்ற இருவகைப்படும். அவற்றுடன் 3. இடைச்சொல்லும் 4. உரிச்சொல்லும் சேர்ந்து நான்கு வகையாகும். திசைச் சொல்லும் வடசொல்லும் சேராத விடத்து.

இயற்சொல்:

இயல்பாய் அமைந்திருக்கும் பொருள் விளக்கும் சொல் இயற்சொல் ஆகும்.

"செந்தமிழ் ஆகித் திரியாது யார்க்கும்
தம்பொருள் விளக்கும் தன்மைய இயற்சொல்"

செந்தமிழ் நாட்டில் வழங்கும் சொல்லாய்த் திகழ்வது 2. திரிசொல்லைப் போலன்றிக் கற்றவர்க்கே அல்லாமல் மற்றவர்க்கும் பிறர் துணையின்றி தம் பொருளைத் தெரிவிப்பது. இத்தகைய தன்மைகளை உடைய உலக வழக்குச் சொற்களே இயற்சொற்களாகும்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

எ.கா:

மண், பொன், மரம் → பெயர் இயற்சொல்

நடந்தான், வந்தான் → வினை இயற்சொல்

அவனை, அவனால் → இடை இயற்சொல் (ஐ, ஆல் போன்றவை)

அழகு, அன்பு → உரி இயற்சொல்

திரிசொல்:

எளிதின் பொருள் அறிய இயலாதது திரிசொல்லாகும்.

"ஒருபொருள் குறித்த பலசொல் ஆகியும்
பலபொருள் குறித்த ஒருசொல் ஆகியும்
அரிது உணர் பொருளன திரிசொல் ஆகும்"

1. ஒரு பொருளையே தெரிவிக்கின்ற பல சொல்லாகியும் வரும் 2. பல பொருள்களைத் தெரிவிக்கின்ற ஒரு சொல்லாகியும் வரும் 3. இத்தன்மைகளால் கற்றவர்களால் மட்டுமே அறியப்படுகின்ற பொருளுடையவை திரி சொற்களாகும்

எ.கா:

பெயர்த்திரிசொல் — கிள்ளை, தத்தை

வினைத்திரிசொல் — படர்ந்தான், இவர்ந்தான்

இடைத்திரிசொல் — சேறும், வருதும்

உரித்திரிசொல் — (சால, உறு, தவ) மிகுதி என்னும் ஒருபொருள் குறித்த பலஉரிச்சொ

திசைச்சொல் :

பல திசைகளிலும் வழங்குகின்ற மொழிகளிலிருந்து வந்து தமிழில் வழங்கும் சொற்கள் திசைச் சொல் எனப்படும்.

"செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தும்
ஒன்பதிற்று இரண்டினில் தமிழ்ஒழி நிலத்தும்
தங்குறிப் பினவே திசைச்சொல் என்ப"

செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டு கொடுந்தமிழ் நாடுகள் உள்ளன. இவை இணைந்த இத்தமிழ்நாட்டைச் சுற்றிப் பதினெட்டு மொழிகள் பேசப்படுகின்றன. திசைச்சொற்கள் இரண்டு வகைப்படும். அவை 1. செந்தமிழ்நாட்டைச் சேர்ந்த பன்னிரு நிலங்களில் இருந்து வழங்குவன 2. பிறமொழி பேசுகின்ற நாடுகளில் இருந்து வந்து தமிழ் நிலத்தில் வழங்குவன எனலாம்.

திசைச் சொல்லாக வழங்கும் பன்னிரு நிலச் சொற்கள் :

1. பசுவை பெற்றம் என்றல் — தென்பாண்டி நாட்டுச் சொற்கள்
2. தாயை தள்ளை என்றல் — குட்ட நாட்டுச் சொல்
3. தந்தையை அச்சன் என்றல் — குட நாட்டுச் சொல்
4. வஞ்சரைக் கையர் என்றல் — கற்கா நாட்டுச் சொல்
5. தோட்டத்தைக் கிழார் என்றல் — வேணாட்டுச் சொல்
6. சிறுகுளத்தைப் பாழி என்றல் — பூழி நாட்டுச் சொல்
7. வயலைச் செய் என்றல் — பன்றி நாட்டுச் சொல்
8. சிறுகுளத்தை கேணி என்றல் — அருவா நாட்டுச் சொல்
9. புளியை எகின் என்றல் — அருவா வடதலை நாட்டுச் சொல்
10. தோழனை எலுவன் என்றல் — சீத நாட்டுச் சொல்

Scanned by CamScanner
Scanned with CamScanner

... பெண்ணை ... என்றல் — மலையாள நாட்டுச் சொல்

2. தாயை ஆய் என்றல் — பூழி நாட்டுச் சொல்

பிற நாட்டுத் திசைச் சொற்கள்:

சோற்றைக் கூழ் என்றல் — துளுவ மொழிச் சொல்

ரூபா என்பதை அக்ஷா என்றல் — சிங்கள மொழிச் சொல்

அப்பளத்தைச் ஹப்பளம் என்றல் — கன்னட மொழிச் சொல்

சொன்னதைச் செப்புதல் என்றல் — தெலுங்கு மொழிச் சொல்

வடசொல்:

ஆரிய மொழியாகிய சமஸ்கிருத மொழியிலிருந்து தமிழில் வழங்கும் சொற்கள் வடசொல் என்றழைக்கப்படும்.

"பொது எழுத்தால் சிறப்பு எழுத்தாலும்
ஈர் எழுத்தாலும் இயைவன வடசொல்."

1. ஆரிய மொழிக்கும் தமிழ் மொழிக்கும் பொதுவாய் உள்ள எழுத்துக்களால் ஆனவை 2. ஆரிய மொழிக்கே உரிய சிறப்பு எழுத்துக்களால் திரிந்து ஆனவை 3. பொதுவாகவும் சிறப்பாகவும் உள்ள எழுத்துக்களாலும் ஆனவை என மூன்று நிலையில் தமிழ்ச்சொல் போன்று தமிழ்நாட்டில் வழங்கும் ஆரியச் சொற்கள் வடசொற்களாகும்.

பெயர்ச்சொல் வகையினை நூற்பா வழி விளக்குக?

ஒரு பொருளின் பெயரையோ இடத்தின் பெயரையோ காலத்தின் பெயரையோ குறிக்கும் சொல் பெயர்ச்சொல் ஆகும்.

"இடுகுறி காரண மரபோடு ஆக்கம்
தொடர்ந்து தொழில் அல காலம் தோற்றா
வேற்றுமைக்கு இடனாய்த் திணைபால் இடத்தொன்று
ஏற்பவும் பொதுவும் ஆவன பெயரே.

Scanned by CamScanner

Scanned with CamScanner

பெயர்ச்சொல்லானது 1. இடுகுறியாகவோ காரணம் பற்றியோ அமையும் 2. அப்பெயர்கள் மரபு பற்றியோ ஆக்கம் பற்றியோ வரும் 3. வினையாலணையும் பெயர் தவிரப் பிற பெயர்கள் காலம் காட்டாது 4. அவை வேற்றுமை உருபுகள் மட்டும் சேர்ந்து இயலாய் வரும் 5. இருதிணை, ஐம்பால், மூன்று இடங்களுள் ஒன்றற்கு உரியதாகவும் பலவற்றிற்கு பொதுவாய் வரும்.

இடுகுறிப்பெயர்: காரணம் இன்றி ஒரு பொருளுக்குத் தொன்றுதொட்டு முன்னோரால் இடப்பட்டது.

காரணப்பெயர்: காரணத்தால் அமைவது

மரபுப்பெயர்: ஒருவரால் ஆக்கப்படாமல் தொன்று தொட்டு வழங்கி வருவது.

ஆக்கப்பெயர்: புதியதாக ஒருவரால் உண்டாக்கப் பெறுவது.

உயர்திணை ஆண்பாற் பெயர்கள்:

"அவற்றுள்,
கிளை எண் குழூஉ முதல் பல்பொருள் திணைதேசம்
ஊர்வான் அகம்புறம் முதல் நிலன் யாண்டு
இருது மதிநாள் ஆதிக் காலம்
தோள் குழல் மார்பு கண் காது முதல் உறுப்பு
அளவு அறிவு ஒப்பு வடிவு நிறம் கதி
சாதி குடி சிறப்பு ஆதிப் பல் குணம்
ஓதல் ஈதல் ஆதிப் பல்வினை
இனை அடை அட்டு வினைப்பிற மற்றொடு
உற்ற னவ்வீறு நம்பி ஆடூஉ
விடலை கோவேள் குரிசில் தோன்றல்
இன்னன ஆண்பெயர் ஆகும் என்ப"

Scanned by CamScanner
Scanned with CamScanner

மேற்குறிப்பிட்ட பெயர் 1. சிற்றூர், எண்ணிக்கை, கட்டம் முதலிய பல பொருள்களின் இடமாகத் தோன்றும் 2. ஆவணத்திரளை, நாடு, உலகம், அகம், புறம் முதலிய இடங்களை அடிப்படையாகக் கொண்டு அமையும். 3. ஆண்டு, மாதம், வாரம், நாள் முதலிய காலங்களைக் கொண்டு தோன்றும் 4. தோள், மயிர், நெஞ்சம், கண், காது முதலிய உறுப்புகளால் அமையும் 5. அழகு, அறிவு, துப்பு, வயது, நிறம் பிறப்பு, சாதி, குலம், சிறப்பு ஆகிய இவைப்பெயர் முதலியவற்றைக் கொண்டு அமையும் 6. படித்தல், கொடுத்தல் முதலிய தொழில்களைக் கொண்டு பெயர்பெறும் 7. மேலும் முதலான இவற்றையும் அடுத்து வருகின்ற சிட்டு, மனை, மா, ஊர் என்னும் நான்கின் அடியாகவும் பெயர் தோன்றும். இவ்வாறு அமைகின்ற காரணப் பெயர்களை 8. நம்பி, நங்கை, விடலை, கோ, வேள், கிள்ளி, தோன்றல் ஆகிய பெயர்களும் இவை போன்றன பிறவும் உயர்திணை ஆண்பாற் பெயர்கள் என்று அழைக்கப்படும்.

1. பொருளால் அமையும் பெயர்கள்:

சுற்றத்தால் வரும் பெயர் — தமன், நமன்

எண்ணால் வரும் பெயர் — ஒருவர், ஒருவன்

2. இடத்தால் அமையும் பெயர்கள்:

நாட்டால் வரும் பெயர் — சீனத்தான், சோழியன்

ஊரால் வரும் பெயர் — பட்டினத்தான், கருவூரான்

3. காலத்தால் வரும் பெயர்கள்:

ஆண்டால் வரும் பெயர்கள் — பிரபவன், மூவாட்டையான்

பருவத்தால் வரும் பெயர்கள் — வேனிலான், காரான்

4. உறுப்பால் வரும் பெயர்கள்:

தோளால் வரும் பெயர்கள் — திண்தோளான், பெருந்தோளான்

மார்பால் வரும் பெயர் — மணிமார்பன், அகல்மார்பன்

Scanned by CamScanner

Scanned with CamScanner

5. குணத்தால் அமையும் பெயர்கள்:

அளவால் வரும் பெயர் — பெரியன், சிறியன்

அறிவால் வரும் பெயர் — அறிஞன், புலவன்

6. தொழிலால் அமையும் பெயர்கள்:

ஓதலால் வரும் பெயர் — ஓதுவான், பாடுவான்

ஈதலால் வரும் பெயர் — ஈவான், கொடையாளன்

7. இடைச் சொல்லால் வரும் பெயர்கள்:

சுட்டால் வரும் பெயர் — அவன், இவன், உவன்

வினாவால் வரும் பெயர் — எவன், ஏவன், யாவன்

8. உயர்ச்சிப் பெயர் — நம்பி, அகவெ, மடவை, கோ

மெய்ச்சிப் பெயர் — ஏவன், குரிசில், தோன்றல்

உயர்திணைப் பெண்பாற் பெயர்கள்:

"கிளை முதலாகக் கிளந்த பொருள்களுள்
எவ்வொன்று இகரத்து ஈற்ற ஈறவும்
சேய் செவிலி மகடூஉ நங்கை
தையலோடு இன்னன பெண்பால் பெயரே"

சூத்திரம் முதலாக மேற்கூறப்பட்ட சூத்திரத்தில் வகுத்துச் சொல்லப்பட்ட பெயர்களுள் 1. ஐகார மெய்யும் 2. இகர ஈறும் பொருந்தி வருவனவற்றுக்குத் தந்த பெயர்கள் 3. சேய், செவிலி, மகடூஉ, நங்கை, தையல் என்னும் பெயர்கள் 4. இவை போல்வன பிறவும் உயர்திணைப் பெண்பாற் பெயர்களாகும்.

1. பொருளால் வரும் பெயர்கள்:

சுற்றம் — தமள், நமள்

எண் — ஒருத்தி

Scanned by CamScanner

Scanned with CamScanner

2. இடத்தால் வரும் பெயர்கள் :

நாட்டால் வரும் பெயர்கள் — தீனச்சி, சோழிச்சி

ஊரால் வரும் பெயர்கள் — பட்டினத்தான், கருவூரான்

3. காலத்தால் வரும் பெயர்கள் :

ஆண்டால் வரும் பெயர் — ஐயாண்டினான், அகவையான்

பருவத்தால் வரும் பெயர் — வேலளான், சிறான்

4. உறுப்பால் வரும் பெயர்கள் :

தோளால் வரும் பெயர் — திண்தோளான், திண்தோளி

மார்பால் வரும் பெயர் — நெடுமார்பன், நெடுமார்பி

5. குணத்தால் வரும் பெயர்கள் :

அளவால் வரும் பெயர் — பெரியவன், சிறியவன்

அறிவால் வரும் பெயர் — புலமையாளன், கேள்விகாளி

6. தொழிலால் வரும் பெயர்கள் :

ஓதலால் வரும் பெயர் — ஓதுவான், பாடுவான்

ஈதலால் வரும் பெயர் — ஈவான், வள்ளி

7. இடைச்சொல்லால் வரும் பெயர்கள் :

சுட்டால் வரும் பெயர் — அவன், இவன், உவன்

வினாவால் வரும் பெயர் — எவன், ஏவன், யாவன்

உயர்திணைப் பலர்பால் பெயர்கள் :

"கிளைத்த கிளைமுதல் உற்றரப் பாற்றவும்
சின்னவன் பாற்றின் ஒற்புவும் பிறவும்
பல்லோர் பெயரின் பகுதி ஆகும்"

சூத்திரம் மேலாக குறிப்பிட்ட பெயர்களுள் 1. ஏதோ ஒன்றைப் பொருந்தி வரும் பெயர்கள் 2. கள் என்னும் சாற்றை இறுதியில் பொருந்தும் பெயர்கள் 3. இவை போல்வன பிறவும் உயர்திணைப் பலர்பால் பெயர்களாகும்.

1. பொருளால் வரும் பெயர்கள் :

சுற்றம் — தமர், நமர்

எண் — இருவர், மூவர்

2. இடத்தால் வரும் பெயர்கள் :

நாட்டால் வரும் பெயர் — சீனர், சோழியர்

ஊரால் வரும் பெயர் — பட்டினத்தார், கருவூரார்

3. காலத்தால் வரும் பெயர்கள் :

ஆண்டால் வரும் பெயர் — ஐயாண்டினர், மூவாண்டினர்

பருவத்தால் வரும் பெயர் — வேனிலார், பனியார்

4. உறுப்பால் வரும் பெயர்கள் :

தோளால் வரும் பெயர் — திண்தோளார், பெருந்தோளர்

மார்பால் வரும் பெயர் — வரைமார்பர், அகன்மார்பர்

5. குணத்தால் வரும் பெயர்கள் :

அளவால் வரும் பெயர் — பெரியர், சிறியர்

அறிவால் வரும் பெயர் — அறிஞர், புலவர்

6. தொழிலால் வரும் பெயர்கள் :

ஓதலால் வரும் பெயர் — ஓதுவார், பாடுவார்

ஈதலால் வரும் பெயர் — ஈவார், கொடையாளர்

Scanned by CamScanner

Scanned with CamScanner

7. கலைச்சொல்லான அடிப் பெயர்கள்:

சுட்டாக அடிப் பெயர் — அவர், இவர், உவர்

வினாவாக அடிப் பெயர் — எவர், யாவர்

அஃறிணை ஒன்றன்பால் பெயர்கள்:

"வினாச்சுட்டுடனும் வேறும் ஆகும் பொருள்
அறியுதற் சுட்டனை ஆகிடும்
ஒன்று என் ஏன் இன்னன ஒன்றன் பெயரே"

1. வினாவோடும் சுட்டோடும் சேர்ந்து வருகின்ற து ஈற்றுப் பெயர் 2. வினாவோடும் சுட்டோடும் சேராது வேறாகி வருகின்ற பொருள், இடம், காலம், சினை, குணம் தொழில் ஆகிய ஆறனையும் பொருந்தி வருகின்ற து ஈற்றுப்பெயர் 3. அடுக்குத் தொடரும் ஆயிடும் பொருந்திய து ஈற்றுப் பெயர் 4. ஒன்று என்று வருகின்ற எண்ணாகு பெயர். 5. இவை போன்று அமைகின்ற து ஈற்றுப் பெயர் ஆகிய அனைத்தும் அஃறிணைக்குரிய ஒன்றன்பால் பெயர்களாகும்.

அஃறிணைப் பலவின்பால் பெயர்கள்:

"முன்னர் அவ்வொடு வருவை அவ்வும்
சுட்டு இறு வவ்வும் கள் இறு மொழியும்
ஒன்று அல் எண்ணும் உள்ள இல்ல
பல்ல சில்ல உள பல சில
இன்னவும் பலவின் பெயர் ஆகும்மே"

முன்னர் கூறப்பட்ட வினாவோடும் சுட்டோடும் பொருள் முதல் ஆறோடும் சேர்ந்து வருகின்ற 1. அகர ஐகார ஈற்றுப் பெயர்கள் 2. அர ஈற்றுப் பெயர்கள்

Scanned by CamScanner
Scanned with CamScanner

3. அகர மெய்யீற்றுச் சுட்டுப் பெயர் 4. கள் என்னும் விகுதி உடைய பெயர்கள் 5. இரண்டு முதலிய எண்ணுப் பெயர்கள் 6. உள்ள, இல்ல, பல்ல, சில்ல, உள இல, பல, சில ஆகிய பெயர்கள் 7. இவற்றைப் போன்ற பிற பெயர்களும் அஃறிணை பன்மைப் பெயர்களாகும்.

1. அகர ஐகார ஈற்றுப் பெயர்கள்:

வினா — எவை, ஏவை, யாவை

சுட்டு — அவை, இவை, உவை

பொருள் — குழையவை, அகத்தவை

2. ~~[illegible]~~ அகர ஈற்றுப் பெயர்கள்:

பொருள், அகத்து, மேழ்த்து — சாரியை பெறாமல் வந்தன

பொருளன, அகத்தன, மேழ்த்தன — அன் சாரியை பெற்று வந்தன

3. அகர மெய் ஈற்றுச் சுட்டுப் பெயர்கள் — அவ், இவ், உவ்

4. கள் விகுதிப் பெயர்கள் — யானைகள், குதிரைகள்

5. எண்ணாகுபெயர்கள் — இரண்டு, மூன்று, பத்து, நூறு

6. அகர ஈற்றுப் பன்மைப் பெயர்கள் — உள்ள, இல்ல, பல்ல, சில்ல, இல, பல, சில

7. இன்னவும் என்றதனால் யா, பிற, மற்றைய போன்றவையும் பலவின்பால் பெயர்களாகும்

9 இருதிணைப் பொதுப்பெயர் அ விரவுப் பெயர் விளக்குக?

உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாக உள்ள பெயர்கள் இருதிணைப் பொதுப் பெயர்களாம். அவை தம்வாக்கிலும் தத்தம் பால் ஏற்கும் போதே திணையை அறிந்து கொள்ள முடியும்.

உயர்திணைக்குச் சிறந்த பெயர் அஃறிணைக்கண் விரவியும் அஃறிணைக்குச் சிறந்த பெயர் உயர்திணைக்கண் விரவியும் வருதலின் விரவுப் பெயர் ஆயிற்று.

Scanned by CamScanner

Scanned with CamScanner

"இயற்பெயர் நான்கே சினைப்பெயர் நான்கே
சினைமுதற் பெயர் ஒரு நான்கே முறை இரண்டே
தன்மை நான்கே முன்னிலை ஐந்தே
எல்லாம் தாம் தான் இன்னன பொதுப்பெயர்.

1. இயற் பெயரைப் பற்றி வரும் நான்காம் பெயர் 2. சினையைப் பற்றி வரும் நான்காம் பெயர் 3. சினையையும் முதலையும் தழுவி வரும் நான்காம் பெயர் 4. முறையைப் பற்றி வரும் இரண்டாம் பெயர் 5. தன்மை இடம் பற்றி வரும் பெயர் நான்கு 6. முன்னிலை இடம் பற்றி வரும் பெயர் ஐந்து 7. எல்லாம் 8. தாம் 9. தான் என்னும் ஒன்பது இருதிணைப் பெயர் 10. இவை போல்வன பிறவும் இருதிணைக்கும் உரிய பொதுப் பெயர்களாகும்

(எ.கா)

கதிரவன் உதித்தான் — உயர்திணை
கதிரவன் உதித்தது — அஃறிணை } இருதிணைப் பொதுப்பெயர்

தலை வாரினான் — ஆண்பால்
தலை வாரினாள் — பெண்பால் } இருபால் பொதுப்பெயர்

தன்மை, முன்னிலை, வினையால் அனையும் பெயர்கள் போன்றவை இன்னன என்றதனால் அமைவனவாம்.

—

10. ஆகுபெயர் என்றால் என்ன விளக்குக?

ஒன்றனது இயற்பெயர் அதனோடு தொடர்புடைய வேறொன்றுக்கு தொன்றுதொட்டு பெயராகி வருவது ஆகுபெயர் எனப்படும். ஆகுபெயர் 12 வகைப்படும் என நன்னூலார் உரைக்கின்றார்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

ஆகுபெயரின் இலக்கணம் :

"பொருள் முதல் ஆறோடு அளவை சொல் தானி
கருவி காரியம் கருத்தன் ஆதியுள்
ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதைத்
தொன்முறை உரைப்பன ஆகு பெயரே."

1. பொருள் 2. இடம் 3. காலம் 4. சினை 5. குணம் 6. தொழில் 7. அளவு 8. சொல் 9. தானி 10. கருவி 11. காரியம் 12. கருத்தா போன்ற பொருள்களின் ஒரு பொருளின் இயற்கைப் பெயரால் அப்பொருளுக்குத் தொடர்புடைய வேறொரு பொருளைத் தொன்மையாக வழங்கும் முறைமைப்படி உரைப்பன ஆகுபெயர்களாகும்.

1. பொருளாகுபெயர் — தாமரை முகம் — முதற்பொருளாகிய தாமரை என்பது சினையாகிய மலருக்கு ஆகியது.

2. இடவாகுபெயர் — அரங்கம் அதிர்ந்தது — அரங்கம் என்னும் இடப்பெயர் அங்கு இருக்கின்றவர்களுக்கு ஆகியது.

3. காலவாகுபெயர் — கார் அறுத்தான் — கார் (மழை) என்னும் காலப்பெயர் பயிருக்கு ஆகியது.

4. சினையாகுபெயர் — வெற்றிலை நட்டான் — இலையாகிய சினையின் பெயர் கொடிக்கு ஆகியது.

5. பண்பாகுபெயர் — கார் திரண்டது — கார் என்னும் நிறப்பண்புப் பெயர் மேகத்திற்கு ஆகியது.

6. தொழிலாகு பெயர் — வற்றலொடு உண்டான் — வற்றல் என்னும் தொழிற்பெயர் உணவுப்பொருளுக்கு ஆகியது.

7. அளவையாகு பெயர் — ஒன்றிரண்டு கொடு — ஒன்று, இரண்டு என எண்ணிற்கு ஆகியது.

8. சொல்லாகு பெயர் — தாயின் உரை கேட்டான் — உரை என்னும் சொல்லின் பெயர் ஆகியது.

9. தானியாகு பெயர் — கூழ் கொட்டான் — கூழ் என்பது அது பொருந்திய வற்றின் பாத்திரத்திற்கு ஆகியது.

10. கருவியாகு பெயர் — இது அலங்காரம் — அலங்காரம் என்னும் கருவியாகுபெயர் காரிய மாயிற்று.

Scanned by CamScanner
Scanned with CamScanner

11. காரியவாகுபெயர் — திருவாசகம் படி — வாசகம் என்னும் காரியவாகுபெயர் நூலுக்கு ஆகியது.

12. கருத்தாவாகுபெயர் — கம்பரைப் படி — கம்பர் என்னும் கருத்தாவின் பெயர் அதற்குக்கான நூலுக்கு ஆகியது.

—

வேற்றுமைகளையும் அதன் வகைகளையும் எடுத்துரைக்க?

வேற்றுமை என்பதற்கு வேறுபடுத்தல் என்பது பொருளாகும். இவ்வேற்றுமை உயர்திணை, அஃறிணை பெயர்களின் பின்னால் தோன்றும் தன்மை கொண்டது. இது எட்டு வகையாக பாகுபடுத்தப்பட்டுள்ளது.

வேற்றுமையின் இலக்கணம்:

"ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும் ஈறாய்ப் பொருள்
வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை."

தம்மை ஏற்றுக் கொள்வதற்குரிய எவ்வகைப்பட்ட பெயர்களுக்கும் இறுதியாக வரும் தன்மை கொண்டது. தன்னை ஏற்ற பெயர்ப் பொருளை வேறுபடுத்தி நிற்பது அவ்வேற்றுமை எட்டு வகைப்படும்.

வேற்றுமையின் பெயரும் முறையும்:

"பெயரே ஐ ஆல் கு இன் அது கண்
விளி என்று ஆகும் அவற்றின் பெயர் முறை"

1. பெயர் வேற்றுமை 2. ஐ 3. ஆல் 4. கு 5. இன் 6. அது 7. கண்
8. விளி என்னும் எட்டும் வேற்றுமை பெயர்களாகும்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

பெயர் வேற்றுமை:

இவ்வேற்றுமையை முதல் வேற்றுமை, எழுவாய் வேற்றுமை எனவும் கூறுவர். திரிபு இல்லாத வேற்றுமை உருபு கொள்ளாது. எனவே இது எழுவாய் வேற்றுமை எனப்படும்.

"அவற்றுள்
எழுவாய் உருபு திரிபில் பெயரே
வினை பெயர் வினாக்கொளல் அதன் பயன் நிலையே."

வினை, பெயர், வினா என்னும் மூன்றையும் கொண்டு முடியும்.

1. கண்ணன் வந்தான் – வந்தான் – தெரிநிலை வினை
2. கண்ணன் நல்லன் – நல்லன் – குறிப்பு வினை
3. கண்ணன் அவன் – அவன் – பெயர்
4. கண்ணன் யார்? – யார் – வினா

இரண்டாம் வேற்றுமை:

"இரண்டா வதன் உருபு ஐயே; அதன் பொருள்
ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்
ஒத்தல் உடைமை ஆதி ஆகும்."

இரண்டாம் வேற்றுமையின் உருபு ஐ என்பதாகும். அதன் பொருள் 1. ஆக்கப்படுதல் 2. அழிக்கப்படுதல் 3. அடையப்படுதல் 4. நீத்தல் 5. ஒத்தல் 6. உடைமை போன்றவை ஆகும்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

1. ஆக்கல் – வீட்டைக் கட்டினான்

2. அழித்தல் – குடத்தை உடைத்தான்

3. அடைதல் – ஊரை அடைந்தான்

4. நீத்தல் – அரசைத் துறந்தான்

5. ஒத்தல் – தாயினை ஒத்தான்

6. உடைமை – கல்வியை உடையான்.

மூன்றாம் வேற்றுமை :

மூன்றா வதன் உருபு ஆல் ஆன் ஒடு ஓடு
கருவி கருத்தா உடனிகழ்வு அதன் பொருள்

மூன்றாம் வேற்றுமையின் உருபு பெரும்பான்மை ஆல் என்றும் சிறுபான்மை ஆன், ஒடு ஓடு என்பனவும் ஆகும். இவ்வுருபுகள் தம்மை ஏற்ற பெயர்ப் பொருளைக் 1. கருவி 2. வினைமுதல் 3. உடனிகழ்ச்சி என மூவகையாய் வேறுபடுத்தும்.

1. வாளால் (ஆல்) வெட்டினான் (வாள் – கருவி)

2. இராமனால் இராவணன் வீழ்ந்தான் ;–

3. தோழனொடு எழுதினான் – உடனிகழ்ச்சிப் பொருள் :

நான்காம் வேற்றுமை :

இவ்வேற்றுமையைக் கொடைப் பொருள் வேற்றுமை என்றும் கூறுவர். இது உருபான் 'கு' வேற்றுமை என்றும் குறிக்கப்படும். பொருட்டு, நிமித்தம், ஆக என்பவற்றைச் சொல்லுருபுகளாகக் கூறுவர்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

நான்காம் வேற்றுமை இலக்கணம்:

"நான்கா வதற்கு உருபு ஆகும் குவ்வே
கொடை பகை நேர்ச்சி தகவு அது ஆதல்
பொருட்டு முறை ஆதியின் இதற்கு இது எனல் பொருளே"

நான்காம் வேற்றுமைக்கு உருபு 'கு' என்பது ஆகும். அது கொடை, பகை, நேர்ச்சி, தகவு, அதுவாதல், பொருட்டு, முறை போன்றவை தோன்றும்.

1. கொடை – அரசன் புலவர்க்குப் பொன் கொடுத்தான்
2. பகை – பிணிக்கு மருந்து
3. நேர்ச்சி – விளக்கிற்கு எண்ணெய்
4. தகவு – அரசர்க்குரிய மகுடம்
5. அதுவாதல் – ஆடைக்கு நூல்
6. பொருட்டு – கூலிக்கு வேலை
7. முறை – மாதவிக்கு மகள் மணிமேகலை

ஐந்தாம் வேற்றுமை:

இவ்வேற்றுமையை இன்னின் நீங்கல் வேற்றுமை என்றும் கூறுவர். 'உருபின் காரணமாக இன் வேற்றுமை எனவும் பெறும்.

ஐந்தாம் வேற்றுமையின் இலக்கணம்:

"ஐந்தா வதன் உருபு இல்லும் இன்னும்
நீங்கல் ஒப்பு எல்லை ஏதுப் பொருளே"

Scanned by CamScanner
Scanned with CamScanner

ஐந்தாம் வேற்றுமையின் உருபாவன இல்லும், இன்னும் ஆம். அவ்வுருபுகள் தம்மை ஏற்ற பெயர்ப் பொருளை 1. நீங்கல் 2. ஒப்பு 3. எல்லை 4. ஏது ஆகிய பொருள்களாக வேற்றுமை செய்யும்.

1. நீங்கல் — மலையின் வீழ் அருவி

2. ஒப்பு — காக்கையின் கரிது களம்பழம்

3. எல்லை — கருவூரின் கிழக்குத் தொண்டி

4. ஏது — அறிவிற் பெரியன்.

ஆறாம் வேற்றுமை:

இவ்வேற்றுமையை உடைமை வேற்றுமை என்றழைப்பர். அது கிழமை என்றும் குறிக்கப்பெறும். இது 1. தற்கிழமை 2. பிறிதின்கிழமை என இருவகைப்படும்.

ஆறாம் வேற்றுமையின் இலக்கணம்:

"ஆறன் ஒருமைக்கு அதுவும் ஆதுவும்
பன்மைக்கு அவ்வும் உருபாம் பண்பு உறுப்பு
ஒன்றன் கூட்டம் ஆகும் தற்கிழமையும்
பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே

ஆறாம் வேற்றுமையின் ஒருமைக்கு அதுவும் ஆதுவும் உருபுகளாகும். பன்மைக்கு 'அ' என்பது உருபாகும். இவை 1. பண்பு 2. உறுப்பு 3. ஒன்றன் கூட்டம் 4. பலவின் கூட்டம் 5. திரிபின் ஆக்கம் ஆகிய ஐந்து தற்கிழமைப் பொருளையும் அவையல்லாத பிறிதின் கிழமைப் பொருளையும் உடையனவாகும்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

தற்கிழமை (5)

1. சாத்தனது கல்வி — செயற்கைப் பண்பு
2. சாத்தனது நரை — இயற்கைப் பண்பு
3. சாத்தனது கை — உறுப்பு
4. நெல்லது கூட்டம் — ஓர் இனத்தின் கூட்டம்
5. பறவைகளது கூட்டம் — பல சாதிப் பறவைகளின் கூட்டம்
6. நெல்லினது பொரி — நெல் பொரியாகத் திரிபடைதல்

பிறிதின் கிழமை (3)

1. சாத்தனது பசு — பொருட் பிறிதின் கிழமை
2. பாரியது பறம்பு — இடப் பிறிதின் கிழமை
3. அவனது திருநாள் — காலப் பிறிதின் கிழமை

ஆறாம் வேற்றுமைக்குரிய சொல்லுருபு உடைய என்பதாகும்.

ஏழாம் வேற்றுமை :

இவ்வேற்றுமையை இட வேற்றுமை எனக் கூறுவர். பல உருபுகள் இருந்தாலும் கண் என்பது சிறப்புறப் பேசப்படுகிறது. இது தற்கிழமை, பிறிதின் கிழமை என இரண்டாக நிற்கும்.

இலக்கணம் !

"ஏழன் உருபுகள் ஆதி ஆகிப்
பொருள் முதல் ஆறும் ஓர் இரு கிழமையின்
இடனாய் நிற்றல் இதன் பொருள் என்ப"

Scanned by CamScanner
Scanned with CamScanner

ஏழாம் வேற்றுமையின் உருபு கண் முதற் பிறவும் ஆகும். 1. பொருள், இடம், காலம், சினை குணம், தொழில் என அனைத்தும் வரும் 2. ஆறாம் வேற்றுமைக்குச் சொல்லப்பட்ட இரண்டு கிழமைப் பொருள்களுக்கு இடமாய் நிற்கும்.

ஏழாம் வேற்றுமையின் உருபுகள் : (1+27=28)

"கண் கால் கடை இடை தலை வாய் திசை வயின்
முன் சார் வலம் இடம் மேல் கீழ் புடை முதல்
பின் பாடு அளை தேம் உழை வழி உழி உளி
உள் அகம் புறம் இல் இடப்பொருள் உருபே"

என்ற நூற்பாவில் குறிப்பிட்ட இருபத்தெட்டு உருபுகளுடன் கண் என்னும் உருபைக் கூட்டி உரைக்க அவ் இருபத்தெட்டும் ஏழாம் வேற்றுமை உருபுகளாகும்.

எட்டாம் வேற்றுமை:

இவ்வேற்றுமையை விளி வேற்றுமை என்பர். இது 1. அண்மை விளி 2. சேய்மை விளி என இருவகைப்படும்.

இலக்கணம்:

"எட்டன் உருபே எய்து பெயர் ஈற்றின்
திரிபு குன்றல் மிகுதல் இயல்பு அயல்
திரிபும் ஆம் பொருள் படர்க்கை யோரைத்
தன்முகம் ஆகத் தான் அழைப் பதுவே."

எட்டாம் வேற்றுமையின் உருபுகளாவன, விளியேற்ற பெயரின் ஈற்றெழுத்து 1. திரிதல் கெடுதல் 3. மிகுதல் 4. இயல்பாதல் 5. ஈற்றயல் எழுத்துத் திரிதல் அவற்றின் பொருள் படர்க்கை இடத்துப் பொருளைத் தன்முகமாக எதிர்முகமாக அழைத்தலாகும்.

Scanned by CamScanner

Scanned with CamScanner

(கு.கா)

அன்னை – அன்னாய்

மக்கள் – மக்காள்

தந்தை – தந்தாய்

விளி ஏற்கும் பெயர்கள் யாவை விளக்குக?

"இஉ ஊவோடு ஐ ஓ ன ள ர ல
ய வ் ஈற்று உயர்திணை ஓரள் இவற்றொடு
ணஃகான் ஆ ஈறு ஆகும் பொதுப்பெயர்
ஞ ந ம ய அனைத்து ஈற்று அஃறிணை விளிப்பன"

உயிர் எழுத்துக்களையும் மெய்யெழுத்துக்களையும் ஈறாக உடைய 1. உயர்திணைப்பெயர்கள் 2. பொதுப்பெயர்கள் 3. அஃறிணைப் பெயர்கள் ஆகியன விளி ஏற்பன.

இ, உ, ஊ, ஐ, ஓ என்னும் ஐந்து உயிர் எழுத்துக்களையும் ன, ள, ர, ல, ய என்னும் ஐந்து மெய்யெழுத்துக்களையும் ஈறாக உடைய உயர்திணைப் பெயர்கள் விளி ஏற்பன.

நம்பி, வேந்து, ஆடூ, விடலை, கோ — உயிரீறு

ஐயன், தேவர், வள்ளல், தோன்றல், சேய் — மெய்யீறு

மொழிக்கு இறுதியாக வரும் எழுத்துக்கள் 24. அவற்றுள் 'ஞகரம், நகரம்' ஆகிய மெய்யெழுத்துக்கள் மொழிக்கு ஈறாகக் கொள் விலக்கப்பட்ட ஏனைய உயிர் நீங்கலாகிய 21 எழுத்துக்களை ஈறாக உடைய அஃறிணை பெயர்களும் விளி ஏற்பனவாகும்.

மக, புறா, கிளி, தீ, ஒடு, பூ, சே, நாரை, கோ — உயிரீறு (9)

மான், கராம், அலவன், நாய், தேர், குயில், தெவ், மூழ், வண்டு — மெய்யீறு (10)

Scanned by CamScanner

Scanned with CamScanner

வினா நிற்கும் பெயர்களை குறிப்பிடுக?

"எவ்வாறு வினாச் சுட்டு உறழ்வன
யாவது தாம் தான் இன்னன வினாவே"

எ என்னும் எழுத்தையும், எ, ஏ, யா என்னும் வினா எழுத்துக்களையும், அ, இ, உ என்னும் சுட்டெழுத்துக்களையும் பிற எழுத்துக்களையும், ஆகு, எங்கு, நீங்களை முதலாகவும் கொண்ட மெய்யீற்று உயர்திணைப் பெயர்கள் 4. யாவை 5. யாது என்னும் இணைப்பெழுத்துக்களை முதலாக உடைய அஃறிணை பெயர்கள் 6. தாம் 7. தான் என்ற பெயர்கள் 8. இவற்றைப் போன்ற பிற பெயர்கள் வினா நிற்கும் பெயர்கள் ஆகும்.

—

உருபு மயக்கம் விளக்குக?

ஒரு வேற்றுமைப் பொருளை அதற்குரிய வேற்றுமை உருபால் கூறாமல் மற்றொரு வேற்றுமை உருபால் கூறுவதே வேற்றுமை மயக்கம் (அ) உருபு மயக்கம் ஆகும்.

வேற்றுமை உருபுகள் மயங்குதல்:

"யாதன் உருபின் கூறிற்று ஆயினும்
பொருள்சென் மருங்கின் வேற்றுமை சாரும்"

எந்த ஒரு வேற்றுமை உருபால் சொல்லப்பட்டாலும் அந்த உருபு சென்ற வழியே பொருள் செல்லாது பொருள் சென்ற வழியே அவ்வேற்றுமை உருபு செல்லும்.

பொருளுக்கு ஏற்ற உருபு நில்லாமல் வேறு ஒன்றும் பொருள் மயங்கி நிற்கும்.

எ.கா:

1. நாய் வேகமாக நக்கி வீழ்ந்து சென்றான்
2. கிணையாள் நாணாற் கிழித்து மாலைக் கின்ற முனை

Scanned by CamScanner
Scanned with CamScanner

## அலகு - 5

## உரியியல்

உரிச்சொல்லின் இலக்கணத்தையும், உயிர்பொருள்களையும் தொல்காப்பிய வழி நிறுவுக?

தொல்காப்பியர் கூறும் நான்கு வகைச் சொற்களுள், செய்யுளுக்கு மட்டுமே உரிமைக் கொண்டு வருவது உரிச்சொல் ஆகும். இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருள் உணர்த்துவதற்கு ஏற்றாற் போல உரியன ஆதலின் உரிச்சொல் என்னும் பெயர் பெற்றது.

உரிச்சொல்லின் பொது இலக்கணம் :

"பல்வகைப் பண்பும் பகர்பெயர் ஆகி
ஒருகுணம் பலகுணம் தழுவிப் பெயர்வினை
ஒருவா செய்யுட்கு உரியன உரிச்சொல்"

திணையும் பொதுவும் பொருளின் பண்புகளை உணர்த்தும் பெயராக வரும். ஒரு குணத்தை உணர்த்தும் பல சொல்லாக வரும். பல குணத்தை உணர்த்தும் ஒரு சொல்லாக வரும். பெயர், வினைகளை விட்டு நீங்காமல் நிற்கும். செய்யுளுக்கு உரியவையாய் வரும். இவ்வைந்து இலக்கணத்தை கொண்டு வருவதே உரிச்சொல் ஆகும்.

பண்புகள் குணப்பண்பு, தொழிற்பண்பு ஆகிய இரண்டனுள் அடங்கும். அவ்விரண்டும் அவை இசை, குறிப்பு, பண்பு எனப் பல்வேறு வகைப்படும். இசை - ஓசை குறிப்பு - மனத்தால் குறித்து உணரப்படுவது; பண்பு - பொறியால் உணரப்படும் குணமாகும்.

பண்பின் இலக்கணம் :

"உயிர் உயிர் அல்லதாம் பொருட்குணம் பண்பே"

Scanned by CamScanner
Scanned with CamScanner

உயிர் உடையது, உயிர் உடையது அல்லாதது என்றும் இவற்றையுள் அடங்குகின்ற உலகத்துப் பொருள்களுடைய இலக்கணம் பண்பாகும்.

உயிர்ப் பொருள்:

"மெய்ந்நா மூக்கு நாட்டம் செவியின்
ஒன்று முதலாக் கீழ்க் கொண்டு மேல் உணர்தலின்
ஓரறிவு ஆதியா உயிர் ஐந்து ஆகும்."

உயிர்கள் உடம்பு, நாக்கு, மூக்கு, கண், செவி ஆகிய ஐந்து பொறிகளினாலும் ஐந்து புலன்களையும் அறியும். மெய்யினால் உணரும் ஒரு உணர்ச்சி முதலாகச் சுவை, நாற்றம், ஒளி, ஓசை என்று மேல் உள்ள புலன்களை ஒவ்வொன்றாக அறியும்.

உயிர்ப்பொருள்கள் அனைத்தும் புலன் உணர்வை அடிப்படையாகக் கொண்டு ஓரறிவு முதலாக ஐந்தறிவு வரை வகைப்படுத்தப்பட்டுள்ளன.

ஓரறிவு உயிர்கள்:

'புல் மரம் முதல உற்று அறியும் ஓர் அறிவு உயிர்.'

புல், மரம் முதலியவை மெய்யினால் தொட்டறியும் அறிவுடைய ஓரறிவு உயிர்களாகும்.

ஈரறிவு உயிர்கள்:

"முரள் நந்து ஆதிய அதனொடு நா ஈர் அறிவு உயிர்"

சிப்பி, சங்கு முதலியவை மேற்கூறப்பட்ட தொடு உணர்வோடு அவற்றின் நாவால் சுவையையும் அறிகின்ற இரண்டறிவு உடைய உயிர்களாகும்.

Scanned by CamScanner

Scanned with CamScanner

மூவறிவு உயிர்கள்:

'சிதல் எறும்பு அவற்றொடு அறிவின் மூவறிவு உயிர்"

சிதல் (கறையான்), எறும்பு போன்றவை முற்கூறப்பட்ட இரண்டு அறிவுடனே மூக்கினால் நாற்றத்தை அறியும் மூன்று அறிவு உடைய உயிர்களாகும்.

நான்கறிவு உயிர்கள்:

"தும்பி வண்டு அதற்கண் அறிவின்நான் அறிவுஉயிர்"

தும்பி, வண்டு போன்றவை முற்கூறப்பட்ட மூன்று அறிவுடனே கண்ணால் உருவத்தை அறிகின்ற நான்கு அறிவு உடைய உயிர்களாகும்.

ஐந்தறிவு உயிர்கள்:

"வானவர் மக்கள் நரகர் விலங்குபுள்
அதி செவி அறிவோடு ஐயறிவு உயிரே"

தேவர், மக்கள், நரகர், விலங்குகள், பறவைகள் போன்றவை முற்கூறப்பட்ட நான்கு அறிவுடனே செவியால் ஓசையை அறியும் ஐந்து அறிவு உடைய உயிர்களாகு

உயிர் உடையன அல்லாத பொருள்கள்:

"உயிர்இயல் அல்உயிர் ஒன்றும் இல்லை
உடல் முதல் அனைத்தும் உயிர்இல் பொருளே

அறிவின் ஆதாரமாகத் திகழும் உயிர் ஒன்று இல்லாத உடம்பு முதலாகிய உலகத்துப் பொருள்கள் எல்லாம் உயிர் உடையன அல்லாத பொருள்களாம்.

Scanned by CamScanner
Scanned with CamScanner

உயிர்ப் பொருள்களின் குணத்தினையும், தொழிற்பண்பினையும் விளக்குக?

உயிர்ப் பொருள்களின் குணம்:

"அறிவு அருள் ஆசை அச்சம் மானம்
நிறை பொறை ஓர்ப்பு கடைப்பிடி மையல்
நினைவு வெறுப்பு உவப்பு இரக்கம் நாண் வெகுளி
துணிவு அழுக்காறு அன்பு எளிமை எய்த்தல்
துன்பம் இன்பம் இளமை மூப்பு இகல்
வென்றி பொச்சாப்பு ஊக்கம் மறம் மதம்
மறவி இனைய உடல்கொள் உயிர்க்குணம்"

அறிவு, அருள், ஆசை, அச்சம், மானம், நிறை, பொறை, ஓர்ப்பு, கடைப்பிடி, மையல், நினைவு, வெறுப்பு, உவப்பு, இரக்கம், நாண், வெகுளி, துணிவு, அழுக்காறு, அன்பு, எளிமை, எய்த்தல், துன்பம், இன்பம், இளமை, மூப்பு, இகல், வென்றி, பொச்சாப்பு, ஊக்கம், மறம், மதம், மறவி என 32 பண்புகளை உயிர்ப் பொருள் பெற்று வரும்.

உயிர்ப் பொருள்களின் தொழிற்பண்பு:

உயிர்ப்பொருள்கள் அனுபவித்தல், தூங்குதல், வணங்குதல், அணிதல், செலுத்துதல் என்ற தொழிற்பண்புகளைக் கொண்டிருக்கும்.

"துய்த்தல் துஞ்சல் தொழுதல் அணிதல்
உய்த்தல் ஆதி உடலுயிர்த் தொழிலே"

Scanned by CamScanner
Scanned with CamScanner

ஒருகுணம் தழுவிய உரிச்சொற்கள், பலகுணம் தழுவிய உரிச்சொற்கள் என்பன விளக்குக?

ஒருகுணம் தழுவிய உரிச்சொற்கள்:

சால, உறு, தவ, நனி, கூர், கழி என்ற உரிச்சொற்கள் மிகுதி என்ற குணத்தை உணர்த்தும் சொற்களாகும்.

சால – சாலப்பெரியர்
உறு – உறுபெயர்
தவ – தவப்பல
நனி – நனிபேதை
கூர் – நோய்கூர
கழி – கழிகண்ணோட்டம்

"சால உறு தவ நனிகூர் கழி மிகல்"

பலகுணம் தழுவிய உரிச்சொற்கள்:

"கடியென் கிளவி காப்பே கூர்மை
விரைவே விளக்கம் அச்சம் சிறப்பே
விரைவே மிகுதி புதுமை ஆர்த்தல்
வரைவே மன்றல் கரிப்பின் ஆகும்."

கடி என்னும் உரிச்சொல் காவல், கூர்மை, வாசனை விளக்கம், பயம், சிறப்பு, மிகுதி, புதுமை, ஆர்த்தல், நீக்கல், திருமணம், கரிப்பு என 13 குணங்களில் வரும்.

எ.கா:
காவல் – கடிநகர், விரைவு – கடிசென்றான், கூர்மை – கடிவேல், மிகுதி – கடிநாற்றம், மணம் – கடிமலர், புதுமை – கடிமணம், விளக்கம் – கடிமார்பன், ஆர்த்தல் – கடிமுரசு, அச்சம் – கடிபேய், வரைவு – கடிந்தொழுகேனினை, சிறப்பு – கடியரண், மன்றல் – கடிவினை, கரிப்பு – கடிமிளகு.

Scanned by CamScanner

Scanned with CamScanner

ஒரு பொருளைக் குறித்த உரிச்சொல்:

"மாற்றம் நுவற்சி செப்பு உரை கரை நொடி இசை
கூற்றுப் புகறல் மொழி கிளவி விளம்பு அறை
பாட்டுப் பகர்ச்சி இயம்பல் சொல்லே.

மாற்றம் – வாய்மாற்றம், நுவற்சி – அறிந்து நுவல், செப்பு – செப்புகின்றேன்
உரை – உரைப்பவை, கரை – கரைக்கின்றனா, நொடி – இனிமை நொடியும்
இசை – இசையமைப்புக்கு, கூற்று – நாவின் கூறு, புகறல் – புகன்ற அன்பியும்
மொழி – கண்டது மொழிகோ, கிளவி – கிளக்கும் பண்ணு, விளம்பு – விளம்பினோர்புல
அறை – அறைகின்ற சொல்லே, பாட்டு – அறம் பாடியே, பகர்ச்சி – பகர்ந்தனர்
இயம்பல் – இயம்புகின்றேன்.

மேற்கண்ட 16 சொற்களும் சொல் என்னும் ஒரு பொருளைக் குறித்த உரிச்சொற்களாகும்

---